திருமண நினைவு வெளியீடு

ஓம்:

# ஏழினி.

ஆக்கியோர்

புலவர். பாண்டியனார்.

வெளியிட்டோர்

நெற்குப்பை

சா. பழ. மு. சா. பழனியப்பச் செட்டியார்.

திருவள்ளுவர் ஆண்டு 1981.

# நன்றியுரை.

இக்கால விளைஞர்கள் திருமணங்களை யெழிலுற வியற்று கின்றனர். மணமக்களுக்கு நன்னூற் பரிசுகள் நல்குநரும், வாழ்த்துரைகள் வழங்குநரும், மணமக்கள் தம் மணவினை நினைவாக நூல்கள் வெளியிடுநருமாக வுளர். இந்நிகழ்ச்சிகளிற் பரிசு வழங்கல்—வாழ்த்துரை வழங்கல்களில் யான் பங்கு கொள்வேன்.

நன்று, நன்று. எனது திருமண நினைவு வெளியீடாக ஒரு நூல் இயற்றுவித்து வெளியிடுவேனென முடிபு கொள்வேன். யாரால் எத்தகைய நூல் எழுதுவிக்கலாமென அறிஞர் பலரையும் உசாவுவேன். பலரும் மலை விளக்காய்ச் சிலையெழுத்தாய்க் கலை மணியாய் நிலைபெறத்தக்க நூலாதல் வேண்டும்; பழுதில் புலவரால் எழுதுவிக்கவென்று ஒருபடித்தாக மொழிவர். யானறிந்த புலவரிலே யாவரிதற் குடன்படுவாரெனக் கருதலானேன். சட்டென்று நினைவிற்கு வந்தது ஆசிரியர்—புலவர்—உயர்திரு பாண்டியனாரவர்கள் திருப்பேர். அவர்களை யென் னிளம்பருவ முதலே யானறிவேன். அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளரும், எனது குலச் செல்வரும், ஊரவரும், உறவினருமான புலவர்—திரு. லெ. ப. கரு. இராமநாதச் செட்டியாரவர்கள், என் அருமந்த அண்ணன் முதலானவர் கட்குத் தமிழறிவுறுத்தியவர்கள். அத் தொடர்பு கொண்டு யான் என தெண்ணத்தை இலங்கையிலுள்ள அவர்கட்கு அஞ்சல் வாயிலாகத் தெரிவித்தேன். ஒரு சில நாட்களுக்குள் "எழினி" யெனப் பெயரிய இந்நூற்படி யெனக்குக் கிடைத்தது.

இவ்வரிய ஆராய்ச்சி நூல் ஓரேழு நாட்களிலே இயற்றப் பெற்றமையை அருகிருந்தார் வழியறிந்து இறும்பூ தெய்தினேன். இந்நூலாசிரியரின் அளப்பரிய புலமையை யளத்தற்கு இந்நூல் ஒரு சிறு எடுத்துக்காட்டா மன்றோ? இங்ஙனமாகக் கைம்மாறு ஒரு சிறிதுங் கருதாமலும், காலந் தாழ்க்காமலும் என தெண்ணத்தை முற்றுவித்த ஆசிரியர்—புலவர்.

பாண்டியனுரைவர்கட்கு எனது முழுமனதோடுங் கூடின நன்றி யறிதலுரிய தாக.

மேலும் ஒன்று. என் அனைய தமிழ் இளைஞர்களும் தத்தம் திருமண நினைவு வெளியீடாக இத்தகைய நூல்கள் எழுதுவித்து வெளியிடல் வேண்டுமென்பது என் கருத்து. கைம்மாறு கருதாப் புலவர் பெருமக்கள் பலர் உளர். அன்றியும் பல்கலைச் செல்வரும், நூல்கள் யாத்தலையே பொழுது போக்காக வுடையவரும் எளிமை யினிமை முதலான பண்பமைந்தவரும், எதிர் நன்றி கருதா வேந்தலும், அரிய தம் நூல்கள் வெளிவருதலையே தமக் குரிய வூதியமாகக் கருதுபவருமான புலவர். பாண்டியனுரைவர் களும் உளர். வேறு பலமொழி யறிஞர் பலரு முளர். ஆதலால் இன்னோரால் முறையே பழந்தமிழ்ப் பெரு நூல்களைக் கொண்டு நம் அரசர், புலவர், வீரர் வரலாறுகள் எழுதுவித்தும், இன்றி யமையாப் பிறமொழி நூல்களை மொழிபெயர்ப்பித்தும் வெளி யிடலாம். இவ்வகையில் இளைஞர் முயல வேண்டுகிறேன்.

இன்னும் ஒன்று. இக்கால இந்நாடு கண்டிராத தீவிய—செவ் விய—தனித்தமிழ் நடை நூலை அகவழகுக் கேற்பப் புறவழகும் அமையச் செவ்வியின் விரைந்து அச்சிட்டுத் தந்த திருச்சிராப் பள்ளி "கல்யாண் அச்சுக்கூட" வுரிமையாளர், தொழிலாளர் முதலானவர்கட்கும் எனது நன்றி யுரியதாக.

அவ்வப்போது அச்சகத்தார் அனுப்பிய அச்சுப்படிகளை யுடனுக்குடன் ஒப்பு நோக்கித் தந்த எனது தமிழாசிரியர் உயர்திரு. மீ. கந்தசாமிப் புலவரவர்கட்கும் எனது நன்றி யுரித்தாகுக.

வாழ்க தமிழ்.

நெற்குப்பை, இங்ஙனம்,

1950. சா. பழ. மு. சா. பழனியப்பன்.

ஓம்

# முன்னுரை.

இது தலையெழுவள்ளல்களு ளொருவனும் ஔவையார், பரணர், பெருஞ்சித்திரனர், பொன்முடியார் முதலிய நல்லிசைப் புலவர் பலராற் பாடப்பெற்ற பாட்டுடைத்தலைவனும் இற்றைக்குமுன் னீராயிரம் யாண்டளவை யடுத்து வாழ்ந்த தொல்லோனுமாகிய அதியமானெடுமானஞ்சி யெனவழங்கும் எழினி யென்பவன் வரலாற்றை விளக்கிப் புனைந்துரை விரவச் செய்யப் பெற்ற வுரைச்செய்யுள்.

எனவே யிது புனைந்துரையிடையிட்ட கட்டுரைச்செய்யுளாகும்.

எழினி மரபு; எழினி மாண்பு; எழினி யிறக்கிழத்தியார்; எழினிசேயெழினி யென நாற்கூறுபடுத்துரைத் தொருவாறு முடிக்கப்பட்டுள்ளது. இது முதலிய பொருளாற் பெயர் பெற்றது.

நெற்குப்பை சா.பழ மு.சா. பழனியப்பச் செட்டியாரென்பவர் தந்திருமண விழாவிற் குறுப்பாக "யாதானு மொரு சிறு நூல் ஞ்பிற்றி வெளியீடு செய்வான் கருதுகின்றேன்; அன்னதொன்று செய்தருளதாயிற் றருக" வெனக்கேட்டனர்.

அவ்வன்பர் வேண்டுகோளை மறுக்க மாட்டாது அச்செல்வ மைந்தரது திருமணவிழாவுக்கு மவரது தமிழார்வத்துக்கு மியைய விச் சிறு கட்டுரை யெம்மால் விரைந்து செய்து தரப்பெற்றது.

பழனியப்பச் செட்டியார் தொல்பெருங்குடித் தமிழ்வணிக மரபினர்; நன்பொருட் செல்வர்; இளமையிலேயே அடக்க மொழுக்க முதலிய இனிய நற்பண்புக ளமையப் பெற்றவர். தமிழ்ப் புலமையின்பாலுந் தமிழ்ப் புலவர்பாலு மார்வமிகுதி குடையவர்; இவர் சிறந்த தமிழ்ப் புலவர்களிடம் சிறந்த தமிழ்ப் பனுவல்களை வரன்முறையாற் கற்று வருகின்றனர்; அன்ன வியைபு பற்றி யெம்பா லாசிரியக்கிழமை மேலிட்டுக்கொண்டு

பேரன்பு வைத் தொழுகுவர்; இவர் இதுகாலை மருதையம் பேரூரிற் பள்ளி யிற்றுத் தேர்ச்சி வென்றி யெய்தியுள்ளார்.

இன்னோரன்ன நன்னலமெய்திய இளைஞர் பனையப்பனார் தம் மனைப் பொறுப்புக்கள் பற்றிய கவலைக் கிடனின்றிக் கல்விக் கண் முனைந்து நின்று மேம்பாடுற்று வளர்தற்கு வாயிலாயிருப்பவர் தம்மருமைத் தமக்கை கணவனார், நெற்குப்பைத் திரு. சுப. சுப்பிரமணியச் செட்டியாராவர்.

பனையப்பனார் தந்திருவன்ன வாழ்க்கைத் துணைவியொடுஞ் செல்வமக்களொடுங் குறைவின்றிப் பெருகித் தஞ்சுற்ற முதலிய பலர்க்கும் பேருதியமாகி யிசை யெழ வசையொழிய விறைவன் றிருவருள் வழி நின்று வழி வழி நீடு வாழ்வாராகுக.

ஈழம்.
குறுவற்றைத் தோட்டம்,
கொல்லம்யாண்டு, 1123,
மான்றலைத் திங்கள
வைகல், 28.

இங்ஙனம்,
புலவர். பாண்டியனார்.

ஓம் :

# எழினி.

இன்றினூங்கு ஏறக்குறைய ஈராயிரம் யாண்டளவிலே எழினியென வியற்பெயருடைய பாட்டுடைத்தலைவர் பலர் வாழ்ந்தனர்.

அவருட் சிறப்புடைய அதியமா னெடுமா னஞ்சி யென்பவனே இக்கட்டுரைத் தலைவனாகிய எழினியாவன்.

இவற்கு எழினியெனவும் அஞ்சியெனவும் வழங்கு மிருபெயரு மியற் பெயரெனப்படும்.

அதியமானென்பது குடிப் பெயர். நெடுமானென்பது சிறப்புப் பெயர்.

தோற்றம், ஆற்றல், அறிவு, புகழென்பனவற்றால் வீறுகோளுடையவனென்பது நெடுமானென்னுஞ் சொற்பொருள். நெடுமை வீறுகோள்.

நெடுமானென்பதும் நெடியோனென்பது மொன்று. வீறு, பிறர்க்கில்லாத பெருமை.

## எழினி மரபு.

“ஆர்கலி நறவி னதியர் கோமான்” (புறம் 91) எனவும் “மதியேர் வெண்குடை யதியர் கோமான்” (புறம் 392) எனவும், அதியமா னெடுமா னஞ்சியெனவும், அதியமான் பொகுட் டெழினியெனவும் வழங்குமாற்றான் அதியமான்

மரபென வொரு மரபு பண்டைநான்று மேம்பாடுற்று விளங்கினமை புலனாகும்.

சேரன் சேரமான்; மலையன் மலையமான்; தொண்டையன் தொண்டைமா னென்றாற்போல அதியன் அதியமானென வழங்கும்.

இவ்விரண்டனையும் அதிகன் அதிகமானெனவும் வழங்குப. அதியன் மரபினர் அதியர்.

நாகனென்னு மாண்பாற்சொற்கு நாகையென்பது பெண்பாற் சொல்லாதல் போல அதியன் அதிகனென வழங்கு மாண்பாற் சொற்கு அதியை; அதிகை என்பன பெண்பாற் சொல்லாதல் வேண்டும்.

இனி, "அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும் ... " என்று தொடங்கும் செய்யுளை நோக்குக: "...நீரக விருக்கை யாழி சூட்டிய, தொன்னிலை மரபினின் முன்னோர் போல, வீகையங் கழற்கா லிரும்பனம் புடையல் ..................வழுவின் றெய்தியும்............" (புறம் 99) என ஔவையார் நெடுமா னஞ்சியைப் பாராட்டுமிடத்தே அவற்கு மவன் முன்னோர்க்கும் பனமாலை யுரிமை கூறப்படுவது கொண்டு அதியரைச் சேர மன்னர்களி னுறவினரெனக் கருதுவாரு முளர். (நற்றிணை பாடப்பட்டோர் வரலாறு. புறநானூறு பாடப்பட்டோர் வரலாறு. புறநானூற்றுரை புறம் 99.)

அங்ஙனம் வெளிப்படப் புலவர் யாரும் பாடிற்றிலர். அஃதுண்மையாயிற் புலவர் யாரேனும் யாண்டேனும் நெடுமானைச் சேரர் குடிப்பாற்படுத வெடுத்தோதிப் புகழாதிரார்.

அன்றியுந் தம்மரபுக் குரிய பன மாலையை நின் முன்னோர்போல வுடையையென அதற்கவன் முன்னோரை

யொப்புமை காட்டல் வேண்டா. ஒரு பாண்டியனைச் சுட்டி வேப்பந்தாருடையை யெனக் கூறலே மரபன்றி நின் முன்னோர்போல வேப்பந்தாருடையை யென்றாற் போலக் கூறு மரபி யாண்டு மின்றே.

அதனால் அக்கூற்றுத் தானே பனமாலை அதியர் மரபுக் குரிய அடையாள மாலை யன்றென்பதற்குச் சான்றாகும்.

அன்றியும் பனமாலையே யன்றிச் சேரர்க் குரிய விற் கொடி முதலியவற்று ளொன்று மதியர்க்குக் கூறப்படாமை நினைக்கற்பாலது.

கூடல், உறந்தை, வஞ்சியென்றாற் போலும் அகனாட்டி யாற்றங்கரை மூதூருங் கொற்கை, தொண்டி, புகாரென் றாற்போலுங் கடற்கரைத் துறைமுகமும் அதியர்க் கிலலை யாதலால் அதியர் நெடுமுடியும் வெண்குடையுஞ் செங் கோலு முயர்கொடியும் யாளியணையு மென்றிவ் வடையாள மைந்துங் கொளத்தகு மன்னுரிமை யுடைய கொற்றவ ரல்ல ரென்பது தெற்றெனப் பெறப்படும். சேரமான்கள் கொற்றவர்.

தொண்டைமான் கொற்றவனாதற்கு முறையுடைய னல்ல னாயினும் பாலாற்றங் கரைக் காஞ்சியம் பேரூரும் நாகர் பட்டினமு முடைமை யானே கொற்றவனாகி முடி முதலி யன கோடற் குரிமை யெய்தினான். இங்ஙன மாகு மன்னர் “மன்பெறு மரபி னேனோர்.”

“மதியேர் வெண்குடை யதியர் கோமான்” எனக் குறுநில மன்னராகிய அதியர்க்கு வெண்குடை கூறுதலின்

மன்னுரிமை யின்றியேயு மதியர் தம் மாற்றன் மிகுதி தோன்ற வெண்குடை கொண்டா ரென்பது பெறப்படும்.

மேலும் "வழுவில் வன்கை மழவர் பெரும" (புறம் 90.) வெனவும் "ஒளிறிலங்கு நெடுவேன் மழவர் பெருமக" (புறம் 88.) னெனவும் அதியமானை மழவரினத்தைச் சார்ந் தவனெனப் புலப்படக் கூறு நிற்பவு மவனைச் சேரமாற் குறவின னென்ப தெங்ஙன மமையும்?

நெடுமா னஞ்சியின் முன்னோர்களாகிய அதியமான்கள் சேரமான்களின் படைத்தலைவராகவும் உழைய (மந்திரி) ராகவுஞ் சிறப்புப் பெற்றிருந்தமையாற் சேரமான்களுக் குரியவ ரென்பதற்காகப் பனந்தார் புனைந்து கோடற் குரிமை நல்கப் பெற்றிருந்தனர்; அவ்வுரிமையே மரபுபற்றி நெடுமா னஞ்சிக்குங் கூறப்பட்டதென்பதே முறையாகும்.

சேரமான் படைத் தலைவர்க்குஞ் சேரமாற்குரிய பனந்தா ருரித்தென்பது,

"வியன்பணை முழங்கும் வேன்மூ சுழுவத்
தடங்கிய புடையற் பொலங்கழ லோன்று
ளொடுங்காத் தெவ்வ ருக்கறக் கடைஇப்
புறக்கொடை யெறியார்நின் மறப்படை கொள்ளுந
ரெனவும், (பதிற்றுப் பத்து. 32.)

"இரும்பனம் புடைய லீகை வான்கழன்
மீன்றேர் கொட்பிற் பனிக்கய மூழ்கிச்
சிரல்பெயர்ந் தன்ன நெடுவள் ளூசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பி
னம்புசே ருடம்பினர்ச் சேர்ந்தோ ரல்லது

தும்பைசூ டாது மலைந்த மாட்சி
யன்னோர்..................

(பதிற்றுப்பத்து. 42,) எனவுங் கூறு மாற்றாற் பெறப்படும். (புடையல் = பனமாலை) ஆண்டுக் குறிப்புப் புத்துரை யாசிரியரும் "கரியபனை மாலையினையும் பொன்னாற் செய்த வீரக் கழலினையுமுடைய; இவை சேரன் படைவீரர்க்குரியன" வென்றார்.

இவ்வாற்றானே அதியமான்கள் சேரமான்களி னுற வினரல்லர்; சேரமான்களுக் குரிய மழவர் தலைவரெனக் கொள்க. இம் மழவர் சேரன் மழவரெனப் பெயர் வழங்கப் பெற்றவர். இவ்வாறே யேனைச் சோழ பாண்டியர்க் குரிய மழவரு மிருந்தனர்; அவரு முறையே சோழன் மழவரெனவும் பாண்டி மழவரெனவும் பெயர் பெற்றுச் சிறப்புற்று வாழ்ந்து வந்தனர்.

கடல் சூழ்ந்த ஈழ்ப்பாண நாட்டகத்துக் கல்வி யறி வொழுக்கங்களிற் றலைசிறந்து தமிழ் வளர்த்துப் பொன்றாப் புகழ் நிறீஇய திரு. ஆறுமுக நாவலர் பாண்டி மழவர் குடிப்பிறந்தவரென்ப. ஈழ்ப்பாணம் தொண்டைமா னிளந் திரையன் காலத்துப் பல்லவ மன்னராற் கைப்பற்றப் பட்ட பொழுது மணி பல்லவமெனப் பெயர் பெற்றிருந்தது. பல்லவராட்சியின் பின் பாண மன்னராற் கைப்பற்றி யாளப் பட்டபொழுது பாணமெனப் பெயர் வழங்கப்பட்டது; வேறிடத்தினும் பாணநா டிருந்தமையின் வேறுபாடு தோன்றுதற் பொருட்டு ஈழநாட்டகத்துப் பாணமெனப் பொருள்பட ஈழ்ப்பாணமென வழங்கினர். ஈழ்ப்பாணம் மீண்டுந் தமிழராற் கைப்பற்றப்பட்டபொழுது அங்கு

வாழ்ந்த பல்லவரும் பாணரும் தமிழ ராயினர். பல்லவரும் பாணருந் தமிழரல்லாத வடமர்; ஆரியர். மணிமேகலை யாற் கொலையுண்டிறந்த உதய குமாரனென்னுஞ் சோழன் மகன் றாய் சீர்த்தி யென்பவள் பாணர் மரபுப் பெண்.

ஆறகழூர்வாணன், ஏகம்பவாணன் முதலியோர் பாண மன்னர்பாற்பட்டவராவர். பாணர் என்பது வாணரென வழங்கும். வாண ராயர், வாணாதி ராய ரென்றாற் போலுஞ் சிறப்புப் பெயராக வேளாண் மரபினர் முதலியோரிடைப் பயிலுவன வாண மன்னரைக் குறிப்பனவேயாம். வாணர் தம்மை மகதரெனவுந் தந்நாட்டை வாண நாடு, மகத நாடு, மகத மண்டலம், மகதமெனவும் வழங்கிக் கொண்டனர். திருமுனைப்பாடி யென்னும் நடுநாடுதான் வாண நாடு மாயிற்று. அது சோழ கொங்கு தொண்டை நாடுகட்கு நடுவ ணிருந்தமையானே யம் முப்பெரு நாட்டாரானும் வாணரெனவும் மகத மண்டலமெனவும் வழங்கிய பெயரெல்லாம் விரைய இந்தவிடந் தெரியாமன் மறையலாயிற்று. இவர் அதியர் முதலிய தமிழரிற் பிரிந்தவ ராகல் வேண்டும். திருமான் மாவலி யென்னு மசுர வேந்தன்பால் மூவடி நில மிரந்து வாங்கி வளர்ந்தா னென்ற புராணக் கோலத்துக்குக் கோயிலெடுப்பித்தவற்குப், அவன் மகனுக்கு முறையே மாவலி யெனவும் அவன மகன் பெயராகிய பாண னெனவும் பெயரிடப்பட்டன. அவ்வழியிற் பின்பு வருவோரு மப் பெயர்களை மீண்டு மீண்டும வைத்துக்கொண்டுவர அவர்பாற் பரிசில்பெற விரும்பிய வடமொழியாளர் அப்பெயரை வைத்துக்கொண்டு அவரை மாவலி மரபினர்; பாண மரபினர்; மூவுலகினுந் தொழப்பட்டவர் மரபின ரென்றெல்லாம் விரிதலுச் சான்றுகளை யுண்டாக்கினர். அச்சான்றுகளால் வந்த புகழ் நினைந்து வந்த மையல் மண்டைக் கேறி எம்மைத்

திருமாற்கு மூவடி நிலங் கொடுத்த மாவலி மரபினரெனச்
சொல்லுக; அவன் மகன் பாணன் மரபினரெனச் சொல்
லுக; வெனச் சொல்லிச், சொல்லுவித்துச், சொல்லுதற்குக்
கூலி கொடுத்து வெறியாடியவர்களே புகழ்பெற்ற பாண
மன்னரெனப்படுவோர். இதனை யிவராரியருமல்லராய்த்
தமிழருமல்லராய்ப் போலி யாரியரும் போலித் தமிழரு
மாயினர். இடைக்காலத்துத் தமிழ் மன்னர் பலரு மிங்ஙனமே
கூத்தாடியவராவர். ஒரு தமிழ் மன்னன் இராமன் கோயில்
கட்டினால் அவன் மகனுக்கு இராமனெனப் பெயரிடப்
படும். அவன் மகன் மன்னனானவுடன் அவன் அயோத்தி
யாண்ட இராமன் மரபினனாகிவிடுவான் அதற்குக் கல்
வெட்டுச், செப்பேடு, நூல்வழக்கு, உலக வழக்குத், தனிப்
பாடல், புராணம், இதிகாசமுதலிய சான்றுகள்பலவுளவாம்.
ஆகவே அவன் சூரிய மரபினனவன். அவன் குரு வசிட்ட
முனிவராய் விடுவர் அவன் பூணூ லிடுதற்கும் வேள்விக்கு
முரிய இருபிறப்பாளனவன். ஆகவே தூய ஆரியன்
அவனே. தன்னின மாகிய ஆரியரே தலைவர்; தமிழர்
ஏவல் செய்யு மடியர். இங்ஙனமே தமிழ் மன்னவரும்
அவரைச் சார்ந்துயர்ந்தவரு மெல்லாம் பேய் கோட்பட்டவ
ராயினர். தந் நலங்கட்கெல்லா முற்ற துணையாய் நின்ற
தமிழரை யெல்லாஞ் செய்ந்நன்றி கொல்லுந் தமிழ் மன்னர்
மிகவு மிழிவு படுத் தெல்லார்க்கு மடியவ ராக்கிவிட்டனர்.

சேலத்தைச் சார்ந்த நாமக்கல்லிலே திருமால் கோயில்
அதியர் மன்னன் பெயரால் வழங்கப்படுகின்றது. அக்கோயி
லில் மாவலி மூவடி நிலங் கொடுப்பத் திருமால் குறியனாகி
யேற்றலும நெடியனாதலு மமைக்கப்பட்டுள்ளன. இதனால்
தம்மை மாவலி மரபினர்; அவன் மகன் பாணன் மரபின
ரென வழங்குவித்துக் கொண்டவர் அதியரு ளொருசாரா

ரென் றெண்ண இடமுண்டாகின்றது. அதியர் முதலிய தமிழ ரல்லாராயின் இவரெல்லாரையுந் தாண்டி நுழைந்து நடுநாட்டுக்குள் வேறொரு புதிய சிற்றினம் வந்து குடிபுக்கு நாடாளுத லென்பது சிறிது முடியாது.

பாணரினின்றும் ஈழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய தமிழர் பாண்டி மழவராவர். பல்லவரும் பாணரு மாரிய ராதலால் அவரை யடக்கி யாளவல்ல பாண்டிமழவர் தலைவனாகிய படைத் தலைவனை ஆரியச் சக்கரவர்த்தி யெனச் சிறப்புப் பெயர் புனைந்து பாண்டியன் உய்த்தான். அம் மழவன் நல்லூ ரெனவோ ரூருண்டாக்கி அதன்கணிருந்து ஈழ்ப்பாண முழுது மாட்சி செய்து வந்தான்; அவன் வழி வந்தோ ரெல்லாம் ஆரியச் சக்கரவர்த்தியெனப் பெயர் வைத்துக்கொண்டு முடிசூடி யாள்வா ராயினர். ஆரியச் சக்கரவர்த்தி யென்பது குடிப் பெயராயிற்று. ஈழ்ப்பாணம் யாழ்ப்பாண மென மரீஇயிற்று. ஈழ்ப்பாணத்துக் குடியேறிய ஆரியப் பார்ப்பனர் சொல்லிசையை வைத்துக் கொண்டு ஆரியச் சக்கரவர்த்திகளென்பவர் இராமேசுவரக் கோயிலுக் குரியராய்க் கோயில் வழிபடவருவோர் கொடுக்குங் கூலியால் வயிறு பிழைத்த ஆரியப் பார்ப்பனர் மரபின ரெனப் புராண மெழுதி நம்புமாறு செய்துவிட்டனர். செய்துந் தங்களை ஆரியச் சக்கரவர்த்திகள் கோமக்க ளாக்கி விடவில்லை.

இங்ஙன மழவரினந் தமிழக மெங்கணுங் கடல் கடந் தும் பரந்து வாழ்ந்து மேம்பா டுற்றுத் தமிழர் சிறப்பினைப் பாதுகாத்து வந்த வனகண் மீளிய ரினமென்பது பண்டு தொட்டு மாறாது வருகின்றது.

அஞ்சா நெஞ்ச மமையப் பெற்ற மழவர் மிக்கு வாழ்ந்த நாடு முழுதும் மழநாடெனவும் மழபாடி யெனவும்

வழங்கப்பட்டன. மழபாடி திருமழபாடியாய்த் தேவாரப் பாடல் பெற்றுள்ளது. மழவர்பாடி மழபாடி. ஆய்ப்பாடி போல மழவர் சேரியென்னும் பொருட்டு. ஆனாய நாயனார் பிறந்த நாடு மழநாடு

"ஈன்றுபுறந் தந்த வெம்மு முள்ளாள்" (அகம். 35) என்னு மகப்பாட்டிற் குறிப்புரையாளர் "மழவர் மழநாட்டார்" என வுரைத்தலானே பண்டைஞான்று மழநாடென வொரு நாடுண்மை பெறப்படும். மழநாடு மழபுல மெனவும் வழங்கப்படும்.

மழபுல மழவர் பாலை நில மாக்க ளெனவும் முல்லைநில மாக்க ளெனவுங் கொள்ளப்படுவர். வேளிர், மறவர், கள்வர், இடையர், நாகர் என்றிவ் வினங்களோ டொப்ப மழவரினமும் போர்த்துணிவுங் குறும்பு மிக்கதோ ரினம். மழவருள்ளும் மழபுல மழவர் கொடுஞ்செய லிழைப்பவ ராவர்; இவரை யடக்கி யாளுதல் எவர்க்கு மரிதா யிருந்தது. அவரெல்லா மாறலை கள்வர்; பகைவ ரானிரைகளைக் களவிற் கொணர்தலில் வல்லுநர்; ஆவி னிறைச்சியு முண்டனர். இம்மழவரைப் பொதினிமலை யுடைய வேளா வென்னும் வேளிர் தலைவன் முதுகிட்டோடத் துரத்தின னெனவும் வேங்கடமலை யுடைய புல்லியென்னுங் கள்வர் தலைவன் வென்று வணக்கின னெனவு மக நானூற்றுப் பாடல்களா னுணரலாகும். இம்மழவர் சுருண்டு வளைந்து யாட்டுக் கொம்புபோன்று முறுக்குண்டு தோளிற் றொங்கிக் கிடக்குந் தலைமயி ருடையவர்.

இவ ரெத்துணைக் கொடியரா யிருந்தா ராயினுந் தந் தலைவரின்கீ ழடங்கி வாழ்ந்து தலைவருடைய முயற்சி

யானே நாளடைவிலே மிக்க சீர்திருத்த முற்று வேளாள ராய் விட்டனர்.

சேரன் மழவருட் கொல்லிமலையைச் சார்ந்து வாழ்ந்த வர் கொல்லி மழவரெனப் பெயர் பெற்றனர்.

மழநாட்டிற் பொன்னியாற்றின் வடகரை மருங்குள்ள திருப்பாச்சிலாச்சிராமத்திலே ஆளுடைய பிள்ளையாரான் முடக்குநோய் தீர்ந்துய்ந்த மங்கையின் றமப்பன் கொல்லி மழவனெனப் பெரியபுராணங் கூறும். திருப்பாச்சிலாச்சி ராமஞ் சோழநாட்டைச் சார்ந்த தெனினும் வட கொங்கு நாட்டை யடுத்துள்ள தாதலான் மழநாட்டுக் கணித்தாய தேயாம்.

கொல்லிமழவர் வாழ்ந்த நாடு கொல்லிக் கூற்ற மெனா வும் வழங்கப்பட்டது. "கொல்லிக் கூற்ற மென்றது கொல்லிமலையைச் சூழ்ந்த மலைகளை யுடைய நாட்டினை". (பதிற்றுப்பத்து எட்டாம்பத்துப் பாயிரக் கட்டுரை.) யென்பர் பதிற்றுப்பத்துப் பழைய வுரையாளர். இதனாற் கொல்லிக் கூற்றத்தை யாண்டுவந்த அதியமான்களுக்குக் கொல்லிமலை யுரிய தன்றென்பது பெறப்பட்டது. எனவே யதியமா னெடுமானஞ்சி காலத்திற் கொல்லிமலை ஓரியென் பவனுடையதா யிருந்த தென்பது பொருந்தும்.

கொல்லிமலையுங் கொல்லிக் கூற்றமுங் கொங்குநாட் டின்பாற் பட்டன. அதனாற் கொங்கு மண்டல சதக முடையார் கொங்குநாட்டைச் சூழ்ந்த பதினாறு மலைகளுட் கொல்லிமலையை முதற்கண் வைத்தெண்ணினார். இன்னு மச் சதகமுடைய கார்மேகக் கவிஞ ரென்பவர்,

"சாதலை நீக்கு மருநெல்லி தன்னைத் தமிழ்சொ லௌவைக், காதா வோடு கொடுத்தவன் கன்னலை யங்கு நின்று, மேதினி மீதிற் கொடுவந்து நட்டவன் மேன்மர போர், மாதிரஞ் சூழரண் மேவுவ துங்கொங்கு மண்டலமே" எனவும்,

"விரையார் தொடையணி மூவேந்த ராசை யிருந்து நச்சத், தரைமீ தெலாவள முஞ்செறி கொல்லித் தடவரை யாள், துரையாய்த் தமிழ்மொழிக் கல்லும் பகலுஞ் சுரந்து செயபொன், வரையா தளித்தநல் லோரிவள் ளல்கொங்கு மண்டலமே" எனவும் பாடிய கட்டளைக் கலித்துறைகளால் அதியமானையு மோரியையுங் கொங்க ரென்றனர்.

இற்றைக் கீராயிரம யாண்டுகட்கு முன்னரேயே சோழ ஞட்டிற் பிரிவுபட்ட தொண்டைநாடு போலச் சேரஞட்டிற் பிரிவுபட்டது கொங்குநாடு. கொங்குநாடு பிரிவுபடினு மதன்பாற் பட்ட கொல்லிமலை சேரயான்களி ஞட்சிக் குரிய தாகவே யிருந்து வந்தது. கொங்கு கொங்கிளங் கோசர தாயிற்று.

சேரர் சேரகம் என்னுந் தமது நாட்டின் பாதுகாப்புக் கின்றியமையாமையாற் கொல்லிமலையைப் பிறர் கைக் கொள்ளாமே நோக்கிவரக் கடவராயினர். கொல்லிமலையை யிழப்பிற் சேரகம பகைவர் கைப்பட்டுத்தாழு மடிமையாத லொருதலை. அதனாற் கொல்லிமலைத் தலைவர்களைச் சேர மான்க ளடக்கித் தம் மேவல்வழிப் படுத்துதல் வேண்டும்; அன்றேற் பொருது தூத்துதலோ கொல்லுதலோ செய்தல் வேண்டும்; என்னுங் கொள்கை யுடையவரா யிருந்து நடந்து வந்தனர். சேரக மெனற்பாலதனைக் கேரளமென மாற்றினர் பார்ப்பனர்.

இஞ்ஞான்றைக் கோயம்புத்தூர்க் கூற்றமுஞ் சேலக் கூற்றமுஞ் சேர்த்துக் கொங்குநா டெனப்படும். கொல்லி மலையுங் கொல்லிக் கூற்றமும் வடகொங்கு. பொன்னி யாற்றின் வடபாலைக் கொங்கு வடகொங் கெனப்பட்டது. கொல்லிக் கூற்றமே அகநானூற்றிற் கூறப்பட்ட மழநா டெனக் கோடல் வேண்டும். அது தனியாட்சி யுற்ற பொழுதே யப்பெயர்த் தாயது போலும்.

கொல்லி மழவருள்ளே தொன்றுதொட்டுத் தலைவரா யிருந்து வந்தவர் அதியமான்களே யாமெனத் தெரிய வருகின்றனர். கொல்லிக் கூற்றத் துட்பட்ட குதிரைமலையும் அம்மலைமே லுள்ள தகடூரு மதியமான்க ளுடையவை.

மழவர் குதிரை யூர்தலில் வல்லுநர். அவருட் பெரும் பாலார் குதிரைப்படை மள்ளரே யாம். அதனால் அவர் "உருவக் குதிரை மழவ" ரெனச் சிறப்பிக்கப் பட்டனர் அகநானூற்றில். (க.) மழவரது போராண்மை மிகுதிக்கு அவரது குதிரை யேற்றப் பயிற்சி மிகுதியே பொருட்டாகல் வேண்டும். தம் மலையிற் குதிரைப் படைப்பெருக் குடைமை தோன்றத் தமது மலைக்கு அதியமான் குதிரை மலையெனப் பெயரிட்டு வழங்கினன் போலும். தகடென்பது மலரின் புறவிதழ்க்குப் பெயர்; இது "அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை, மாத்தகட் டொள்வீ தாய துறுகல்" (212) எனப் புறத்தின் வந்த வாற்றாற் பெறப்படும். "பெருந்தண் செண்பகஞ் செரீஇக் கருந்தகட், டுளைப்பூ மருதி னொள்ளிணர் அட்டி" யென முருகாற்றுப் படையினும் வந்தது. அகவிதழைப் பாதுகாக்கும் புறவிதழ் போன்ற மதிலை யுடைய வூரென்னும் பொருள்பட அதியமான் றன்னூர்க்குத் தகடூ ரெனப் பெயர் வைத்தான்;

இப்பெயரையு மாரியர் தம் வழக்கம்போல வடசொற் சிதை வென வலிந்து கொண்டு உண்மையான தமிழ்ச்சொற் பொருளைப் பாழாக்குவர். வடசொல் லோசையோ மழவர் செவிக்கும் நாவிற்குங் கடப்பாரை போலிருக்கும்; அவர் தந் தமிழ்ச்சொல்லாற் பெயரிடுத லிழுக்கென்று வடசொல் லாற் பெயரிட்டன ரென்றல் கேட்பவ ரெல்லா மடவோ ரென நினைத்துக் கூறுவார் கூற்றேயாம். தமிழர்க்குப் பொருள் விளங்காத சொல்லாற் பெயரிடுபவர் எதற்காகப் பெயரிட வேண்டுமென்பதையே யறியாதவ ராவர்; தமிழ்ப் புலவர்களை வழிபடுதலே தொழிலாகக் கொண்ட அதிய மான் இனிய எளிய தமிழ்ச்சொல்லாற் பெயரிட விரும்பு வானே யல்லது வேறிரவலர் சொற்கேட்டுப் பெயரிட விரும்பா னென்பது சிறு மகாரு முணர்வர்.

கொங்குநா டிருபத்து நான்கனுள்ளுங் கீழ்கரைப் பூந் துறை நாடென்ப தொன்று. அதுவே யவற்றுட் பெரிய நாடு. அதற் குரிய முப்பத்திரண் டூர்களுள்ளே தக டப்பாடி யென்ப தொன்றுண்டு. அது தகடூரார் வந்து குடியேறிய பாடி போலும்; தகடூரார் தகட ரெனப் புகழெய்தி யிருத்தல் வேண்டும். அதனைச் சார்ந்த மலைக்கோட்டை சூழ்ந்த குன்றத்தூர் பண்டை யதி யமான் றகடூரா யிருப்பினு மிருக்கலாம்; அக்கூற்றங் குன் றத்தூர்க் கூற்ற மெனப்படும். கீழ்கரைப் பூந்துறை நாட் டுத் தலையூர் குன்றத்தூர்க் கூற்றத்துக் குன்றத்தூராம். கொங்குநா டிருபத்து நான்குங் குன்றத்தூர்க் கூற்றம், தாராபுரக் கூற்றம், தணுக்கன் கோட்டைக் கூற்ற மென மூன்று கூற்றத்து ளடங்கும். குன்றத்தூர்க் கூற்றத்து நாடு பன்னிரண்டு; தாராபுரக் கூற்றத்து நாடு ஐந்து; தணுக் கன் கோட்டைக் கூற்றத்து நாடு ஏழு; ஆக விருபத்து

நான்கு மடங்கின. இம் முக்கூற்றத் துள்ளுங் குன்றத் தூர்க் கூற்றஞ் சேலத்தைச் சார்ந்தது; ஏனைய விரண்டுங் கோயம்புத்தூரைச் சார்ந்தன. கொல்லி மலை நாடுகளெல் லாங் குன்றத்தூர்க் கூற்றத்தைச் சார்ந்தனவாம்.

எனவே சேரமான்கள் வழங்கிய கொல்லிக் கூற்றமே கொங்கர் வழங்குங் குன்றத்தூர்க் கூற்ற மென்பது நன்கு விளங்கும். திருச்செங்கோடு மிக்கூற்றத்தைச் சார்ந்ததே யாம். அன்றைய தகடூர் பகைவரால் வெல்லுதற் கரிய மலைக் கோட்டையாற் புகழ் பெற்றது. இன்றைய குன் றத்தூரு மத்தகையதே யாம்.

தோல்வி யுற்ற மன்ன னூர்ப்பெயரை வெற்றி யுற்ற மன்னன் மாற்றி வேறு பெயரிடுதன் மரபு; அம் முறை யானே தகடூர் குன்றத்தூ ரென்னும் பெயரின தாதல் கூடும்.

இனித் தகடூர் அதியமான் றகடூரென வேறுபடுத்து வழங்குதலின் அக்காலத்துத் தகடூரெனப் பெயர்பெற்ற வூர் பல வுளவாதல் வேண்டும்.

கொல்லி மழவ ருள்ளே யதியமான் மரபினரே கட வுள் வழிபாடு, கல்வி, கொடை, வென்றி, ஒப்புரவு, தலைமை முதலிய நலம் பலவும் வாய்க்கப் பெற்றுப் புகழ்பட வாழ் ந்தவ ராவர்.

நல்லிசைப் புலவர் பலராற் பாடப் பெற்ற சிறப்புடைய ரதியமான்கள். அவரா லெடுப்பிக்கப் பெற்ற கடவுட் கோட்டம் பல வுள. திருவதிக வீரட்டானம், சேலத்தைச் சார்ந்த நாமக்கற் றிருமால் கோட்டம், போளூர்த் திருமலை

யருகன் கோட்ட முதலாயவை அதியரா லெடுப்பிக்கப் பெற்று அவர் பெயரான் வழங்கப் பெறுபவை. திருவதிகைக் கோட்டமே ஆளுடைய வரசுகளினுடைய தமக்கையார் திலகவதியார் திருத்தொண்டு செய்து வழிபடப் பெற்றது. அப்பருமங்குத்தான் மருள்வழி நீங்கி யருள்வழிப் புக்கு நம்பன் றொழும்பராகித் திருநெறித் தமிழ்பாடத் தொடங்கித் தம் வயிற்றுவலி நோயும் பிறவி நோயு மொருங்கு நீத்துத் தமிழக முய்விக்கத் தலைப்பட்டனர். இதனால் அதியர் தம்முடைய தமிழ் மொழியின்பாலும் தமிழ் முதல்வன்பாலும் வைத்திருந்த பேரார்வம், தாம் அம் முதல்வன் றிருவடி யடைந் துய்ந்தபின்னரு மிடைவிடாது தமிழ் மொழியையுந் திருவருளையும் அப்பர் முதலிய சான்றோர் வாயிலாகப் பாதுகாத்து வருதல் கண்டு வியக்கத் தக்க தாகும். திருவதிக வீரட்டானம் திருமுனைப் பாடி நாடெனப்படு நடுநாட் டகத்த தாதலின் அந் நடுநாட்டினையு மதியர் கைப்பற்றி யாட்சிபுரிந்து வந்தன ரென்ப துணரப் படும். நடுநாட்டுத் திருநாவலூர்— ஆளுடைய நம்பியாரை வளர்த்த நடுநாட்டு மன்னன் நரசிங்க முனை யரையன் நரசிங்க முனை யதியனே வென்ப தாராயத் தக்கது. தேவார முதலிக ளிருவர், திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட நாயனர் முதலிய பெரியோரை யீன்று தமிழக முழுதி னுந் திருவரு ளொளியைப் பரப்பி நடுநாடென்னுந் தன் பெயர்க்குத் தான் றகுதி யுடைய தாதலை மெய்ப்பித்த திருமுனைப் பாடி நாட்டுக் கித்துணை யேற்ற மெய்துவித்தவர் அதியமான் மரபினரே யாதல் வேண்டும். இவர் திருமால் கோட்டம், சினன் கோட்ட முதலியவையு மெடுப்பித்த லான் மக்க ளெல்லாருந் தாந் தாம் விரும்பியவா றெங்ஙனமேனுங் கடவுள் வழிபா டுடையராயிற் சாலு மென்னுந் தூய வெண்ண முடையரென்பது விளங்கும். எல்லாத்

கடவுளு மாகி யிறைவ னொருவனே அவரவ ரெளிதி னினைக்கத் தக்க வாறு கோலங் கொண்டு தொண்டர் வழிபா டேற்று மகிழ்ந்தருளி யவரவர்க் காவன புரியு மென்னும் வாய்மையினை யுணராதவ ரல்ல ரதியமான்களா சித்தூரைச் சார்ந்த போளூர்த் திருமலைச் சினன் கோட்டத் தினை அதியரு ளதியமா னெடுமா னஞ்சியே கட்டினு னென ஆண்டைக் கல்வெட்டுப் பாட்டுக் கூறுகின்றது அப்பாட்டு "வஞ்சியர் குலபதி யெழினி" யெனக் கூறுதலின் அதிய ரைச் சேரமான் மரபைச் சார்ந்தவரெனக் கருதுங் குறிப் புப் பெறப்படும். இதனாற் பிற்றைஞான்றை யதியர் நாடாட்சித் தலைமையுரிமை பற்றி உயர்வு கருதித் தம்மைச் சேரமான் மரபின ரென வழங்கிக் கொண்டா ரெனக் கரு தல் வேண்டும். சேர சோழ பாண்டிய ராகிய தமிழர் பிற்றைஞான்று ஆரியர் வலைப்பட் டுயர்வு கருதிப் பூணூ லிட்டுக்கொண்டு தம்மை யாரியர்பாற் பட்டவ ரெனப் புகழ் வித்துக் கொண்டனர். மையூர் (மைசூர்) நாட்டு வேளிர் மரபின ராகிய உடையார் (அரசர்) தங்களை ஆரிய ரெனவும், எரிக்கடவுளின் வழியின ரெனவும் வழங்கிக் கொள்ளுதலை யின்றுங் காணலாம். அன்றும் வேள்பாரி முதலிய வேளிர் களைக் கபிலர் வடபான் முனிவன் வேள்விக் குழியிற் றோன் றியன் மரபினரெனப் புனைந்து பாடி யுள்ளார்; இப் புகழ்ச்சி தெலுங்கரு ளொருசாராரு மின்று தமக்குச் சொல் லிக் கொள்வர். இவை யெல்லாம் புகழ்ச்சியின் மயங்கு மன்னரையுந் தலைவர்களையுஞ் செல்வர்களையுங் கையகப் படுத்தற்பொருட்டு ஆரியர் கண்ட ஆராய்ச்சி வாய்பாடுகள். அவற்றை யுண்மை யெனத் துணிந்து மற்றை யினத்தி னின்றுந் தம்மை யுயர்வாக நினைத்துச் செருக்கிய தலைவ ரெல்லாங் குடி பொன்றி மண்புக்கு மாய்ந்தனர். இது பொய்ப்புகழ்ச்சிக் காகத் தங் கீழ் வாழு மெளியவர் தாம

பாடுபட் டுழைத்துப் பயிர்செய்யு நிலங்களைஏமாற்றி, வேறு பிழைப்பின்றி நிழல் வதிந்து தந்நலமே நோக்குஞ் சூழ்ச்சியாளர்க்கு நன்கொடை நல்கிப் பிறர்க் கிடையூறு செய்யாது தமக்குத்தா முரியவரா யடிமை யின்றி வாழு மவ்வெளியவர்களையு மடிமை யாக்கிக் கெடுப்பது பற்றிச் சிறிதும் நினைத்துப் பார்க்க மாட்டாத வன்கண்மையின் விளைவாகும். வானம் பொழிய மண்ணிலும் விளைய உழவ ருழுது காப்ப அவ் விளைவு கோடற் குரியவ ரவரே யாக அவ் விளைவுக் கியைபில்லாத முரடர் இயைபில்லாத மடியாளர்க்கு நன்கொடை யளிப்பதும் நன்கொடை வாங்குவது மெத்துணைக் கொடுஞ்செயல் மரத்தை வெட்டாது மரத்திற் பழம் பறிபபது போல அவ் விருசாராரு மவ் வுழவர்பாற் போயிரந்து அவ் வுழுபயனை அவ ரருளொடு கொடுப்ப அன்பொடு வாங்கி யுண்ணுதலே முறையாகும். அம்முறை கெடுத்துப் பழத்தைப் பிற ருண்ணுதல் கூடாது; நா மிருவேமுமே யுண்ணுதல் வேண்டு மெனச் சூழ்ந் தொருவன் மரத்தையே பறித்துக்கொடுப்ப வொருவன் வாங்கிக் கொண்டு போவ தாயின் மர மென்னாகும்., கடவுள் படைக்க உழவர் காத்துப் பேணிய செய்களை முரட ருமவரைப் புகழ்வோரு மாகிய விருவர் கூடிப் பேசித் தம்மு ளொருவர் கொடுப்ப வொருவர் வாங்கிய தாகத் தாமே யெழுதி வைத்துக் கொண்டு எழுத்துச் சான்று காட்டி வழக்காடுவது எவ்வளவு அடாத செயல். உலக முழுதுமே கடவுள் கோயில்; உலகத்து வாழு மக்க ளெல்லாங் கடவு ளடியார்; அம்மக்கள் செய்யுந் தொழி லெல்லாங் கடவுள் வழிபாடே அங்ஙனமாகக் கற்களை யெடுத்துவைத்து நட்டுக்கொண் டிதுதான், கடவுள்; இதற்குக் கோயில் கட்டு; உழவரையும் உழுநிலங்களையுங் கடவுளுக்குக் கொடுவென மயக்கித் தாமுண்டுடுத்

னைம்பொறி யின்ப மாரத் துய்த்துப் பிறருடைய முன்னேற் றத்துக்கு அடைகல்லா யிருப்பவர் இல்லாத நாடுதான் கட வுள் குடியிருக்கும் நாடெனப்படும். அந் நாட்டு மக்களே நோய், பகை, கவலை, தீயவெண்ணம், அறியாமை என்பன வின்றி யிடையீ டில்லா வின்ப நுகர்ச்சி யுடையவ ராவர்.

பிற்றை ஞான்றை யதியர் தம்மைச் சேரர்பாற் பட்ட மரபின ரெனச் சொல்லிக் கொள்வதற்கு வாயிலா யிருந்த வர் அவர் புகழ்ச்சியின் மகிழ்ந்து தமக்கு வேண்டுவன நல் குவ ரெனக் கருதிய தந்நய வாளரே யாம். வானவருந் தற் புகழ்ச்சிக்கு மயங்குவ ராயின் மண்ணக மாக்களின் மயங் கார் யாவர்?

அதியர்களாற் கடவுட் கோட்டம் பல்கியவாறு போலவே ஏழை யெளிய குடிகளுந் தழைத்தோங்கிப் பல்கின.

தமிழ் மொழிக்குந் தமிழ்ப் புலவர்க்குங் களைக ணாகி யிருந்தன ரதியமான்கள்.

அவருள்ளே முடியுடைமன்னர் மூவர்பாலும் படைத் தலைவரும் உழையருமாயிருந்து சிறப்பெய்தி அப்பெரு மன் னர்களின் செங்கோற்கொற்றத்தை மாட்சியுற நடாஅய்த் துறைபோயினாரும் பலருளர்.

அவர் தனிக்கொற்றமுந் தாங்கினர்.

தமிழ்ப்புலவர்க்குப் போலவே ஆரியப் பார்ப்பனர்க்கும் வேள்விபல செய்வித்து வேண்டுமளவு கையுறையும் நன்கொடையு முற்றூட்டு மளித்தவ ரதியமான்கள்.

அவர் கோயில் பலவற்றுக்கு நல்கிய உருவவரையு மளப் பில

நெடுமா னஞ்சி முன்னோர்தாம் யாண்டிருந்தோ கரும்பு கொணர்ந்து தமிழகத்துக்கண் முதலி னட்டுப் பயிர் செய்து புது முறையான் வேளாண்மைத் தொழில் வளர்ச்சிக் கடிகோலியவர்.

பழைய முறையையே செய்தல் வேண்டும்; புதுமுறை கண்டு செய்தல் கூடா தென்னு மறியாமை அதியமான் களுக் கிருந்ததில்லை.

புதுப்புது முறையில் வேண்டுவனவற்றைக் கண்டு மக்க ளிடையூ றில்லா வின்பப் பேற்றை நோக்கி மேன் மேல் வளர்ந்து கொண்டு போகல்வேண்டு மென்பதைத் தமிழருக் கெடுத்துக் காட்டியவ ரதியமான்க ளாவர்.

நெடுமா னஞ்சியின் முன்னோர் கடவுள் வழிபாட்டிற் றலைநின் றொழுகியவ ரென்ப துணரப் படுகின்றது.

அவர்க்கு வேண்டுவன நல்குதற் பொருட்டு வானவர் வந்திருந்த வண்பொழி லொன்று தகடூர்ப்புறத் திருந்தது.

"நீரக விருக்கை யாழி சூட்டிய
தொன்னிலை மரபினின் முன்னோர்" (புறம். 99)

ரென அதியமா னஞ்சியின் முன்னோர் ஞாலத்துக் கட்டளையாழி யுருட்டியதாகக் கூறியது சேரமான்களின் படைத்தலைவ ராகிய குறுநில மன்ன ராகிச் சேரமான்களின் செங்கோற் கட்டளையை யினிது நடாத்தியமை பற்றியே யாம்.

"வறனுறு செய்தியின் வாடுபு வருந்தி" (அகம். 301) யென்னு மகநா னூற்றுப் பாடல் பாடியவர் அதியன் விண்ணத்தனா ரெனக் காணப் படுதலால் அதியருள்ளே நல்லிசைப் புலவரு மிருந்தன ரென்பது பெறப்படும்.

இத்துணைச் சிறந்த அறிவு மாண்மையு முதலாயின வுடைய அதிய ராட்சியின் கீழ்த் தகடூர் நன்கு செழிப்பும் பாதுகாவலுஞ் சிறந்திருந்த தென்பது,

> "வள்ளிதழ்த் தாமரை நெய்தலொ டரிந்து
> மெல்லியன் மகளி ரொல்குவன ரியலிக்
> கிளிகடி மேவலர் புறவுதொறு நுவலப்
> பல்பய னிலைஇய கடறுடை வைப்பின்
> வெல்போ ராடவர் மறம்புரிந்து காக்கும்
> வில்பயி லிறும்பிற் றகடூர்............."

(பதிற்றுப்பத்து. 78.) எனவரு மெட்டாம் பத்துச் செய்யுளடிகளான் விளங்கும்.

## எழினி மாண்பு

---

இன்ன சீருஞ் சிறப்பு மமைந்து விளங்கிய அதியமான் மரபுக்கு விளக்காயவன் அதியமா னெடுமா னஞ்சி யென்பான்.

இவன் அதியமா னெடுமா னஞ்சி யெனவும், நெடுமா னஞ்சி யெனவும், அஞ்சி யெனவும், எழினி யெனவும், அதிய னெனவும் வழங்கப்படுவன்.

இவனைக்குறித்துப் பெருஞ்சித்திரனா ரென்னும் புலவர் "ஊரா தேர்ந்திய குதிரைக் கூர்வேற், கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினி" (புறம் 158) எனக் கூறுகின்றமையி னிவற் கெழினி யெனப் பெயர்வழக் குண்மை துணியப் படும்.

ஈண்டுக் குதிரை யென்றது பரிமா வன்று; எழினியின் குதிரைமலை யென்று வெளிப்படுத்துதற் பொருட்டு 'ஊரா தேர்ந்திய குதிரை யெனக் குதிரை விதந் துரைக்கப்பட்டது.

இப் பெருஞ்சித்திரனார் கூற்றுற் கூவிளங் கண்ணியும்,
"வட்கர் போகிய வளரிளம் போந்தை
யுச்சிக் கொண்ட வூசிவெண் டோடு
வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச்
சுரியிரும் பித்தை பொலியச் சூடி"

(புறம் 100.) என வருமௌவையார் கூற்றுற் பனங் குருத்துத் தோடு, வெட்சி மலர், வேங்கை மலரென் றிமூன்றும் விரைஇத் தொடுத்த கண்ணியும் நெடுமா னஞ்சிக் குரியன வென்பது பெறப்படும்.

அதியமான் றன் னாற்றலைப் பிறர்க்குச் சிறிதுங் காட்டிக் கொள்ள விரும்பாது மறைக்கு மடக்க முடைமையிற் சிறந்தவ னென்பதை ஔவையார் பன்முறை பாராட்டிக் கூறுகின்றார்; அவவாறு வேறெவரையு மௌவையார் பாடிய தில்லை. அதுபோலவே அவன் வறிய மக்களைத் தழீஇப் பேணு முறையுஞ் சிறந்திருந்தது.

"......................செருவேட்
டிமிழ்குரன் முரசி னெழுவரொடு முரணிச்

சென்றமர் கடந்துநின் னாற்ற றோற்றிய
வன்றும் பாடுநர்க் கரியை யின்றும்
பரணன் பாடினன் மற்கொன் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
னரணடு திகிரி யேந்திய தோளே" (புறம் 99.)

"உடைய னாயி னுண்ணவும் வல்லன்
கடவர் மீது மிரப்போர்க் கீயு
மடவர் மகிழ்துணை நெடுமா னஞ்சி
யில்லிறைச் செரீஇய ஞெலிகோல் போலத்
தோன்றா திருக்கவும் வல்லன் மற்றதன்
கான்றுபடு கனையெரி போலத்
தோன்றவும் வல்லன்றான் றோன்றுங் காலே.
(புறம் 315) எனவும்,

"இல்லாயிற் பதங்கொடுத்
துண்டாயி னுடனுண்ணு
மில்லோ ரொக்கற் றலைவ
னண்ணலெங் கோமான்..............."

(புறம் 95.) எனவும் வருவனவற்றானே மேற்கூறிய விரு பெரும் பண்புக் குறையு ளாவா னெடுமா னஞ்சி யென்பது புலப்படுதல் காண்க.

(கடவர் மீதும்=கொடுக்கக் கடவோர்க்குக் கொடுக்கு மளவின் மேலும். மடவர்=பாணர். குடிப் பிறப்பிற் கல்லாமே வரு மிசைப் பயிற்சியல்லது இசை பயிலுமா ருசிரியர்பாற் கல்லாமையிற் பாணர் மடவ ரெனப்பட்டனர். ஞெலிகோல்=தீக்கடைகோல். அக்கோலைக் கடையும் பொழுதன்றித் தீயுண்மை தெரியாத வாறுபோலப் போர்

முதலியன செய்யுங் காலத்தன்றி அதியமான தாற்றல் காணப்படா தென்றவாறு.)

திருவாதவூ ரடிகள் இறைவனை "அருமையி லெளிய வழகே போற்றி" (போற்றித் திருவகவல். அடி 126) என விளித்து வணங்கிக் காதலின் மெய்யயர்கின்றார் அன்ப ருள்ளங்களை யெல்லா மீளாமே கவரவல்ல இறைவ னழகாவது அருமையி லெளிமை யென்பதாம் இறைவ னழகுடையவ னல்லன்; அழகே தானும்

இதனால் அடிகள் உயிரி னழகுக்கு இயல் வரைந் துணர்த்தினாரு மாயினர்.

செல்வ மிக்குள்ளவர் பிறராற் காண்டற் கரியர்; அவர் காணின் யாதேனுந் தம்மிடங் கேட்கக் கூடுமென்றும், தம்முயர்வுக் கிழுக்காகு மென்றும், அவர் தம்மைக் காண்டலைச் செல்வராயினார் விரும்பா ராகலின் அவராற் பெரிதுந் தாங் காண்டற் கரியராவர்; அச்செல்வர் கடும்பற் றுள்ளம், அன்பு மருளு மின்மை முதலாய இழிந்த பண்புகட்குப் பற்றுக் கோடாவர். அவரைப் பிறர் விழைதலும் புகழ் தலும் அணுகுதலுஞ் செய்யார். அங்ஙனங் காண்டற் கருமை யமையக் கூடுஞ் செல்வர்பாற் காண்டற் கெளிமை வாய்க்குமாயின் அஃதவர்க்கு உலகத்தா ருள்ளங்களை யெல்லாங் கவரு மழகெனப்படும். அவ் வழகுடையாரைக் காண்டொறுங் 'காணுவார்க்குக் காதலு மகிழ்ச்சியுந் தலைத் தலைச் சுரக்கும். அவ் வழகரைக் காண்டலு மக்காண் போர் அவரைச் சார்தல் வேட்கையும் பிரியாமையும் பிரியி னாற்றாமையு முறுப. அரியர் எளிய ராத லாவது அவர் தம் பெருமை நோக்காது எளியவ ரிருக்கு மிடத்திற்குத்

தாமே வலிந்து சென்று காட்சியளித்து அவர்க்கு வேண்டு வன வுதவுதலாம். அருமையி லெளிமை யெனப்படு மழகுக் கெல்லை யாயினு னிறைவனே.

அவ னருளாலே யவ்வழகு நெடுமா னஞ்சி, வேள்பாரி முதலிய வள்ளற் பெருஞ் செல்வர்பா லிருந்தமையின் அவர் நல்லிசைப் புலவர் முதலிய மக்க ளெல்லாருடைய உள்ளங்களையுங் கவர்ந்தனர்.

அங்ஙனங் கவர்வோரொடு கவரப் படுவாரிடைப் பாயு மின்ப வெள்ளத்திலே அவ்விருவரும் பாடியு மாடியும் பாடுவித்து மாடுவித்துந் திளைத் தயர்வர்.

அந்நிலையிலே அவர்தா மிருவரன்றி யொருவராகு மொப்புஉம யுணர்வினு லாகு மமைதி கூடும்.

அருமையி லெளிமை யென்னு மழகுகண்டு காமுறுங் காதலே வாய்மைக் காத லெனப்படும்.

நல்லிசைப் புலவர் பாட லெல்லாங் குறிப்பாக வேனும் வெளிப்படையாக வேனு மஞ்ஞான்றை வள்ளல்களி னுரு யிர்ப் பேரழகையே நுதலிப் புனைந்து பாடப்பட்டனவே. அவ்வழகே பாட்டுக்களுக்கு மழகாயிற்று.

ஔவையார், பரணர், பெருஞ்சித்திரனர், பொன்முடி யார் முதலிய புலவர் பலர் நெடுமா னஞ்சியைப் புகழ்ந்து பாடி யிருக்கின்றனர். அவருள் ஔவையாரே மிகவும் வியந்து பல பாட்டுகள் பாடி யிருக்கின்றனர்.

இவன் திருக்கோவலூரை யழித்த பொழுது பரணர் வியந்து தம் பாடுமாற்றல் புலப்பட அதியமான் பொருமாற்

றலைப் பாடினு ரென்ற ஔவையார் கூற்றாற் பெறப்படும் பரணர் பாட்டுக் கிடைக்கவில்லை, பரணர் திருக்கோவலூர்க் காரியின் உயிர் நண்பர்.

"குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிபடு பூசலி னெய்தா தொரியக்
கடுஞ்சின வேந்த னேவலி னெய்தி
நெடுஞ்சே ணாட்டிற் றலைத்தார்ப் பட்ட
கல்லா வெழினி பல்லெறிந் தழுத்திய
வன்கட் கதவின் வெண்மணி வாயின்
மத்தி நாட்டிய கல்கெழு பனித்துறை"

(அகம். 211.) எனவரு மாமூலனார் கூற்றான் மத்தி யென்பவன் எழினி யென்பவனுடைய பல்லை யடித்துதிர்த்து அப் பல்லைத் தன் வாயிற் கதவிற் பதித்துவைத்த வரலாற்றிற் பெறப்படுங் கல்லா வெழினி யென்பவ னெடுமா னஞ்சி யெழினியின் வேறுவன். அவன் மகனுங் கல்லா வெழினி யல்லன்.

இனி, "மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்
முயங்கிய நாடவச் சிலரே யலரே
கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூட் பாண்டியன் வினைவ லதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
யொளிறுவாட் கொங்க ரார்ப்பினும் பெரிதே".

(குறுந்தொகை. 393 ) என்னுஞ் செய்யுளிற் பசும்பூட் பாண்டியன் வினைவ லாளனும் வாகை யென்னு மூரின் போர்க்களத்துக் கொங்காாற் பொருது கொல்லப்பட்டுக்

களிறொடு வீழ்ந்தவனு மாகிய அதிகனும் அஞ்சி யெழினி யாகிய அதிகனின் வேறுவன்.

இனி, "கறையடி யானை நன்னன் பாழி
யூட்டரு மரபி னஞ்சுவரு பேஎய்க்
கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி
புள்ளிற் கேம மாகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை யதிகற் கொன்றுவந்து."

(அகம். 142.) என்பதன்கண் நன்னனுடைய பாழி யென்னு மூர்ப் போர்க்களத்தின் மிஞிலி யென்பவன் அதிகனைக் கென்று னெனப் பரணராற் கூறப்பட்ட அதிக னென்பவனும் பரணராற் புகழ்ந்து பாராட்டப் பெற்ற நெடுமா னஞ்சியெழினி யென்னுமிவ் வதிகனின் வேறுவன்.

இங்குக் கூறிய அதிக ரிருவரு மதியமா னெடுமா னஞ்சியினுடைய அதிய மரபின ராவர் போலும் இவ்வதிகர் மூவரு மொருகாலத்து வாழ்ந்தவரே யாம்.

இனி, அதியமான் றகடூர் பொருது வீழ்ந்த வெழினி யென வொருவனை அரசில் கிழா ரென்னும் புலவர் பாடிய பாட்டொன்று புறநானூற்றிற் (புறம். 230) காணப்படு கின்றது. அப்பாட்டை யடுத்துப் பின்வரு மிரு பாட்டு மதியமா னெடுமா னஞ்சியை ஔவையார் பாடியன வாகக் குறிக்கப்பட் டுள்ளன. அம் மூன்று பாட்டுங் கையறு நிலை யென்னு மொருபொருண் மேலன. அக் குறிப்புரை யாளர்க்கு அதியமான றகடூர் பொருது வீழ்ந்த வெழினியும் அதியமா னெடுமா னஞ்சி யெழினியு மொருவ னல்ல ரென்பது கருத்தாதல் விளங்கும். அக்கருத் தின்றெனின் அவ ரவ்விரு பாட்டின் கீழும் அவனை ஔவையார் பாடிய

தெனச் சுட்டிக் கூறுவர்மன். முற்பாட்டுப் பாடினோர் பாடப்பட்டோரு ளொருவரோ இருவருமோ அடுத்து வரும் பாட்டுக்களுக்கு மாயின் அப்பாட்டுத்தொறு மவனை யின்னார் பாடிய தென்றேனும் இன்னானை யவர் பாடிய தென்றேனும் அவனை அவர் பாடிய தென்றேனு மேற்பச் சுட்டிக் கூறிப் போதலே அக் குறிப்பாளர்க் கியாண்டும் வழக்கம்.

தகடூர் அதியமா னெடுமா னஞ்சியி னுடையதே யென்பதும் அவனே சேரமான் றகடூ றெறிந்த பெருஞ்சேர லிரும்பொறையொடு பொருது வீழ்ந்தவ னென்பதும் பலரு மறிப. அஞ்சிக்கு எழினி யென்னும் பெயருண்மை முன்னர்த் தெளிக்கப்பட்டது.

அதியமா னெடுமா னஞ்சி யெழினியும் அதியமான் றகடூர் பொருது வீழ்ந்த வெழினியும் வேறு வேருயி னிரு மன்னரு மொரு தகடூரை யாண்டுகொண் டிருந்தன ரென்பது செல்லாது. இருவர்க்கு மிரு தகடூர் கொள்வ தாயின் தகடூ ரென்பது வேறுபாடு தோன்ற விதந்தோதப் பட்டிருக்குமன்.

"பால்கொண்டு மடுப்பவு முண்ணா னாகலிற்
செறாஅ தோச்சிய சிறுகோ லஞ்சியொ
டுயவொடு வருந்து மன்னே யினியே
புகர்நிறங் கொண்ட களிறட் டானான்
முன்னாள் வீழ்ந்த வுரவோர் மகனே
யுன்னில னென்னும் புண்ணொன் றம்பு
மானுளை யன்ன குடுமித்
தோன்மிசைக் கிடந்த புல்லணா லோனே"

(புறம். 310.) எனப் பொன்முடியார் பாட்டுள் அஞ்சி கூறப்

படுலிற் பொன்முடியாராற் பாடப்பெற்ற அதியமா னெடுமா னஞ்சி யெழினியும் பொன்முடியாரோ டுடனிருந்த அரிசில் கிழாராற் பாடப் பெற்ற அதியமான் றகடூர் பொருது வீழ்ந்த வெழினியு மொருகாலத் திருந்தவ ரென்றன்றி வேறு வேறு காலத் திருந்தவ ரெனக் கோடற் கிடனின்று.

அன்றியுந் தகடூர், நெடுமா னஞ்சி யெழினியி னுடைய தா யிருப்ப அவ்வூர் அவனுக்கு வேற்றூர் போல வைத்து அவனைத் தகடூர் பொருது வீழ்ந்த வெழினி யென்றலு மமைவ தன்று.

தகடூர்ப் பொருது எனப் பகர வொற் றிரட்டாமை யானே தகடூரின்கட் பொருது வீழ்ந்த வெழினி யென வேழன் வேற்றுமைப் பொருள்படாது தகடூரைப் பொருது வீழ்ந்த வெழினி யென விரண்டன் வேற்றுமைப் பொருளே படுவதாம். நெடுமா னஞ்சி தானே வேறொரு தகடூரைப் பொருதமை பற்றி அவ்வாறு வழங்கப் பட்டா னெனக் கோடுமேல் அவனூருந் தகடூ ராதலால் அவனாற் பொரப் பட்ட தகடூர் விதந் தோதப்படு மாகலானும் தன்னூர்க் கண்ணே சேரமானாற் பொருது வீழ்ந்தானைத் தகடூர் பொருது வீழ்ந்தா னெனக் கூறக் கூடாமையானும் அத் தகடூர் வேறு தகடூ ரன்று; நெடுமா னஞ்சியின் றகடூரே யாதல் வேண்டும்.

இனி, அதியமான் றகடூர் பொருது வீழ்ந்த வெழினி யென்பவன் அதியமா னெடுமா னஞ்சி யெழினியின் வேறு யதியர் மரபிற் றோன்றினா னொருவ னென்னுமோ வெனின் அதுவு மமைவ தன்று. என்னை? ஒருகுடிப் பிறந்த விரு வர் தம்மு ளொருவ ரொருவர்மேற் போர் தொடுத்தல் குறு

மன்னருளியல்வ தன்று. ஒருகுடிப் பிறந்தார் தம்முட் பொருதல் அரிதி னியலுமெனக் கொளினும் அதியமான் களு ளங்ஙன மியன்ற குறிப்புப் புலவர் பாடல்களுட் பெறப் பட்டிலது; எழினி யிருவருங் கொடையாளிகளாய்ப் புலவர்ப் பேணும் பெருந்தகைமை பூண்டவ ராதலின் அன்னொருகுடிப் பிறப் பாள ராயி னவ்விருவரையுங் கொன்னே தம்முட் போர் உளுற்ற விடாது புலவர் தகைய வல்லராவர்; புலவர் வேண்டுகோளை மறுக்க வவ ரிருவரும மஞ்சு மியல்பினர்; ஒரு குடிப் பிறந்த சோழ ரிருவரையும் தம்முட் போர் பொரா தமையச் செய்தன ரல்லரோ கோவூர் கிழார்.

• அன்றியு மதியமான் றகடூர் பொருது வீழ்ந்த வெழினிக்கு அரிசில் கிழார் செங்கோ லுரிமை கூறுதலானே அவ னெடுமுடி மன்னர்பாற்பட்டவன்போலும்.

இவ்வாற்றானே யெழினி யிருவரு மொரு குடிப் பிறப்பாள ரல்ல ரென்பது தேற்றம்

அதியமான் றகடூர் பொருது வீழ்ந்த வெழினி யென் புழி அதியமா னென்பது எழினி குடிப் பெய ரன்று; தகடூரை விளக்கி நின்ற விதப்புக் கிளவியெனக் கொண்டு அதியமானது தகடூரைப் பொருது வீழ்ந்த வெழினி யெனப் பொருள்கோடலே வாய்மையாகும்.

இங்ஙன மரிதிற் சில பெயர் குடிப்பெயர் போல நின்று மயக்கலு முண்டென்பது "சேரமான் பாமுளூ ரெறிந்த நெய்தலங் கான லிளஞ்சேட் சென்னி யென்னும் பெயர் வழக்கா னினி துணர லாகும். இதன்கட் சோழன் பெயர்க்குச் சேரமா னென்பது குடிப்பெய ரென்று

கொள்ளல் கூடாமையிற் சேரமானென்பது குடிப்பெயர் போல நின்று சேரமானாது பாமுளுரை யெனப் பொருள் பட்ட வாறு காணப்படும்.

தகடூர் பொருது வீழ்ந்த வெழினி தகடூ ரெறிந்து வீழ்ந்த வெழினி யெனவும் வழங்கப்படுவன்.

எனவே யவ்வெழினி சேரமா னொடு நிகழ்ந்த தகடூர்ப் போரில் அவனுக்குத் துணை நின்று பொருதோ? தான் றனியே படையெடுத்து வந்து தகடூரைத் தாக்கிப் பொருதோ? அதியமா னெடுமானஞ்சியாற் கொல்லப்பட்ட வேறோ ரெழினி யாதல் பெற்றும்.

நெடுமா னஞ்சி, பகைவ ரணுகுதற் கரிய மலைக் கோட்டையின் வலிமையானும், தன் படை மிகுதியானும், அஞ்சா வாண்மையானும், நுண்ணுணர்வானும, கடவுள் வழிபாட்டினானும், பொதுமக்க ளன்பினானும் தான் தன் முன்னோர் போலச் சேரமானுக்குப் படைத்தலைவ னாகுஞ் சிறப்பினை வெறுத்துத் தனித்தலைவ னானன். யானை, தேர், குதிரை, காலா ளென்னும் நால்வகைப் படைகளையும் நன்கு பெருக்கிக் கொண்டான்.

முடி மன்ன ரென்பதுங், குறு மன்ன ரென்பதுந், தலைவ ரென்பது மவரவர்கள் அவ்வப்பொழுது தத்தமக்கு முடிந்தவாறு தாந்தாமே யமைத்துக்கொள்வ தல்லது ஒரு நிகரான மக்கட் பிறப்பில் வரம்புபட்ட வேற்றுமை யில்லை யென்பதும், இவ் வுண்மை யறியாத மடவோரே யாரேனு மேமாற்றுகின்றவனைத் தலைவனெனக் கொண்டு அஞ்சித் தம்மைத் தாமே யிழித்தும் பிறனை யுயர்த்தும் வைத்

தொழுகி முடிவில் மண்ணாகி யொழிந்த தல்லது மக்கட் பிறப்பி னேக்கத்தைப் பெற்றில ரென்பதும் நெடுமா னஞ்சியி னெண்ணம்.

பிறர்க் கேவல் செய்தலும், பிறரை யேவுதலு மென்னு மிழிவுங், கொடுமையு மின்றி வாழு மொரு தனித் தலைவர்க ளாகிய புலவர்களோடு பயின்றுவரு மவனுக் கவ்வுயர்ந்த வெண்ணந் தானே வருத லியல்பாகும்.

அன்றியு மக்கட்குத் தலைவ ராகக் கடவுளாற் படைக் கப்பட்டோம்; அதனால் மக்களெல்லாந் தம்மைப் பணிந்து தம் மேவலை மறுது செய்யவேண்டும்; செய்யாதவர்களைக் கொல்லுவதுந் துன்புறுத்துவதுங் கடவுளின் கட்டளைக்கு மாறானதன்று; என மன்னுயிர்த் தொகுதிக்கு வேறாகக் கடவு ளொருவ னுண்டென்னு மடமையானே தம்மைத் தா முணராது வியந்து; செருக்குக் கொண்டிருக்கு மன்னர் முதலிய தலைவர்களை யடிமை யாக்கி யுணர்வு கொளுத்து தலை கடவுளுக்குச் செய்யும் பெருந்தொண்டென அறிய மா னெடுமா னஞ்சி தெளிந்தான்.

தன்னை யேனை மக்களொடு மொப்பாக வெண்ணி மக்களுள்ளே தானு மொருவ னெனவும், உயிரெல்லாவற் றின் றொகுதியி னுதவியானேயே தனியுயிர் வாழ்ந்து வரு கின்றதெனவும், அதனு லெல்லா வுயிர்களுந் தம்மு ளொன் றற் கொன்று அடிமை யெனவும், ஒருயிருந் தனித்தனி நிலைக் கண் முதன்மை யிலவா மெனவும், அம்முதன்மையை விழையு முயிர் அழிந்து விடுதலே வாய்மை யெனவுங், கடவுளின் மக்களுட் கடவுட்கு வேற்றுமை யுண்டாகா தெனவும், வேற்றுமை கொள்வோ ரெல்லாங் கடவுட்குப்

பகைவரெனவும், அதனாலவர் கடவுள் படைத்த ஞாலத்து வாழ்தற் குரிமையில ரெனவும், அவரை யழிப்பவர் கடவுட் குப் பகையாகா ரெனவும், இன்னவா றெண்ணி நட்புக் கொள்ளாத் தலைவரை யெல்லா மழிக்கத் தொடங்கினா னெடுமா னஞ்சி.

அவர், தம்மை வேற்று நாட்டுப் படிற்றுளர் வந்து புகழினும் நாய்கள் போல அவ்வப் புகழ்ச்சிகட்கு மகிழ்ந்து உடனே தம்மையுந் தந்நாட்டாரையும் விற்று விடுதற்குப் பின்னில்லா ராகலின் அவர்களாற் றன் னருமையான தமிழகம் காலப் போக்கிற் றூய்மை கெட்டுத் துன்புறு மென்பதனை யஞ்ஞான்றே அறிந்து தமிழரை யுய்விக்கத் தலைப்பட்டவன் அதியமான்.

அவன் தான் முடிமன்ன னாதற் குரியவனா யிருந்து மவ்வாறு கொள்ள விரும்பாது, புலவர்கட்கும் பொதுமக் கட்கும் நண்ப னாதலே முடி மன்ன னாதற்கு மேற்பட்ட நிலையென விரும்பினான்.

அதியமான் சேரமானுக்குத் திறைசெலுத்த மறுத்தது மன்றிச் செவ்வி வாய்த்த பொழுது சேரமான்மேற் படை யெடுக்கவு மெண்ணி யிருந்தான்.

இந்நிலையில் ஓரி யென்பவன் கொல்லிமலையைக் கைப் பற்றிச் சேரமானுக்குப் பணியாது தனித் தலைவனானான்; ஆகவே சேரமான் சேரகப் பாதுகாப் பாகிய தன் கொல்லி மலையையுங் கொல்லிக்கூற்றத்தையு மிழந்தான். தனக் கிரு தெல்வர் சேர்ந்து விட்டதனால் ஓரியையும் அதியமானையுஞ் சேரமான் படையெடுத்துச் சென்று பொருது அடக்க முடியா நிலை தலைப்பட்டது. ஒரு முறையி லிருவரோடும் பொரு மாற்ற லுடைய னல்லன் சேரமான். அவனுஞ்

செவ்வியை யெதிர்பார்த்துப் படையும் பொருளும் பெருக்கிக்கொண்டு வந்தான்.

ஓரி வல்வி லோரி யெனவும் வழங்கப்படுவன். இவனை ஆதனோரி யெனவுங் கூறுப. தலையெழு வள்ளலுள்ளு மொருவன்; பெரும்போர் மீளி. ஓரேவிலே பலவற்றையு மம்பு தைத்துருவச் செய்ய வல்ல விற்கு வல்வி லென்பது பெயர். ஓரி வல்வி லுடையவ னாதலின் வல்வி லோரி யாயினான். இவன் றந்தை ஆத னென்பவ னாதல் வேண்டும். வல்வி லோரிக்குச் சிறந்த குதிரை யொன்றன் பெயரும் ஓரியென்பதே "ஓரிக் குதிரை யோரி" யென்றது சிறுபா ணாற்றுப்படை. இவன் வேட்டுவன் போலும்.

திருக்கோவ லூரைத் தலையூராக வுடைய மலையமா னாடென்பதனை யாண்டுவந்த காரி யென்பவனைச் சேரமான் தான் அதியமானைத் தாக்க வேண்டி யிருத்தலால் அதற்கிடையீடாகிய ஓரி யென்பவனை யடக்கித் தனக்குத் துணை செய்யுமாறு காரியைக் கேட்டுக்கொண்டான்.

காரி மலையமான் றிருமுடிக் காரி யெனவும் வழங்கப் படுவன். அவ னவ்வப்போழ்து மூவேந்தர்க்குங் கூலிக்குப் படைத் துணை செய்பவன். இவனுக்குச் சிறந்தவொரு குதிரையின் பெயருங் காரியென்பதே. இவனும் பெரும் போர் மீளி; வரையாது சுரக்கும் வள்ளல்; புலவர் தோழன்; புலவராற் புகழ்ந்து பாராட்டிப் பல பாடல்கள் பாடப் பெற்றவன்; அவ்வாற்றான் அதியமான் ஓரி யென்பவரோடு நிகராவான். இவனுடைய முள்ளூர் நம முள்ளூர்க் கான முஞ் சிறந்தன. முள்ளூர்க் கானத்துப் புக்க கள்வ ராகிய ஆரியரைத் துரத்திப் புறங்கண்டு தமிழகத்திற்குப் பாது

காவல னாயினான் காரி. இவனுடைய மலையமான் மரபு சேரமான் மரபிற் பிரிந்ததொரு கிளையாத லுரிமை பற்றியும் கூலி பற்றியுஞ் சேரமான் வேண்டுகோட் கிணங்கி ஓரியின்மேற் படையெடுத்துச் சென்று கொல்லிமலையை முற்றினான். காரிக் குதிரைக் காரியும் ஓரிக் குதிரை யோரியும் பன்னெடுநாட் பொர முடிவின் எதிர்பாராத வாறு தாக்குண்டு வல்வி லோரி போர்க்களத்து மாய்ந்தான். கொல்லிமலை மீண்டுஞ் சேரமானுடைய தாயிற்று.

தற்பாதுகாப்பின் பொருட்டும் நட்பின் பொருட்டு மதியமான் வல்வி லோரிக்குத் துணைபோதரக் கடவனாகியும் பெரும்படை யுடைய சேரமான் றன்னொடு பொரக் கருதியிருப்பதனை யுணர்வா னாதலிற் சிறுபோர்களிற் றன் படையைச் சிறிது மிழத்தல் கூடாமையயானும் காரியை யோரி வெல்லுதல் கூடுமெனத் துணிந்திருந்தமையானும் அதியமான் வல்வி லோரிக்குத் துணைபோதா வில்லை; ஓரியு மதியமானைத் துணை செய்யுமாறு கேட்டுக்கொள்ளவு மில்லை.

சேரமான் சூழ்ச்சி பாராட்டத்தக்கது. ஓரிக்குச் சோழ பாண்டியர் துணை நிற்கமாட்டார். அதியமானுக்குத் துணை நிற்பர். தானே ஓரியைத் தாக்கினும் ஓரியைத் தொலைக்கு முன் அதியமானைத் தாக்கினுஞ் சேரமா னகப்பட் டிருக்கக் கூடும். எங்ஙனமெனிற் சேரமான் றனக்கும் பகைவ னாதலான் ஓரிக்கு வலிந்து துணைபோவான் அதியமான். அதியமானுக் கோரியு மங்ஙனமே. அதியமானுக்குச் சோழ பாண்டியருந் துணைவருவர். சோழ பாண்டியர் கூலி மிகக் கொடுப்பா ராதலாற் காரியுஞ் சோழ பாண்டியர் பொருட்டுத் துணைவரக் கூடும். அன்றியும் ஓரியின் கோட்டையையேனும் அதியமான் கோட்டையை யேனும் நிலைபெற

நின்று தாக்குதற் குரிய பாசறையுங் கிடைத்திராது. இப் பொழுதோ ஓரியின் றுணை அதியமானுக்குக் குன்றியது. காரியு மதியமானுக்குப் பகைவ னுயினமையிற் சோழ பாண்டியர் பொருட்டு வரக்கூடுங் காரியின் றுணையு மதிய மானுக்குக் குன்றிற்று. அன்றியு மதியமானுடைய குதிரைமலைத் தகடூர்க் கோட்டையை நன்கு நின்று தாக்கு தற்குரிய கொல்லிமலைப் பாசறையுஞ் சேரமானுக்குக் கிடைத்தது.

இச்சூழ்ச்சி யின்மையிற் சேரமான் அதியமானைப் பொருது வெல்லுத லென்பது சிறிது மியலாது.

காரி, கொல்லிமலை சேரனுக் குறித்தாதற்குத் துணை செய்யு முகமாகத் தன் னுட்டுப் பாதுகாப்பைக் குறைத் தமை பொருது சினந்து காரிமேல் அதியமான் படை யெடுத்துச் சென்று திருக்கோவ லூரை முற்றிப் பொரு தழித்தான். அப்போரில் காரி துஞ்சினுன் போலும். முள் ளூர்க் கானத்து ளோடி யொளித்துத் தப்பினு னென்பாரு முளர். அங்ஙனந் தப்பி யிருப்பிற் சேரமா னதியமானோடு பொரும்பொழுது சேரமானுக்குத் துப்பா யிருந்திருப்பன்; அங்ஙனந் துப்பாயினு னென்பது கூற்றி னன்றிக் குறிப் பினும் பெறப்படவில்லை. அவன் றப்பினுற் சேரமானுக்குத் துணை போவா னென்பது அதியமான் றுணிபாகலின் அவனை முள்ளூர்க் கானத்துள்ளே துருவிக் கைப்பற்றவே முனைந் திருப்பன்; முள்ளூர்க் கான மென்பது நாடு முழு தினும் பார்த்த தன்றே. இப்போரில் அஞ்சியைப் புகழ்ந்து பரணர் பாடினுர்.

இக் காரி யதியமான் போரு மொருவாறு சேரமான் வென்றிக்குத் துணையாயிற்று. சேரமான் காரியின்

றுணையை யிழப்பினு மவனு லதியமான் படைக்கு நேர்ந்த குறை தனக்குக் காரி செய்த துணையாயிற்று.

இங்ஙன மதியமான் படை குறைவு மிளைப்பு முற்றி ருக்குஞ் செவ்வி யோர்ந்து முயன் முதலிய காட்டு விலங்கு களை யோடச் செய்து அவை யிளைத்த பொழுது பாயும் வேட்டைநாய்போலச் சேரமான் அதியமான்மேற் பாய லுற்றான்.

உடனே சேரமான், அதியர் தன் குடிக ளென்பது பற்றிப் பொராதே வணங்கித் திறை செலுத்தச் செயிற் சாலு மென்னுந் துணிவானும் போர்முறை கருதியும் பொன் முடியா ரென்னும் புலவரை அதியமானுழைத் தூதுசெல விடுத்தான்; புலவர் கூற்றுக்குச் செவி சாய்த்தா னாயினும் வல்லுப் போரிற்போல் வாட்போரிலும் வெற்றி தோல்வி யின்னார் கண்ணது தா னென யாவரானுந் துணிந்து சொல் லக் கூடாமையானும் வெற்றி தோல்வி ஊழ்வினையா னேர்வ தன்றி எத்துணை முயற்சியானும் நேர்வதன் றாகலானும் என்றேனு மொருநா ளொருபொழுது பொன்றுதலிற் றப்பாத வூனுடலை நச்சி வைய முள்ள வளவும் பொன்றாது நிலைபெறும் புகழுடலைக் கைவிட விரும்பாமையானுந் தூதுடன்படா னாயினு னதியமான்; அவனைப் பாராட்டிப் புகழ்ந்து மீண்ட பொன்முடியார் அதியமான் மலைக் கோட்டையி னருமையையும் கோட்டையைப் பாதுகாக்கு மறவரி னண்மை மிகுதியையு மெடுத்துப் புகழ்ந்து கூறி அவனை வெல்லுத லரிதென்பது தோன்றச் செய்து படை யெடுப்பினைத் தடுக்குங் குறிப்புடையவரா யிருந்தார்; இராவணன் கோட்டையி னருமையை அனுமான் கூறக்

கேட்ட இராமன் தன் வென்றியில் ஐயுற்றது போலவே சேரமானுந் தன் வென்றியி லையுற்று னென்பது தோன்று கின்றது.

"மொய்வேற் கையர் முரண்சிறந் தொய்யென
வையக மறிய வலிதலைக் கொண்ட
தெவ்வழி யென்றி வியன்றார் மார்ப!
வெவ்வழி யாயினு மவ்வழித் தோன்றித்
திண்கூ ரெஃகின் வயவர்க் காணிற்
புண்கூர் மெய்யி னுராஅய்ப் பகைவர்
பைந்தலை யுதைத்த மைந்துமலி தடக்கை
யாண்டகை மறவர் மலிந்துபிறர்
தீண்ட றகாது வெந்துறை யரணே."

(தகடூர்யாத்திரை) இது பொன்முடியார் மீண்டு வந்து அதியமானது எயிலருமை கூறிய பாட்டு. (தொல்காப்பியம். புறத்திணையியல் 12)

சேரமான் பெரும்படை கொண்டு புறப்பட்டுப் போய்ப் பாசறை விட்டிருந்து தகடூர் மதிலை முற்றியிருந்தான்; அவன் றன் னெயிற்புறத்து வருந்துணையு மதியமான் புறப்பட் டெதிர்சென்று தாக்கின னல்லன், அஃ திராமன் மதிற்புறத்து வருந்துணையு மெதிர் சென்று பொராது மதிலுள் ளிருந்த இராவணனை திருக்கை போன்றது.

சோழ பாண்டிய ருடைய படை வரவை யெதிர்பார்த்' தும், முற்றுகையிடச்செய்தாற் சோழ பாண்டியர் படை சேரமான் படையை வளைத்துக் கொள்ளக் கூடும்; அப் பொழுது முன்னும் பின்னுந் தாக்கிச் சேரமான் முற்

றுகையை யழித்து விடலா மென நினைத்துஞ் சேரமான்
படை தன் கோட்டையை முற்றுகையிடும் வரையு
மதியமா னெயிலுள் ளிருந்தான் போலும். அந் நினைப்
பெல்லா மவனுக்கு வாயாமற் போயின.

முற்றிய சேரன் மீண்டும் அரிசில்கிழா ரென்னும்
புலவரைத் தூது விடுத்தான், அத்தூதுரைக்கு முடன்
படாத அதியமான் போர்பொருவான் புறப்பட்
டான்; மதிலை முற்று முன்னே யெதிர் சென்று
பொராததன் றவற்றை யுணர்ந்தான்; சேரமான் படை
வருமுன்னே சோழ பாண்டியர் படை வந்துதவாத
தவற்றையு மெண்ணினன். இனி யென் செய்வது; என்னு
னுங் கலங்காது பொருது மடிந்து புக ழெய்துதலே தக்க
தெனத் துணிந்தான். பெரும்படை போர்க் கெழுந்தது;
சோழ பாண்டியரும் பின்பு வந்தனர்; வந்துமென்ன? கடும்
போர் நிகழ்ந்தது; அதியமான் படைத்தலைவன் பெரும்பாக்க
னென்பவன்; போர்த்துறை போனவன்; அவனுக்கு முன்
அஞ்சாது சேரமா னின்ற திறத்தை அரிசில்கிழாரும்
பொன்முடியாரும் பாராட்டினர்; போர் நிகழ்வுழி அவ்
விருபுலவரு முட னிருந்தனர். சேரமான் படை மிக அழி
வுற்றது. சேரமான் முகமலர்ச்சி குன்றித் தன் படையழி
வைச் சுட்டிக்காட்டி இருபுலவர்க்குங் கூறினன். அவ
ரிருவரு மவனைத் தேற்றிப் போர்த் துணிவு பிறப்பித்த
பாட்டு வியக்கற் பால தாகும். ஆயினுஞ் சேரமா னிடமே
வெற்றித் திருமகள் எய்தினள்; சோழ பாண்டியர் தோற்
றுப் புறங்கொடுத் தோடி விட்டனர். இறுதியில் எதிர்
பாராத வாறு சேரமான் வேற்படை மார்பிற் பாய்ந்துருவப்
பெற் றுடல் விட்டு வானவர்க்கு விருந் தாயினன். அதியமா

னெடுமா னஞ்சி யெழினி: தகடூ ரழிந்தது. குதிரைமலை யைச் சேரன் மறவன் பிட்டங் கொற்றனுக்குக் கொடுத்துவிட்டுத் தன் னூர் வரவேற்ப வெற்றி மிடுக்கொடு புலவர் பாட மீண்டு போயினன் சேரமான்; அதனால் இவனுக்குச் சேரமான் றகடூ ரெறிந்த பெருஞ் சேர லிரும் பொறை யெனப் பெயர் வழங்கப்பட்டது தகடூர்ப் போர் தமிழகப் பெரும்போரு ளொன்று. தகடூர்ப் படையெடுப்பை விரித்து விளக்கிக் கூறுமுகத்தாற் சேரமானைப் பாராட்டிப் பாடிய தகடூர் யாத்திரை யென வொரு பெருந் தொடர் நிலைச் செய்யு ளிருந்தது அதன் சில பாடல்க ளொழியச் செய்யுண் முற்று மிறந்தது; அப்பாடல்கள் சொற்சுவை பொருட்சுவை மிக்கன; அச்செய்யுள் உரையும் பாட்டும் விராய தாதலால் உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யு ளென்ப. உரை பெரும்பாலும் பாட்டுச் சிறுபாலு மாம். அப்பாட்டுப் பல அதியமானுழைச் சேரமானாற் றூதுவிடுக் கப்பட்ட அரிசில்கிழாரும் பொன்முடியாரும் பாடியன வாம்.

அதியமான் றுஞ்சியதற் கிரங்காத தமிழ ரில்லை யென லாம்; அதியமான் மறைவு பொதுவாகத் தமிழ ரெல்லார்க் குஞ் சிறப்பாகப் புலவர்க்கும் பேரிழ வாயிற் றென்பது ஔவையார் கேட்டோ ருள்ள முருகு மாறு புலம்பிப் பாடிய "சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே" யென்னும் பாடலா னுணரலாகும். அப்பாட்டு நினைவிற் கொள்ளத் தக்க தாகலான் அஃ தீண்டுத் தரப்படுகின்றது.

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே

யாம்பாடத் தான் மகிழ்ந் துண்ணு மன்னே

சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே
யென்பொடு தடிபடு வழியெல்லா மெமக்கீயுமன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாந்
தானிற்கு மன்னே

நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறு மென்றலை தைவரு மன்னே
யருந்தலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
யிரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கட் பாவை சோர
அஞ்சொனுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவ
னருநிறத் தியங்கிய வேலே
யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப், பாடுநரு மில்லைப் பாடுநர்க்கொன்

றீகுநரு மில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே"
(புறம். 235.) என்பது.

அதியமான் இப்போரிடைப் படுதற்கு முன்ன ரொரு முறை ஒரு போர்க்களத்துத் தானுந் தன் படையுமேயாய் நின்று மன்ன ரெழுவ ரொருங்கு திரண்டு வந்தாரை வென்று வாகைமாலை புனைந்தான். அன்னதோர் வெற்றி முடியுடை மன்ன ரெவரு மெய்திலர். பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழிய னொருவனே யத்தகைய வெற்றி பெற்றவன். அப் பாண்டியனு லங்கனம் வெல்லப்

பட்ட வெழுவ ருள்ளு மொருவ னாகிய எழினி யென்பவன் அஞ்சி யெழினி யல்லன்; அதியமான் றகடூர் பொருது வீழ்ந்த வெழினியோ? வேறோ ரெழினியோ?

அதியமானால் வெல்லப் பட்ட மன்ன ரெழுவரும் யார்யா ரென்பது விளங்க வில்லை. 'அதனா லவனவ் வெழு வருடைய கொடியடையாளமு முடையவ னாகி முடியாட்சி யுரிமை யெய்தினா னென்ப. குறுநில மன்னர்க்குக் கொடி யில்லாமையால் அதியமான் வென்ற மன்ன ரெழுவரு முடி மன்ன ரென்பது தோன்றும். அவ ராவார் சேர சோழ பாண் டியர், பல்லவர், பாணர், வேறிருவ ரென் றிவராதல் வேண் டும்.' பாண்டியன் றலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் ஒரு களத் தெழுவரை வென்றா னெனப் படினும், எழுவரு முடிமன்ன ரல்லர்; ஐம்பெரு வேளிரு மிருபெரு மன்னருமே யாம். அதனா லதியமா னெடுமா னஞ்சிபோலு மன்னன் முன்னு மில்லை; பின்னு மில்லை; யென் பது பெறப்படும். எழுவரு ளிவனால் வெல்லப்பட்ட சேர மான் இவனை யிவன் முதுமையில் வென்ற இளையனாகிய சேரமான் றந்தைபோலும்.

அதியமா னஞ்சி தமிழ் மொழியையுந் தமிழ்ப் புலவ ரையு மளவிறந்து பற்று வைத்துப் பேணி வந்தனன். தமிழக மெங்கணு மாடவரு மகளிரு மொப்பத் தமிழ் மொழிப் புலமை நிரம்பப் பெற்றிருத்தல் வேண்டுமென்ப தஞ்சியின் வேணவா.

மக்கட் பிறப்பினா லெய்து முதியர் தமிழ் மொழிச் சுவை நுகர்தலே யாமென்பது மந் நுகர்ச்சிப் பொருட்டே

யொவ்வொருவரு முயிர் வாழ்தல் வேண்டுமென்பது மதற் காவன செய்தலே யாவரு மேற்கொளுந் தொழிலென்பது மச்சுவை யூட்டும் புலவரே கட்காண் கடவுளென்பது மவரைப் போற்றியொழுகுதலே கடவுள் வழிபாடென்பது மவர்க் கிஞ்ஞாலமுழுது மடிமை யென்பதூஉ மென்றிவை நெடுமா னஞ்சியி னகலா வுளக்கிடை.

அவனு மவ னுடைமையு மெல்லாம் புலவ ருடைமையே யாம்.

அவன் காலத்துத் தலைவரெல்லாம் புலவர்ப் பேணு தலு மவராற் பாடப் பெறுதலுமே தமக்குப் பெருமை நல்குவன வெனக் கொண்டனராய் அவற்றிற்கே தம் முடல், பொரு, ளாவி யெல்லா முரிய வாக்கினர். அவருண் முன் வைத் தெண்ணத் தக்க சிறப்புடையவ னெடுமா னஞ்சியே யாம்.

அஞ்ஞான்றைத் தமிழ்த் தலைவர் பலருந் தம்மு ளொத்துணை யழுக்காறு கொண்டு முரணிப் பொருவா ராயி னும் புலவரை வழிபடுதலி லொன்றிய வார்வ முடையரா யிருந்தனர்.

புலவர் பலரு மத்தலைவரு ளொருவர் பாங்கு படா தெல்லாரையு மொப்ப வுள்ளவாறு புகழ்ந்து பாடி அவர்கட் கூக்கமு முணர்வுஞ் சுவையு மூட்டி வந்தனர். காரியையுங் காரியாற் கொல்லப்பட்ட ஓரியையு மொப்பப் பரணர் பாராட்டிப் பாடினர். சேரமான் றகடூ ரெறிந்த பெருஞ்சேர லிளம்பொறையையு மவனால் வெல்லப்பட்ட

நெடுமா னஞ்சியையும் பாராட்டிப் பாடினர் பொன்முடியார். ஏனைப் புலவரு மதுவே

தலைவரு மிவர் தம்மெதிரியைப் புகழ்ந்து பாடினு ரெனப் புலவர்மே லன்பும் வழிபாடுஞ் சிறிதுங் குன்றாராய் மகிழ்ந்து வேண்டுவ நல்கிப் புரந்தருவர்.

அஞ்ஞான்றைத் தலைவர்பலரும் தாம் புலவராற் பாடப் பெற்றபின் றம்வாழ்க்கை யென்றுறெனுங் கவலைகொள்ளார்.

இத்தலைமக்க ளானே புலவர் பாடுதற்கேற்ற செய்தி அவர்க்கு மேன்மேற் கிடைத்துக் கொண்டிருந்தன.

அங்ஙனம் பாடுதற்குரிய பொருள்வளங் கிடைத்ததனு லளவில்லாத வினிய பாடல்க ளுளவாயின

அவையெல்லாஞ் சொற்செறிவும் பொருளுட்பமு மமையப் பெற்றவாய்ப் புலவர் புரவலர் பொதுமக்களெல் லார்க்கு மொப்பக் கழிபெருஞ்சுவையும் நல்லுணர்வு மளித்தன.

அதனு லஞ்ஞான்று மன்னர் தம்முட் செய்யும் போரல் லது வேறு பூசலுங் களவுங் கொலையும் பொய்யு முதலாய கொடுமை யெல்லாம் பெரும்பாலு மிலவாயின.

அவை தமிழகம் புக்க தமிழரல்லார் மாட்டே மலிந் திருந்தன.

அக்காலைப் புலவரும் புரவலரு மாக்கிய பெருமை யன்றோ வின்று தமிழ்க்குந் தமிழர்க்குந் தமிழகத்திற்கும் நந்தா விளக்காகி மிளிர்வது.

அப்பெருந்தகை மக்களில்லையே யின்று தமிழெங்கே? தமிழரெங்கே ? தமிழகமெங்கே?

இன்று தமிழுந் தமிழருந் தந் தமிழகத்திலேயே சிறைப்படுத் திழிவுபடுத்தப் பட்டனர்.

நேர்முக மாகவேனு மறைமுக மாகவேனு மச்சுறுத் தப்பட்டோ ஏமாற்றப்பட்டோ தமிழர் தமிழரல்லாதார்க்கே யடிமையா யிருந்து வருவதே தம்முயர்வுக்குப் பெருந் தகையா யுள்ள தென்பதனைத் தா மின்னு முணராது மயங்கிக் கிடக்கின்றனர்.

தாமுந் தஞ் சுற்றமுமே வெயில் புகாது நிழல் வதிந் துண்டுடுத் தின்புற்று வாழ்தலே குறிக்கோளாக வுடைய ராய் அதன் பொருட் டெளிய மக்க ளெல்லாரையு மெஞ் ஞான்று மெழவொட்டா தடிமையாக்கிக் கொண்டிருத்தலே நோன்பாக வுடைய முதலாளிகளும் ஆரியப் பார்ப்பனருஞ் செய்யுஞ் சூழ்ச்சியு ளகப்பட்டுப் பெரும்பாலுந் தமிழர் தம் ஆற்றலு முதன்மையு மிழந்து தந்தமிழையுந் தம்மை யுந் தந்தமிழகத்தையும் பாதுகாத்துக் கொள்ள வியலாதவ ராய்த் தஞ் சான்றாண்மையை விற்றுத் துன்புற்று நலி வுறுகின்றனர்; அதனாலாகுங் களவு கொலை முதலிய கொடுமைகட்கோ அளவில்லை.

கடவுள தியற்கை யாற்றலையும் உலகியல்பையு மெண்ணி நோக்காது பிறகாட்டாருடைய போலியாற்றலை வியந்து பாராட்டுவது மதற்கு நன்றியறி வுடையர் போன்று கூத் தாடுவது மவர்க்குக் கீழ் அவ ரேவல் செய்வதிற் பெருமை கொள்வது மவருடைய பிறப்பு நாள் கொண்டாடுவது

மவர்க்குக் கோயில் கட்ட முனைவதுமே தொழிலா யிருக்கின்ற போலித் தமிழர் நிரம்பியிருக்கு மிக்காலத் தமிழகம் உலகத்து நாடுக ளெல்லாவற்றுள்ளு மிழிந்த தென்பது சொல்ல வேண்டுமோ?

பிற நாட்டாரை யுட்புக விடிற் றமிழகத்தின் றூய்மை கெடுமென வஞ்சியே யக்கால நெடு மா னஞ்சி, மலையமான் றிருமுடிக்காரி முதலிய தலைவரெல்லாம் வலிந் துட்புக முயன்ற ஆரியரைத் துரத்தியடித்து வந்தனர். இவ்வாரியரே பல்லவரென்பவர். இவரைத் தன் முள்ளூரில் வைத்துப் பொருது மலையமான் றிருமுடிக்காரி புறக்கொடை கண்டது,

"ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப
பலருடன் கழித்த வொள்வாண் மலையன
தொருவேற் கோடியாங்கு...... "

(நற்றிணை 170.) எனவரும் நற்றிணைச் செய்யுளா னுணரலாகும். ஆரியப்படை தந்த நெடுஞ் செழிய னென்னும் பெயரு மீண்டு நினைக்கற்பாலது.

பல்லவர்க்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே ஆரியருட் பார்ப்பனர் நந்தமிழகம் புக்கனர்.

அவரெல்லாந் தமிழ் மொழியை நன்கு பயின்று செந்தமிழியல் கெடாதவாறு வழங்கியும் செய்யுள் யாத்தும் வாழ்ந்து வந்தனர்; இல்லையே லிங்கு வாழ முடியாதவராயினர். அவர் சிறிதுந் தூய தமிழைக் கெடுக்க நினைக்கவுமில்லை. அவரானேயுந் தமிழ் வளர்ந்த தெனல் வேண்டும்.

அதற்கு வாயிலா யிருந்தவர் மூவேந்தரும் நெடுமா னஞ்சி முதலிய தலைவரு மாவர். அவர் பிற்காலத்துப்போல அக் காலத்து அவரவ ரூழ்வினைக்கு மாறாக மகப்பேறு, செல்வப் பேறு முதலிய வற்றை நல்குவனவாகச் சொல்லப்பட்ட போலி வேள்வியையும் புரியாத மொழியோசையையுங் காட்டித் தமிழரைத் தம்மகப்படுத்த முயலவு மியலாது.

ஆரியப் பார்ப்பனர் குடிபுகு முன்னரே தமிழருட் பார்ப்பனர் வாழ்ந்தனர் தம் பார்ப்பனருடைய தொழிலை மேற்கொண்டிருந்தமையா லவ்வொற்றுமைபற்றியே யவ் வாரியரையுந் தமிழர் பார்ப்பனரென வழங்கலாயினர்.

அயற் பார்ப்பனரோடு வேற்றுமை தோன்றத் தம் பார்ப்பனரைத் தமிழர் ஊர்ப்பார்ப்பனரென வேறுபடுத்து வழங்கினர்; தமக்குரிய கோயின் முதலியவற்றை யவ்வவ் வூரார் ஊர்க்கோயி லென்றாற் போல வழங்குதல் இன்றுங் கண்கூடு.

ஊர்ப்பார்ப்பனர் தமிழராதலின் வட மொழியாளர்க் குரிய வேள்வி முதலிய செய்திலர். அதனாலவர் வேள்வி செய்யாத வூர்ப்பார்ப்பாரென்னும் பொருள்பட வேளாப் பார்ப்பாரெனவும் வழங்கப்பட்டனர். இது "வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த, வளைகளைந் தொழித்த கொழுந்தி னன்ன" (அகம். 24.) னெவரு மகநானூற்றுச் செய்யு ளடியானு மதன் பழைய குறிப்புரையானு மினி துணரப்படும்.

ஊர்க்கோயில் வழிபாடு செய்வித்தலும் ஊர் மணவினை நடத்தி வைத்தலும் பார்ப்பனர்க் குரிய தொழில் போலும்.

அவ ரத்தொழிலொழிந்த பொழுது வளைபோழ்தன் முத லிய வேறு மனைக் கைத்தொழிலுஞ் செய்து விற்றுப் பொருள் பெறுதன் மரபு. இக்கூறியவாற்ருன் வடமொழிக் கும் வடமொழியாளர்க்குஞ் சிறிது மியைபில்லாதவர் ஊர்ப் பார்ப்பனரென்பது பெறப்படும்; பூணூற்கு முரியரல்லர்.

இவ் வளைபோழு மூர்ப்பார்ப்பன ரினத்தைச் சார்ந் தவரே மதுரைக் கணக்காயனுர், அவர் மகனுர் நக்கீரனுர், அவர்மகனுர் கீரங்கொற்றனுர் முதலிய தமிழ்ப் பெரும் புலவர்.

கபிலர், திருவாதவூ ரடிகள் என் றிவர் முதலிய தமிழ்ப் பெரும் புலவர்களு மூர்ப்பார்ப்பன ராதல் வேண் டும்.

பல்லவ ராட்சித் தொடக்கத்தின் பின் வேறு பிழைப் புக் கிடமில்லாத ஆரியப் பார்ப்பனர் ஊர்ப்பார்ப்பனர் தொழிலைக் கைப்பற்றி வந்தனர்.

• பார்ப்பா ரென்னுஞ் சொல் பிராமணரென்னும் வட சொல்லின் மரூஉ வென்பாரு முளர்.

ஊர்ப்பார்ப்பன ரென்னும் வழக்குண்மையானும் மக ரம் பகரமாகாமையானும் ஈற்றயலெழுத் தகரமன்றி யாகார மாதலானும் அவ்வாகாரத்தின் றிரிபே அகர மாதலானும் அவ்வாறு கோடல் பொருந்தாது.

வேட்டுவர் மற்றை விலங்கு, பறவை முதலியவற் றைப் பிடித்துக் கோடற்காகப் பற்றிப் பயிற்றி வைத் திருக்கு மவ்வவற் றினமாகிய விலங்கு பறவைகட்குப் பார்வையென்னும் பெயர் பண்டு தொட்டு வழங்கி வருகின்

றது. பார்வை மான், பார்வை யானை யென்றாற் போலும் வழக்குப் பயிலும்.

பார்வை பார்ப்பு எனவும் வழங்குதற் குரித்து.

கடவுள் தன் வழிப்படாத மாந்தரை யகப்படுத்து வழிப்படுத்துதற் பொருட்டு முன்ன ரகப்படுத்துத் தன் வழிப்படுத்துப் பயிற்றிவைப்ப அவன் றன்னினத்தை யழைப்ப அவ்வினத்தை மறைந்திருந்து வேட்டம்பார்க்குங் கடவுண் மெல்லச் சென்று பற்றிக்கொள்ளும்; அங்ஙனந் தன்னினத்தை யழைக்கு மவனுக்கு அப்பொருண்மை தோன்றப் பார்ப்பானெனப் புலவர் பெயரிட்டு வழங்கினர். பார்ப்பா னென்னுஞ் சொல்லினின்றும் பார்ப்பனன், பார்ப்பனி யென்னுஞ் சொற்க ளுண்டாயின. பார்வை யென்னுஞ் சொல் உயர்திணையோ டியைதற்பொருட்டே பார்ப்பென நின்றது. பார்ப்பான் றொழில் பார்ப்பு. பார்ப்பனரினமும் பார்ப்பெனப்படும்.

மெய்யுணர்வு கொளுத்து மாசிரியன் வாயிலாக விறைவன் செவ்வியுடைய மக்களாகிய புட்சிமிழ்த்தலை மானைக் காட்டி மானைப் பிடித்தல் போலு மெனப் பலரு மொப்புக் காட்டுதலு மீண்டு நினைவு கொளற் பாலது.

பாம்பு முதலியவற்றாற் கடியுண்ணன் முதலிய கோளாறு நேர்ந்தவழி அவற்றை யவ்வக் கடவுணினைவொடு வாய்மொழி நவின்று மாற்றுதலைப் பார்வை பார்த்த லெனவும் அது செய்பவனைப் பார்வை பார்ப்பவனெனவும் வழங்கும் வழக்காறு மிதனை வலியுறுத்தும்.

இன்னோரன்ன தூய தமிழ்ச்சொற் பலவற்றையும் வடசொல்லெனச் சொல்லி வடமொழியாளர் தமக்கு முதன்மை புனைந்துகொண்டு பொதுமக்களை யேமாற்றிப் பிழைக்கும் வழக்கமெல்லாம் பல்லவ மன்ன ராட்சியிலே முளைத்து வேரூன்றின.

பல்லவர் தமிழ்மொழியை வளர்த்திலர்; தமிழ்ப் புலவர்களை அவ்வளவு பேணினவ ரல்லர்; தாங்கள் ஆரிய மொழியையே முயன்று கற்றனர்; ஆரியமொழி வளர்த்த லிலே யூக்கங்கொண்டனர்; ஆரியப் பார்ப்பனர்க்கே அள விறந்த முற்றூட்டுக்களை யளித்தனர்; ஆரியமொழி நூல் பலவற்றைச் செய்வித்தனர்; அந் நூலாக்கியோர்க்கே பெரி தும் பரிசளித்துப் பேணினர்; கோயிற் றொழிலினு மண வினை நடத்துதலினு மூர்ப்பார்ப்பனரை விலக்கி ஆரியப் பார்ப்பனரையே யமர்த்தினர்; அதனால் அத்தொழிலை யூர்ப்பார்ப்பன ரிழந்து வேறு தொழில் செய்து மறைவா ராயினர்.

பல்லவரைப் பின்பற்றிச் சேர சோழ பாண்டியரு மேனைத் தலைவரு மொழுகுதலில் ஆர்வங் கொண்டனர்; ஆகவே நாளடைவிற் றமிழ் மொழியின் வளர்ச்சியும் பெரு மையுந் தமிழ்ப் புலவர்களின் முதன்மையு மேன்மேற் குன்றிவருவன வாயின.

இலக்கணவிளக்க நூலாசிய ரினத்தாரும் மிதிலைப் பட்டி யழகிய சிற்றம்பலக் கவிராய ரினத்தாரும் இராமா யணம் பாடிய கம்ப ரினத்தாரும் பழைய ஊர்ப்பார்ப்பனர் மரபினராவர்.

இலக்கணவிளக்க நூலாசிரிய ரினத்தினர் வளைபோழ் தற் குரிய வேதாரணிய முதலிய கடற்கரைப் பட்டினத்து மிக்கு வாழ்வர்; இவர் தேசிகரென வழங்கப்படுகின்றனர்; தருமபுரப் பெரும்பள்ளி முதலாயின இவர்களுடையனவே. இவர் தம தூர்ப்பார்ப்பனத் தொழிலை வடமொழியாளர் கைப்பற்றி அத்துறையில் அவர் மேம்பாடுற்றது கண்டு தாமு மவர் நிலைபை யவாய் வாயுரை முதலிய பலவற்றானே வடமொழியாளர் போலத் தம்மைக் காட்டிக்கொண்டு போலிகளாயினர்.

இங்ஙனந் தமிழ் வளங் குன்றிய விடத்துப் பழந் தமிழ் நூல் பலவற்றைப் பேணுதலை விருமபாராய் ஊக்கந் திறம பினர்; அவை பலவு மிறந்தன. தமிழக முழுதினையும வடமொழி நூலும் வடமொழி வழக்கும வடமொழியாளரு மெளிதிற் கைப்பற்றிக் கொள்ளலாயிற்று.

பாடுதற்குச் சிறந்த பொருள் கிடைக்கவில்லை. அதனாற் சிறந்த தனித் தமிழ்ப் பாட்டுக்கள் உண்டாகவில்லை. போலிப் பொருட்குப் போலிப் பாட்டுக்களே தேவைப் பட்டன. அதனால் வடசொல்லுந் தமிழ்ச்சொல்லும் விராய்க் குழறித்தருங் குழறுபாட்டுக்கண் மலிவன வாயின. இவையெல்லாங் கால வெள்ளத்தால் நேரு மேடு பள்ள மென வெண்ணி யமைவதல்லால் வேறென்செய வல்லம் யாம்.

இன்ன விழிவு நேரக்கூடுமென முன்னரே குறிக் கொண்டு பாதுகாக்க முனைந்த காலந்தான் அதியமா னெடுமா னஞ்சியின் காலம்.

இவன்போன்ற புலவர் புலவர்க்குத் தம் பெரும் பொருளை வைத்தெடுக்கும் பொற்பேழைகளா யிருந்தனர். புலவர் எப்பொழுது போனாலு மெவ்வளவு பொருள் வேண்டுமானாலு மவர்பாற் போனவுட னெடுத்துக்கொண்டு வரலாம்.

அவர்பாற் புலவர் பாடும் பாட்டுக்களே யப்புலவர் தம் பொற்பேழையைத் திறக்குந் திறவுகோல்.

அப்பேழைகளை வேறு திறவுகோல் கொண்டு திறக்க முடியாது.

அஞ்ஞான்றைப் புலவர் பலருந் தம்மு ளழுக்காறின்றி யொருவர்க்கொருவ ருதவிசெய்து பரிவுற்றொழுகுப.

புலவராய் வாழும் வாழ்க்கையே விண்ணக வாழ்க்கை யாயிற்று. இன்றிவ்வாழ்க்கை மண்ணக வாழ்க்கையிற் கடையாயிற்று.

அந்நாளிற் புலவரே தமிழகத்தை யாட்சி புரிந்து வந்தன ரெனல் வேண்டும். முடியுடை மன்னரெல்லாம் முடிசூடா மன்னராகிய புலவரேவல் செய்தொழுகும் பணி யாளரா யிருந்தனர்.

இன்றோ கல்வி வேண்டாமே மக்கள் கூட்டாவுப் பயிற்சியானே யெல்லார்க்கு மெளிதின் வரக்கடவ அரசிய லுணர்வு தமிழ்ப் புலவர்க்குச் சிறிதுங் கிடையாது; வரவு மாட்டாதெனை முடிவு கட்டி யொதுக்கி வைத்து விட்டனர் மடமையிற் சிறந்த பெரியோர் பலரும்,

அன்று தலைவர் பலருந் தமிழ்க் கல்வி கற்கச் செவ்வி போதாதிருந்தும் புலவரொடு நட்புற்றுப் பயின்றுவரு மாற்றானே தலைவரும் புலவராயினர்; அவருள்ளே நல்லிசைப் புலவ ராயினாரும் பலருளர். அம்முறையா லதியமா னெடுமா னஞ்சியும் நல்ல புலமை வாய்ந்திருத்தல் வேண்டும்.

தலைவர் தாமே தமிழ்க் கல்விச்சுவை யுணரவல்லராயின் அவர்பாற் செல்லும் புலவர்க் கெய்துஞ் சிறப்புச் சொல்ல வேண்டுமோ? அஃதில்லாத குறையேயன்றோ வின்றைய தமிழ்ப் புலவர்க் குற்ற குறைக்கெல்லாம வித்தாகியது.

"ஏதிலா ரார்த் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை"

(முப்பால், பொருட்பால், பேதைமை. 7) என்றவாறே யாயிற்று இன்றைய தமிழகத் தலைவர் நிலை.

## எழினி யிற்கிழத்தியார்.

இங்ஙனம் விலங்காகாது மகன் மகனேயாகித் தமிழ்ப் புலவர் பாதுகாவலனாகிய நெடுமா னஞ்சியை அவனுடைய அருமை யத்தைமகளாரே காதலித்து மணஞ் செய்து கொண்டனர். அந்நங்கையா ரொருநல்லிசைப் புலவர், அஞ்சிசெய்த தவமே தவம். அஞ்சியினுடைய அன்பு முதலிய நற்பண்புகளும் தமிழ்மொழிச் சுவையார்வமும தமிழ்ப்புலவர்களை வழிபடு மாண்பும் நன்கு செழித்தோங்கி நிலைபெற்று நாட்டுக்கெல்லா மவன் பேருதியமாகத் திகழ்தற்கு அவன் காதற்கிழத்தியாரும் பெருநற்றுணையா யிருந்தனர்.

அஞ்ஞான்றை யிற்பெண்டிரும் புலவராகுமளவு தமிழ் வாணராய்ச் சிறந்திருந்தன ரென்பதற்கு அஞ்சியின் வாழ்க் கைத்துணையாரு மொருசான்றுவர்.

அந்நல்லிசைப் புலமை மெல்லியலார் பெயர் நாகை யென்பது. அஞ்சி சிறந்த புகழ்பெற்றுக் குலவிளக்கா யிருந்தமையானே நாகையார் தந் நல்லம்மான் சேயை மணந்துகோடற்கு முன்பே அஞ்சி யத்தைமக ளுகையா ரெனவே வழங்கப்பட்டனர்.

அவர்தம் மணத்திற்கு முன்பே அஞ்சியின்மேற் பாடப் பட்ட,வோராருமைப்பாட்டு உருத்திரசன்மனூரா லகநானூற் றிற் றொகுக்கப்பெறும் பெருமை வாய்ந்தது. அது வரு மாறு,

"முடவுமுதிர் பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமி ழருவிப் பாறை மருங்கி
னாடுமயின் முன்ன தாகக் கோடியர்
விழவுகொண் மூதூர் விறலி பின்றை
முழவன் போல வகப்படத் தழீஇ
யின்றுணைப் பயிருங் குன்ற நாடன்
குடிநன் குடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியல னன்பின னெனநீ
வல்ல கூறி வாய்வதிற் புணர்த்தோய்
நல்லை காணிற் காதலந் தோழீஇ
கடும்பரிப் புரவி நெடுந்தே ரஞ்சி
நல்லிசை நிறுத்த நயவரு பனுவற்
றொல்லிசை நிறீஇய வுரைசால் பாண்மக

னெண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினு மினியனு லெமக்கே''.
(அகம். 352.) என்பது.

இவ்வகப்பாட்டு வரைந்தெய்தியபின்றை மணமனைக் கட் சென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லிய தென்னு மகத்திணைத் துறைப்பொருண்மேற் பாடப்பட்டது இதன் றுறைப்பொருள் வரைவுமலிந்து சொல்லிய தோழிக்குத் தலைமகள் சொல்லியதெனவுங் கொள்ளலா மென்ப.

இப்பாட்டகத்தே யஞ்சியி னினிமையைப் பாண் மகன் பண்களுட் புதுவதுபுனைந்துளர்ந்த திறப்பண்ணி னினிமையினு மிக்கதெனப் புனைந்திருத்தலால் நாகையார் இன்னிசையுங் கற்று வல்லுநராதல் வேண்டும்.

இப்பாட்டினுனே நாகையா ருள்ளத்தை நெடுமா னஞ் சியி னற்பண்புக ளெவ்வளவிற் கவர்ந்துள்ளன வென்பது புலனும்.

அவ ரிதன்கண் அஞ்சியின் அழகையும் ஆண்மையையு மெடுத்தோதிற்றிலர். அவனுடைய குடிப்பிறப் பொழுக் கம், நட்பின் சிறப்பு, இன்சொல், அன்பு என்னு மிந்நாற் பண்பு நான்கே யெடுத்தோதினர். இவற்றையே யஞ்சிபாற் கண்டு பெரிதுங் காதலுடைய ராயினர் நாகையார். ஆண்மை குடிப்பிறப்பின்பாற்படும்.

இதனுல் இற்பிறப்புமகளிர் தா மணஞ்செய்து கோடற் குரிய காதலன்பாற் காணவேண்டுவன மேற்கூறிய நான்கு மேயல்லது அழகுங் கைப்பொருளுங் காமத்தையெழுப்புங்

தோற்றமு மல்லவென்ப துணர்த்தினு ராகின்று ரஞ்சி யத் தைமக ளுனையார். இவ்வுணர் விவர் கல்விகற்றதன் விளைவாகும். இது மகளிர்க் கின்றியமையாதது. அதனு லிவ்வுணர்விற் கின்றியமையாத கல்வியில்லாத மகளி ரெங் ஙனந் தந்நலனைக் காத்தோம்ப லொல்லும்

இத்துணைத் தந் நலம்மான் சேய்பா லீடுபாடுடைய நாகையா ரவனையொழியக் கரும்பு விற்கைக் காமவேளை யெதிர்வரினு மேறட்டுப் பார்ப்பரோ? பாரார்.

இவர் பாடலைக் கேட்டபிற்பாடு அஞ்சி தானு மெங் கெங்குத் தனித்திருந்து எத்தனைநா ளுணுறக்க மின்றி யென்னென்ன வெண்ணி யல்லும்பக லு மெண்ணத்தி லாழ்ந் திருப்பா னென்ப தவ னுள்ளமுங் கடவுளு மறிவதல்லது வேறியா ரறிவார்?

அஞ்சி தமிழார்வ முடையனுதலிற் றமிழ்ப்புலமை யில்லாத பெண்ணை மணஞ்செய்துகோடலினு மணமின்றி வாழ்நாளளவு மிருந் திறந்துவிடுதலே தக்க தென்னுங் கடைப்பிடி யுடையனு யிருக்கக்கூடும்; அஃ தறிந்த நாகையார் தம்மை யவன் மணமுடித்துக் கொள்வ தற்காக விவ்வருமைச் செய்யுளைப் பாடித் தந் தகுதியை யுணர்த்தினரோ வென்னவோ?

தமிழ்வளர்க்கின்ற வள்ளலுக்குத் தக்க பரிசளித்து மகிழ்வித்தற்காகத் தமிழ்க்கடவுள் அவனுக்கு நாகையாரை, மகட்கொடை நேர்ந்தது தக்க பொருத்தமேயாம. எண்ணம் போல வாழ்வென்பது பழமொழி.

நெடுமான் மணஞ்செய்துகொண்ட பிற்பாடு அவனில்லம் புலவர்க்கெல்லாஞ் தாயக மாயிற்று.

புலவர்க் கியல்பாகவே யானுது கொடுக்கு மவன் இப்பொழுது தன்காதலியார்பா லுள்ள காதலானுங் கொடுக்க வேண்டுமென்னு முள்ள மளவுகடப்பப் பெருகிற்று. ஏனைப் புரவல ரில்லத்தினு மஞ்சியில்லத்தி னிப்பொழுது புலவர்க்குக் கிடைக்கும் பரிசி லிரட்டியாயிற்று ஒளவையார்க்கோ அதியமான் வீடுதான் வீடு. அவர்க்கு மற்றைப் புரவல ரில்லத்துப் பரிசின்மட்டுமே கிடைக்கும்; அதியமானில்லத்துப் புலமைமிக்க நாகையாரொ டளவளாவு நட்புச் சுவை யின்பங் கிடைத்தலரிது.

புலவர்யாவருந் தங் கல்வித்திறமை யுணரவல்லவரிடமே தா மெய்யன்புவைத் தொழுகுதன் மரபு. அதியமா னில்லு ளவரிருவருங் கல்வித்திறமை சீர்தூக்கவல்லவ ராயினமையின் ஒளவையார் முதலிய நல்லிசைப்புலவர் பலரு மங் கடுத்தடுத்துப் போய்வர விழைவர். அஞ்சி யில்லமே ஒரு பல்கலைக்கோட்ட மெனலாம்.

அங்குப் போனால் ஒளவையார் அதனைவிட்டு மீள மாட்டாது பன்னாட் டங்குவர். அவர் பன்னாட் டங்கிய பின்னுரு மவரைவிட்டுப் பிரியலாற்றார் அதியமானும் நாகையாரும்.

ஒளவையார் நாகையாரொ டுரையாடிக்கொண்டிருப்பராகில் எங்கெழிலென் ஞாயி றெமக்கென் றிருப்பார். அஃதொக்கும். புலவர்தம முளவனாவதினு மிக்கவின்பம வானோர்க்கு மில்லைத்தானே.

பெண்பாலார் தாங் கல்விகல்லாமே எத்தனை நாளா ஞனுமொப்புமைமுதலிய நயங்களோடு மொப்பாரி முதலிய பாட்டுக்களோடு மெய்ப்பாடு காட்டி யுரையாடிக்கொண் டிருக்கு மாற்ற லியல்பாகவே யுடையர். அங்ஙனமாகத் துறைபோகக் கற்று வல்ல மகளிரிருவர் தம்முளுரையாடப் புக்காற் சொல்லவாவேண்டும்.

மனைக்கண் மகளிர்கட்டுக்கு விருந்து ஔவையாரும் நாகையாரு முரையாடிக்கொண்டிருக்குங்கா லுங் குணவுண் டற் பொருட்டு வரு மதியமான் அவ்விருவ ருரையாட்டுச் சுவை மாந்தியயர்ந் துணவு மறந்து தானுணவுண்டதாக நினைத்துக்கொண்டு போய்விடுவது முண்டு.

நாகையார் ஔவையாரோ டுரையாடுவதுபோல ஏனை யாண்பாற் புலவரொடு தாராளமாக வுரையாடமாட்டார்; கல்வி கல்லா அசட்டுப் பெண்டிரோடுரையாடவும் விரும் பார்; அதியமானொடிருந் துரையாடிக்கொண்டிருக்கவேண்டு மென்ப தவரதவா வாயினு மவற்குரிய கடமையோ பல. அவற்றை முடித்தற் கவன் செல்லவேண்டு மாதலால் அவ் வவாவையு மவரடக்கிக் கொள்ளல் வேண்டுவதாயிற்று. ஆகவே ஔவையாரைக் கண்டுவிட்டால் அவரைப் போக விடாமற் செய்யவேண்டு மென்பதுதான் நாகையார் நினைவு. ஔவையார் அஞ்சிபாற் பரிசிற் பொருட்டு வருபவராகத் தோன்றவில்லை. தம்மருமை மகளையு மருமகனையும் பார்த்து நாளாயிற்று; போய்ப் பார்த்துவரல் வேண்டுமென நினைத்து வருவார் போன்றே வருவார் அவர்க்கு நெடுமான் பரிசில் கொடுப்பதில்லை. அவர் தாமே தமக்கு வேண்டுவன வற்றை யெடுத்துக்கொண்டு போகல்வேண்டும்.

அஞ்சியைப் புகழ்ந்து பாடுதலில் ஔவையார்க்குள்ள வார்வ மளவிறந்தது.

வேள்பாரிக்குக் கபிலரும் வேளாய்க்கு ஏணிச்சேரி முடமோசியாரும்போல அதியமானுக்கு ஔவையார் ஆருயிர்க் கேண்மைப் புலவர்.

ஔவையார் வந்தவுடன் அவரை முதலில் உண்டு மகிழச் செய்துவிட்டுப் பின்பு அவர் தன்னருகிருந்து பாடிக்கொண்டிருப்பப பாட்டுக்கேட்டுக்கொண்டு மகிழ்ந்து கொண்டே தானுணவுண்ணும் வழக்க முடையவன் அதிய மான். இங்ஙனம் புலவர் பாடற்சுவை யார்தலா னவனுக் கிடைவிடா துள்ள வின்பத்தாற்றன்பமென்பதனையறியான்; ஆயினு மதியமானுக்குப் புலவர்களைப் பிரித லாற்றாத துன்ப மொன்றனை விலக்கிக்கொள்ள முடியாமை யிருந்துவந்தது.

அத்தகைய புலவர் தோழன் ஓருநாள் எவ்வாற்றானோ தன்னையுண்டாரை நெடும் பல் யாண்டுகட்கு வாழச் செய்ய வல்ல மருந்தாதற் றன்மையுடைய அரிய நெல்லிப் பழ மொன்று கிடைக்கப்பெற் றில்லங் கொணர்ந்தான். கொணர்ந்து கனியி னருமை பெருமை யுணர்ந்த வவன்றன் காதலியார்க்குக் காட்ட வவ்விரு காதலரு மொருமித்து இத்தகைய கனியை நம் மௌவையார்க்கே நல்கல் வேண்டு மென்றிருந்து அவர் வருதலு மவர்பால் யாது முரையாதே யம்ம! விந்நெல்லிப்பழ முண்மினோ வென்றனுக வதியமான், அவரும் யாதும் வினாவாதே யதனை வாங்கியுண்டு சுவைத்து மகிழ்ந்தின்புற்ற பொழுது அதியமான் அவ்வருங் கனியின் வரலாற்றை ஔவையார்க் கெடுத்துரைத்தான்; உரைக்க அதுகேட்ட வவர்க் கெழுந்த வியப்பு மகிழ்வு மம்மட் டிம்

மட்டல்ல. என்னே! யிவ் வள்ளலது பெருந் தகைமை. இவன் தமிழின்கண்ணுந் தமிழ்ப் புலவர்கண்ணும் வைத்திருக்கு மார்வந்தா னென்னே! இவன்போலுந் தமக்கென வாழாப் பிறர்க்குரி யாளரா னன்றோ வின்றிவ் வுலக மிருந்து வராநின்றது இன்றேற லென்னாகு மெனித்திவ் வுலகெனெ நினைந்து நினைந்து அஞ்சியை நோக்கி, அம்ம! நீ யென்னைச் சாவாமைச் செய்த நல்வினைப் பேற்றானே கூற்றுதைத்த குழகன் போல மாயாது மன்னுகவென வாயார வாழ்த்தினர். அவ ரங்ஙனம் வாழ்த்திப் பாடிய வகவற் பாவொன்றும் வெண்பா வொன்றும் வழங்குகின்றன.

. அஞ்சிக்குத் தமிழ்ச்சுவை நுகரா திவ்வுலகின் வாழ விருப்பமில்லை. தன் னுயிரைக் காட்டினுந் தமிழ்ப் புலவரே யினிய ரென்ப தவன் றுணிபு. தனக்கு முன்னர் ஔவையார் காலஞ் சென்றுவிட்டால் தா னெல்லிக்கனி யுண்டமையால உயிர் போகமாட்டாது நீண்டநா ளிருப்பது துன்பமாகவே முடியும். அன்றியுந் தானிறந்த பின்னர் ஔவையாரிருந்து தன்னைப் பாடல்வேண்டு மென்னு மெண்ணத் தாலு மவரை நாமிருக்கு மளவுந் தமிழ்ச்சுவை யூட்டிக் கொண் டிருக்கச் செய்ய வேண்டு மென்னு மெண்ணத்தாலும் அருமையுடைய பொருளை யாருயிர் நண்பர்க்குக் கொடுத்தன்றி யிருக்கமுடியாத நட்புரிமையாலும் நெல்லிக் கனியை ஔவையார்க் கதியமா னளித்தது தகுதியுடைத்தேயாம்.

> "அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
> ரென்பு முரியர் பிறர்க்கு"

(புப்பால் அன்புடைமை. 2.) என்பது பொய்யாமொழி

இவ்வரும்பெரு வள்ளன்மை கேட்ட புலவரானே அதியமான் தலையெழுவள்ளல்களு ளொருவனாக வைத்துப் போற்றப்பட்டான்.

எழுவள்ளல்களு மிவரெனக் கூறுஞ் சிறுபாணாற்றுப் படையுள்ளே

"... ... ... ... ... ... ... ... ... ... ... மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த
வுரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவே
லரவக்கடற் றானை யதிகனும் ... ... ... ..."

(99. 103.) என வருமாற்றான் அதியமான் வள்ளலெழுவரு ளொருவ னென்பது மவ்வுயர்வுக்கு வாயி லின்ன தென்பதுந் துணியப்படும்.

தலையெழு வள்ளல்களை ஆரியர் சொல்வழிப்பட்ட பிறர் கடையெழு வள்ளல்க ளென வழங்கினர். பண்டைப் பாட்டுக்கள் இவ்வெழுவரையு மெழுவள்ளல்க ளெனக் கூறிப் போந்தனவே யொழியக் கடையெழு வள்ளல்களென யாண்டானுங் கூறிற்றில. இவரைக் கடையெழு வள்ளல்க ளென்டா ரிவர் புலவர் புகழ்தற்காகவே கொடுத்தாரெனப் பொய்யுரைப்ப.

"இம்மைச் செய்தது மறுமைக் காமெனு
மறவிலை வாணிக னாஅ யல்லன்
பிறருஞ் சான்றோர் சென்ற நெறியென
வாங்குப் பட்டன் றவன்கை வண்மையே"

(புறம். 134.) என்னுஞ் செய்யுண் முதலியவற்றி னுமை நயமறியாதாரே யங்ஙனங் கூறுவரென மறுக்க. தலைவள்ள லெழுவரையுந் தொகுத்தோதுவன சிறுபாணாற்றுப்படை யுங் குமணனைப் பெருஞ்சித்திரனார் பாடிய "முரசுகடிப் பிகுப்பவு" (புறம். 158.) மென்னும் புறநானூற்றுச் செய் யுளு மென்னு மிவ்விரண்டுமேயாம்

சிறுபாணாற்றுப்படை யுடையவன் ஒய்மா னாட்டு நல்லியக்கோடன். இவன் வள்ளல்க ளெழுவர்க்கும் பிற் பட்டவ னென்பது தோன்றிற்று.

குமணன் எழுவள்ளல்களின் காலத்தவனே யாயினு மவ்வெழுவருந் துஞ்சிய பின்னரு முயிர்வாழ்ந்தவ னவன். இது குமணனைப்பாடிய பெருஞ்சித்திரனார் நெடுமா னஞ்சி யையும் பாடியிருத்தலாற் பெறப்படும்.

இந்நெல்லிப்பழம் பெற்றவிடத்தை ஔவையார்,

.......................... ..............தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி ;"

(புறம். 91 ) எனக் குறிப்பிடுகின்றார். இதனால் விடரக மெனப் பெயர் பெற்றதொரு பெருமலையின் குவட்டிற் கனி பெற்றது புலனாகின்றது. விடரகமென்ப தீண்டு மலை முழை யெனப்படு மலையிடுக்கினை யுணர்த்திற்றன்று. 'அருமிசை' யென்னும் வருமொழிப் பொருளொடு மலை முழை யென்னு நிலைமொழிப் பொருட்கு அத்துணை யியை பின்மை கண்டு 'விடரகம்' என்பது அம்மலைப் பெயராக வுங் கருதப்படுகின்ற', தென்ற புறநானூற்றுக் குறிப்

புரையாசிரியர் சாமிநாதைய ரவர்களினது நுண்ணுணர்வு கண்டின்புறற்பாலது. விடாகம் மலைமுழையு ளெனி னும் பொருந்தாத தன்று. அன்றி விடாக மென்றது பெருமலை யென்றதன் குவடுகளு ளொன்றன் பெயராகவுங் கருதலாம். இனிக் கனியுண்ட ஔவையார் ' அருமிசை ' யாகிய குவடென்னுநிற்பச் சிறுபாணாற்றுப்படை "மால் வரைக், கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி" யென்னுநின் றது. ஈண்டுச் சாரலென்பது மலைச் சார லன்று; மலைக் குவட்டின் சாரலெனக் கோடல் வேண்டும். மாலவரைச் சார லென்றதூஉ மது நோக்கியே. வரை மலைக்குவட்டினை யுணர்த்து மென்றல் திருமுருகாற்றுப்படை "மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்" (அடி. 12) என்னு மடியுரை யில் "இனித் திருமால் போலுங் குவடுக ளோங்கிய வெற் பென்றுமாம; "மாயோ னன்ன மாலவரைக் கவா அன்" (நற்றிணை. 32) என்றார் பிறரும்." என நச்சினார்க்கினிய ருரைக்குமாற்றானுந் துணியப்படும். "வரைக்கவா" னென்றலின் மலைச் சாரலென்றலே யன்றிக் குவட்டுச்சார லென்றலும் வழக்காறும். இம்மலையைக் கொங்கு நாட்டு மலைகளுட் பருத்திப்பள்ளி நாட்டைச் சார்ந்த கஞ்சமலை யெனப் பெயரிய மலையென வழங்குதலு முண்டு.

இவ்வாலாற்றானே வியத்தகு தன்மையுடையவு மக் களாலெய்தற் கரியவு மாய மருந்து பல மக்கள் பயிலா மலையகத் துளவென்னும் வழக்குரை யொக்கு மென்பது பெறுதும்.

மேலு மலைமருந்துகளானே யெண்பெருஞ் செல்வ மெய்திய இடைக்காடர், பாம்பாட்டியார், குதம்பையார்,

அழுகணியார், கருவூரார் முதலிய வொருசார் முனிவரு ளொருவ ராயினு ரௌவையா ரென்ப துணர்ந்து கொள்க.

கருவயிற் பிறந்த வுயிர்க் கெல்லாஞ் சாத லொருதலை யாக அருநெல்லிப்பழ முண்டார் சாவாமை யாவது நோயு மூப்பு மின்றியே நீடு வாழ்ந்து அறிதுயிற்சண் ஆற்றலான் உடம்பின் மொய்யடுக்குகளை வல்லே பிரித்தலான் உடம் பொடு காணு தொழிதலாம். (மொய் = பிரிக்கலாகா நுண் டுகள்)

கருநெல்லிப் பழந் தன்னை யுண்டாரை நீடு வாழச் செய்வதோர் மருந்தென்பா ராயினுந் தன்னை யுண்ணுத நெடுமா னஞ்சியையும் புகழுடம்புகொண் டொருஞான்றுஞ் சாவா திவ்வையக முள்ளவளவும் நிலவிவாழச் செய்யு மருந்து மாயிற்று.

இசையுடல் வேண்டுவார் தசையுடல்வேண்டா ரென்ப ததியமான்பாற் கண்டாம்.

இந்நெல்லிக்கனியை யுண்டால் நீடு வாழலாமெனக் கேட்ட சொற்றொடர்க்குத் துறைபோகக்கற்று நுண்மா ணுழைபுல மிக்க புலவரைக்காட்டினு மவரோடு பன்னெடு நாட் பயின்ற அதியமான் கண்ட வுரைநயம் பாராட்டற் பாலது.

பொதுப்படக் கூறிய விச்சொற்றொடர்க்கு யாருண் டால் யார் வாழலாமெனத் தன்னுள்ளே யெழுந்த வினுவி னுற் போலும் நுண்ணிய சிறந்த பொருளைக் கண்ட ததியமான்

இது தேவார முதலிகள் மூவரும் வந்தால் அவர்கள் வைத்துப்போன இத்தேவாரச் சுவடிக் கோட்டந் திறக்கப் படுமென்ற தில்லைவா ழந்தணர் கூற்றுக்குத் திருவாரூர்ச் சோழன் அபயன் கொண்ட வுரைநயம் போல்வ தொன்று.

அதியமான் ஔவையார்க்கு அருநெல்லிப் பழ னல்கி யக்கண்ணே வியந்து மகிழ்ந்து பாராட்டிப் பாடிய ஔவை யார் பாடலிரண்டு மெல்லாரும் நினைவிற் கொண்டு நெல்லிக் கனிபோலச் சுவைகொளற்பால வாகலின் அவை யிங்குத் தருதும்.

"வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழறொடித் தடக்கை
யார்கலி நறவி னதியர் கோமான்!
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி!
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும! நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத லின்னகத் தடக்கிச்
சாத னீங்க வெமக்கீத் தனையே"

(புறம். 91) இதனுள் விண்ணோர் மருந்துண்டுஞ் சாவ வொருவரு முண்ணாத நஞ்சுண்டிருந்தருள் செய்யு மிறை வனை நெல்லிக்கனி யுண்ணாதே யுண்டாரிற் காட்டினும் பல்லூழிசெலச் சாவா வுடம்பெய்திய நெடுமாற் கொப்புமை காட்டியது மிக்க நயமுடைத்து. இன்னு மிதனானே நீல மணிமிடற் றொருவன் பிறைமையெல்லா மழித்துத் தன்னை

யழிப்பாரின்றியுந் தனக் கழிவின்றியு மன்னுமாறுபோல நீயும் பகைவரையெல்லா மழித்து நின்னையழிக்கும் பகைவரின்றியும் நினக் கழிவின்றியு மன்னுகவெனவும் அவன் வானோர் வாழ்தற்பொருட்டுத் தான் சாவத்துணிந்து நஞ்சுண்டு வாழ்ந்தாற்போல நீயும் யான் வாழ்தற்பொருட்டு நீ சாவத் துணிந்தனை யாதலின் மன்னுக வெனவும் பால்புரை பிறை பிறர்க் கிருணீக்கித் தானிருள்கொண்டு தண்ணொளி மிக்காற்போலவும் நீலமணிமிடற் றொருவன் பிறர்க்கு நஞ்சகற்றித் தானஞ்சுகொண்டு தண்ணளி மிக்காற்போலவும் நீயு மென் சாவகற்றி நின் சாவேற்றுத் தண்ணளியுந் தண்ணொளியு மிக்கனை யாதலின் மன்னுகவெனவும் பால்புரை பிறைக்கண்ணும் நீலமணிமிடற் றொருவன்கண்ணுந் தம்முண் மறுதலை யாய வெள்ளொளியுங் காரிருளு மொருங்குட னின்று விளங்கி மன்னுமாப்போல இசையுடலாக்கமெய்தத் தசையுட னல்குரவெய்துத லொழிந்து நின்க ணிசையுடலுந் தசையுடலு மொருங்குட னாக்க மெய்தி மன்னுக வெனவும் குழவித் திங்களொடு நீலமணிமிடற் றொருவன் மன்னுமாப்போல நீயும் நின்மகன் பொருட்டெழினியோடு மன்னுகவெனவும் நீலமணிமிடற் றொருவன் கூற்றுவனை யுதைத்து முனிவன் சிறுவனைப் பாதுகாத்துச் சாவாமை யளித்தாங்கு நீயுங் கூற்றுவனை யுதைத் தென்னைப் பாதுகாத்துச் சாவாமை யளித்தனை யாதலின் அவ்விறைவன் போன்று மன்னுகவெனவுமென் றிங்ஙனம் பலகுறிப்புமுட்கொளக் கூறிய நயங் கண்டுபாராட்டற்பாலதாகும். இதன்கண்ணு மதியமான தடக்கம் குறிக்கப்பட்டது.

இப்பாட்டானே அதியமா னெடுமா னஞ்சி நீலமணிமிடற் றொருவனை வழிபடு மடிமையென்பதூஉம் போந்தது.

"பூங்கமல வாவிசூழ் புள்வேளூர்ப் பூதனையு
மாங்குவரு பாற்பெண்ணை யாற்றினையு—மீங்கு
மறப்பித்தாய் வாளதிகா வன்கூற்றை நாவை
யறுப்பித்தா யாமலகந் தந்து"

இஃது ஔவையார் நெடுமானைப் பாடிய வெண்பா.

ஆமலகம் = நெல்லி. ஆமலகம், கமல மென்பன விரண்டும் வடசொல். நீவுதற்குரிய ஆடையை நீவி யென்றாற் போல மீனும் புள்ளு மக்களும் வாவி நீந்துதற் குரிய பொய்கை வாவியென வழங்கப்படும். இது வடமொழிக்கட் சென்று சிதைந்து வழங்கும். வாவுதல் = பாய்தல். "வாவு பரி" யென்ப.

கூற்றுவன் வருங்கால் நாவைமடித்துச் சீழ்க்கை யடிக்கு மென்பதுபற்றி அது நிகழாமையைக் கூறுவார் நாவை யறுப்பித்தா யென்றார். அங்ஙனங் கூறுதல் மகளிர் வழக்காகிய கடுஞ்சொல். பூதனும் யாறும் என்னநன்றி செய்தனரோ?

இங்ஙன மௌவையார் பழஞ் சுவைத்து மகிழப் பாட்டுச்சுவைத்து மகிழ்ந்த அதியமான் பாட்டின் சொற்சுவை பொருட்சுவைகளை வியந்து கொண்டாடினான்.

கரும்பயிலக் கூலிகொடுக்குந் தோன்றலது பெருந் தகைமையுந் தம்பெருமித மின்றிப் பணிவுடையராதலுந் தோன்ற வோரினிய செய்யுள் பாடினார். அச்செய்யுள் வருமாறு.

"யாமொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்
கருள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை
யென்வாய்ச் சொல்லு மன்ன வொன்னார்
கடிமதி லரண்பல கடந்த
நெடுமா னஞ்சிநீ யருளன் மாறே"

(புறம். 92.)

இதன்கண் ஔவையாருடைய அடக்க முடைமையும் அதியமானுடைய அருளுடைமையும் இன்புறற்பால.

இச்சான்றோ ரிருவருந் தமிழர்க் கணிகல மாவர்.

---

## எழினிசே யெழினி.

இத்தகைய வள்ளற் றலைவற்கு நெடுநாட்பிற் கற்பின் கொழுந்தாகிய நாகையார்பாற் செல்வமகன் பிறந்தான். அவன் பெயர் பொகுட்டெழினி யென்பது, பொகுட்டு= மலை. பல மலைகட்குத் தலைவ னாகிய வெழினியென்ப தட்பெயர்ப் பொருளாகும். அன்றி மலைபோலக் கலங்காது நின்று பகைவர்களைப் புறக்கொடைகாணு மெழினியெனக் கருத்துக் கொள்ளினுங் கொள்ளலாம்.

தனக்கு மகன் பிறந்த போது, போர்க்களம் புக்கிருந்த நெடுமான் விரையவந்து மகவைக் கண்ணுற்று மகிழ்பூத்துச் செய்வ செய்துவிட்டுப் போர்க்களம் புக்கான். இவன் தவ

மகன் பிறந்தது கண்டவாற்றை ஒளவையார் புகழ்ந்து பாடியுள்ளார்.

வாழையடி வாழையாகப் புலவர்களைப் 'பாதுகாத்தற் பொருட்டு வேண்டப்பட்ட மகனாலே புலவர்களி னெண்ண மும் அதியமா னெண்ணமும் நிறைவெய்தின.

தாயார் நல்லிசைப் புலவர்; தந்தையோ புலவர் தோழன். ஆருயிர்ச் சுற்றமோ புலவர். இங்ஙனமாக அதியமான் மகன் பொகுட்டெழினி தன் குடிப்பிறப்புக் குரிய வள்ளன்மையு மாண்மையும் பொறுமையுமேயன்றிக் கல்விப் புலமையுங் கட்டிளமையிலேயே நிரம்பப் பெற்றி ருத்தல் வேண்டுமென்பது சொல்லாமே பெறப்படும்.

அடுத்தடுத்துப் பழுமரத் தீண்டும் பறவைபோலப் புலவர் பலரும் வந்து மொய்த்துப் பலப்பல பாட்டு முரையு முழங்கு மிடத்திலே பொகுட்டெழினிக்குக் கேள்வியுணர் வெய்துதற்குக் குறையில்லை.

இங்ஙனங் கல்வி கேள்விகளிற் சிறந்து வளரும் பொகுட்டெழினிக்கு இயல்பாகிய அடக்கமு மொழுக்கமு நன்கு நிலைபெற்று வளருமென்பதற்கோ ரையுறவில்லை.

எல்லா நலங்களானுந் தந்தை தாயர், புலவர், பொது மக்களெல்லாரையு மகிழ்வித்து வந்தான் பொகுட்டெழினி.

இவன் றந்தை போன்றே யிவனுந் தமக்குக் களை கணாவா னென்பதனை யிவனதிளமையிலே கண்டு மகிழ்ந்த னர் புலவர் "விளையும் பயிர் முளையிலே தெரியும்:" "தொட்டிற் பழக்கஞ் சுடுகாடு மட்டும்:"

"செந்நெல்லா ளுயை செழுமுளை மற்றமச்
செந்நெல்லே யாகி விளைதலா — னந்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவய லூர!
மகனறிவு தந்தை யறிவு"

(நாலடியார். 367) என்றாங்கே அதியமான் மகன் அதியமானின் வேறுவ தெங்ஙனம்?

அஞ்சியுந் தன்மகனை மணமெய்துவிப்பதன் முற்றுறவே கற்பவெல்லாங் கற்கச் செயல் வேண்டுமென்னும் வேட்கையானே அவனை வேறு தொழிலிற் புகவிடாது கற்கச் செய்து வந்தான். அங்ஙன மன்றாயிற் பின்பு கற்பதற்குச் செவ்வி தலைப்படாது போம்.

"ஆற்று மிளமைக்கட் கற்கலான் மூப்பின்கட்
போற்று மெனவும் புணருமோ — ஆற்றச்
சுரம்போக்கி யுல்குகொண்டா ரில்லையே யில்லை
மரம்போக்கிக் கூலிகொண் டார்"

என்னும் பழமொழியை நன்குணர்ந்தவ னதியமான்.

"இளையா னடக்க மடக்க" மென்பதற் கெடுத்துக் காட்டாகித் திகழ்ந்தான் பொகுட்டெழினி. ஒரு முறை ஔவையார் நகைச்சுவை படப் பாடிப் பொகுட்டெழினியின் அடக்கத்தையும் ஆண்மையையும் பாராட்டிப் பாடிய பாட லறிந்தின்புறற்பாலது. அப்பாட்டு வருமாறு.

"அலர்பூந் தும்பை யம்பகட்டு மார்பிற்
றிரண்டுநீடு தடக்கை யென்னை யிளையோற்
கிரண்டெழுந் தனவாற் பகையே யொன்றே

பூப்போ லுண்கண் பசந்துதோ ளுநுகி
நோக்கிய மகளிர்ப் பிணித்தன் றொன்றே
விழவின் றாயினும் படுபதம் பிழையாது
மையூன் மொசித்த வொக்கலொடு துறைநீர்க்
கைம்மான் கொள்ளு மோவென
வுறையுண் முனியுமவன் செல்லு மூரே''

என்பது (புறம் 96)

பொகுட்டெழினிக் கிருபகை யெழுந்தனவாம்; ஒன்று: அவன் தன்னைக் கண்ட மங்கையர் காமுறத் தான் காமுறாமையிற் பிணங்கி முனிந்த அம்மெல்லியன் மகளிரோ டுண்டாய பகை. மற்றொன்று: அவன் றான் சென்று பொருது வென்றுகைக் கொள்ள நினைத்த பகைவ ரூரோ டுண்டாயது. எனவே பொகுட்டெழினி பகைவர் வழிப் படாதது போன்றே மகளிர்வழிப் படாதவ னென் பது பெறப்படுகின்றது. இங்ஙன மிருபாலார் பகையையும் வெல்லு மிருபே ராண்மையு மொருங்குவாய்ந்த பொகுட் டெழினி புலவரும் பொதுமக்களும் நல்கும் புகழ்க்கும் வாழ்த்துக்குஞ் சிறப்புக்குந் தகுதியுடையவ னாயினன்.

நெடுமா னஞ்சிக்குக் கல்வி யார்வமும் கல்வி சான்ற மனைவியும் கல்வி சான்ற புதல்வனுமென் றிங்ஙன மெல்லாம் வாய்ந்திருத்தல் பிறவிடத்துக் காண்ட லரிது

இஃதவன் புலவரை வழிபட்டு வருவதன் விளைவே யாம்.

புலவர்கட்கு வழிபாடு செய்வதனு லிறைவன் றிருவரு ளெளிதிற் கிடைக்குமென வேளைக் குறுமன்னரும் நெடு முன்னரும் பிறரும் வியந்து தம்மு ளுரையாடிக் கொள்வர்.

மக்களாகப் பிறக்கி னெடுமா னஞ்சிபோற் பிறத்தல் வேண்டும்; இன்றேல் விலங்காகப் பிறத்தலே மேலாகு மெனப் புலவர் பிறர்க் கெடுத்துக்காட்டி யிடித்துரைப்ப.

"எல்லார்க்கு நன்றும் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து"

(முப்பால். அடக்கமுடைமை. 5) என்றவாறே செல்வன் மகனாகிய பொருட்டெழினி தான் சான்றோர்மாட்டெல் லாம் பணிவுடையனாதல் செல்வத்தின்மேல் வேறுமொரு செல்வமாகத் திகழ்ந்தது.

இங்ஙனம் பிறப்புச்செல்வம், கல்விச்செல்வம், கேள் விச்செல்வம், பொருட்செல்வம், கொடைச்செல்வம், வென்றிச்செல்வம், புகழ்ச்செல்வமென் றின்னபல செல்வ மெய்திய பொருட்டெழினி தன் றாய்தந்தையர்க்கே யன்றி யேனையெல்லார்க்குந் தான் செல்வமா யிருந்தான்.

மணச்செவ்வியுற்ற மகற்கு மணஞ் செய்வித்துப் பார்த்து மகிழ்தல் வேண்டுமென அதியமான் அவாயினான். தனக் கொருமகன்; தானோ அடிக்கடிப் போர்த்தொழிலி லீடுபட் டொழுகுவதனானே தன் னிலையாமையையு மெண்ணக் கடவன்; மகனும் போர்விழைந்து நிற்கின்றனன்; இங்ஙனம் பலவுமெண்ணி நோக்குந் தந்தை தன் னருமை மகற்கு விரைய மணஞ் செய்வித்தலை விழைதலியல்பே.

அவனிவ் வெண்ணத்தினைத் தன் மனைக்கிழத்தியார் வயி னுரைத் தசாயினன்.

அவருந் தம்மகன் மணங்காண்டல் விழைவுடைய ராயினுந் தந்நுண்ணுணர்வாற் சொலற்பால சொல்லுவ ராயினர்.

நம்மகற்கு நாம் மணஞ்செய்வித்தன் முறையன்று; அவனே தனக்கேற்ற வாழ்க்கைத் துணைவியைக் கண்டு தேர்ந்துகோடல் வேண்டும்; அதுவே யவனுக்கும் நமக்கு மிக்க மகிழ்வு பயப்பதாம். அவனு மவ்வாறே செய்து கொள்வான். எல்லா மூழ்வினை யிருந்தவாறே யவ்வந் நேரங் காலம் வந்தா லொருவர் முயற்சியும் வேண்டாமே தாமே முடிந்துவிடும். நமக் கவ்வாறுதானே யமைந்தது; நாமேன் அது பற்றி நினைவுகோடல் வேண்டுமெனச் சொல்லிவிட்டுத் தமிழ்ச்செய்யுளின் நயங்களை யெடுத்துக் காட்டி மகிழ்வித்து மகிழ்ந்தனர். அதற்கிடையே ஒரு புலவர் பரிசிறகு வந்துளாரெனக் கேட்டான்; அஃதறிந்து களிகொண்டு அப்புலவரையு மங்குவரச்செய்து வரவேற் றுப் புலவரோ டிருவரு மளவளாவி யின்புற்றனர்; அப்பொழுதுதானே தன் படைத்தலைவன் வந் தேதோ சொல்லலு முடனே போர்க்களம் புறப்படக் கோலங் கொள்ள லாயினன்.

கோலஞ்செய்து புறப்படாநிற்புழி யான் போருக்குப் போய் மீண்டுவருங்காறும் புலவ ரிங்கிருத்தல் வேண்டும். புலவருடைய பொக்கணங்களை வாங்கிவைம்மின்; அவர் கேட்பினுங் கொடுத்தல் வேண்டாவெனப் பணித்து விட்டுப் போர்க்களம் புக்கான். தான் வென்றுகொணரும் யானை, குதிரை முதலியவற்றையெல்லாம் புலவர்க்குப் பரிசி

லளித்தல் வேண்டு மென்னு மவாவினனேயே நெடுமா னங்
னனங் கூறிச்சென்றான்.

அதியமான் போர்க்குப் புறப்படுங்காற் பெரும்பான்
மையுந் தன் மகனை யில்லத்து வைத்துவிட்டுப் போவது
வழக்கம்.

அவனில்லம் புலவ ரிடைவிடாது வந்து போகும்
பொதியிலாதலிற் புலவரைப் பேணவும் புலவர்பாற் கல்வி
நுண்பொருளை யுணரவுந் தன்மக னில்லத்திருத்தல் வேண்
டுமென்பதுதா னவ னெண்ணம்.

நெடுமா னஞ்சியாதல் அவன்மகன் பொகுட்டெழினி
யாத லில்லா திருப்பிற் பரிசில் பெறுவான்வந்த ஒளவையா
ரொழிந்த ஆண்பாற்புலவர் பரிசில்பெறாது மீண்டு சென்று
விடக்கூடும். அவ்விருவரு மங்கிருப்பினு மில்லாதொழியினும்
புலவர்க்கு வேண்டுமளவு பரிசில் கிடைப்பத் தடையில்லை
யாயினும் பெரும்புலவர் அவ்விருவரு ளொருவரு மில்லா
மல வாங்கும் பரிசிலைப் பெறவிழையார். அவர்தம்மோ
டளவளாவித் தங் கல்விப்புலமைகண்டு மகிழ்ந்து நேர்நின்று
கொடுக்கும் பரிசிலையேபெற விரும்புவர். மற்றைப் பரிசிலை
வாணிகப் பரிசிலென விகழ்ந்து வாங்கார். முன்னொரு
முறை அதியமான் றம்மைக் காணாது வரவிடுத்த பெரும்
பரிசிலை யிகழ்ந்து புறப்பட்டுவிட்டனர் பெருஞ் சித்திரனா
ரென்னும் புலவர். அதுமுதற் றிருட்டுப் புலவர் யாரையுந்
தானே கண்டுகொடுத்து வருவன் அதியமான்.

அஞ்ஞான்றைப் புலவர்க்குப் பரிசி லளிப்பதே தொழி
லாகப் பூண்ட புரவலர் பலர் வாழ்ந்தமையானே தமக்கு
வரிசையின்றிக் கொடுக்கும் பரிசிலைப் புலவர் வேண்டாது
மீளினு மவர்க் கொருமுறையு முறாது.

இவ்வாறு மனையகந் தங்கிய பொகுட்டெழினி தன் அன்னையார் புலவரோடு தமிழாராய்ந்து கொண்டிருக்குங்காற் றானு முடனிருந்து தமிழாராய்வான். இடையே தன் மணச் செய்தியைப் புலவர் மகிழ்ந் துசாய்வாரத்தலைப்பட்டா ராயின் அவணங்கு நிற்கமாட்டான்; மிக்க நாணமுடைய வன்.

ஔவையார் வந்து விட்டாற் போதும். யான் இன்ன தற்காகப் போய்வருவேனெனக் கூறி விடைபெற்றுப் புறப் பட லுறுவான் பொகுட்டெழினி.

ஒருநாள் அவன் ஔவையார்பால் யான் இன்று போர்க்குப் போகல் வேண்டுமெனப் பொய்யுரைத்தான்; அதற்கு ஔவையார் "நல்லது யான் வருங்காற் பெரும் படை திரண்டு நிற்பக் கண்டேன். இன்று நினக்கு வெல் லுத லரிதாயிருக்கு மென்றனர்; அவர் குறிப்புணர்ந்து நாகையார் புன்முறுவல் பூப்ப அஃதுணர்ந்த வவன் யா னதியமான் மரபின னல்லனோ வெனச் சொல்லி அன்றொரு வாறு தன் வெட்கத்தினின்றுந் தப்பித்துக் கொண்டான்.

வேறொரு நாளினே யெழினி ஔவையார்பால் "இன்றியான் வேட்டைபோய் வருவென் விடை தருக" வென மெய்யே யுரைத்தான். "இன்றெனக் கியாது கொணர்தி" யென வவர் வினயினராக அதற்கவன் "நுமக் கின்று சிறந்த யானைப்பரிசில் கொணர்வ" லென்ன, ஔவையார் "நின்வேட்டம் வாய்ப்ப தாகுக; அவ்யானை நினக்கே யுரித்தாகுக" வென வாழ்த்தினர். அவரது குறிப்புப்பொரு ளுணர்ந்து கொண்ட வெழினி நாணி முகங்கவிழ்ந்து சென்றான். அதுமுதல் ஔவையார்பால் யாது கூறியுந் தப்ப நினையானாகி வாளா வொடுங்கி நிற்பன்.

இங்ஙனம் பொருட்டெழினியைக் காண்டலும் ஔவையார்க்கு வழிநடை மெலிவும் பட்டினியயர்வு மெல்லாங் காணுதவாறு தலை குளிர்ந்து விடும்.

பொருட்டெழினி தான் எத்துணை நாணமுடையவனாக விருக்கின்றானோ அத்துணை யெண்ணமிகுதி தான் மணமுடிக்க வேண்டு மங்கையைப் பற்றியதாகவே யிருக்குமவனுக்கு.

என்னை நாணமென்பது காதற்காம மரும்பிய அரும்பேயன்றோ? அவ்வரும்பு மலரத்தொடங்கி நிலையாகிய போதுதான் காமத்தினெழு நினைவு. அந்நினைவின் மலர்ச்சியே காம நுகர்ச்சி. அம்மலர்ச்சி மணத்தொடு புலப்படுவதாம்.

அவன் தான் மணமுடிப்பதாயிற் றன்றாயார் போலவும் ஔவையார்போலவுந் தமிழ்ப்புலமையும் இனிய நற்பண்புகளுமுடைய நங்கையையே மணமுடிப்பது; வனப்புத் தேவையன்று. அங்ஙன மன்றாயின் மணமென்பதே வேண்டா; தாய்தந்தையர் பணிசெய்தலே சாலுமென்பது தான் அவனதாராய்ச்சியின் முடிபு. ஆராய்ச்சிதானே முடிந்து விட்டபிற் பாடும் அவனாராய்ச்சியை முடிப்பதில்லை.

பொருட்டெழினி வேட்டைக் கானகஞ் சென்று வில்வளைத்து வில்லிற் கணைதொடுத்து யானைவரவை யெதிர்நோக்கி யிருப்பான்; அவ்யானை வரும்வரையுங் கொன்னே பொழுதுபோக்காது தன்மணமங்கையைப்பற்றிய ஆராய்ச்சி நினைவோடே தங்கியிருப்பான். அப்பொழுது அவன் இங்ஙனம் நினைக்கும்.

தமிழ்ப்புலமை யில்லாத பெண்ணை மணந்து வாழ்வது பேயோடு வாழ்வதனை யொக்கும். அவளொடு நாடோறு மென்ன வுரையாடுவது? காமம்பற்றிய கட்டுரைதான் எவ்வளவு பொழுது சொல்லிக்கொண்டிருக்க முடியும்! அதுதானுந் தமிழ்ப்பாட் டுரைநயம் போன்றிருக்குமா? எட்டுணையு மிராது. ஆகவே பெரும்பாலும் பொழுதெல்லா மவளோடு வெற்றுரையாடல் வேண்டும்; அது முடியாது போனால் ஒருவர்க்கொருவர் பூசல்விளைத்து வசைமாரி பெய்துகொண்டிருத்தல் வேண்டும். அதனால் விளையுந் தீங்கோ சொல்லொணாதது. அஃதில்லையென்றாற் பிறரோடு வம்புரையாடல் வேண்டும். அதுவும் பெருங்கேடுகளை விளைவிப்பதாகும். கல்லாத மகளிர் தாமேயு மறிந்து நடவார்; அறிந்து சொல்லுவார் சொல்லையுங் கேட்டு நடவார். தாங்கொண்ட கொள்கையை முதலைபோலப் பிடித்துக்கொண்டு விடமாட்டார். பிறரையே மாற்றுதற்கு நினைத்தவுடன் முதலைக்கண்ணீர் விடுவர். தம்மைத்தாம் வியந்துகொண்டிருப்பர். சிற்றின்பத்தின்பொருட்டுத் தம்மைப் புலைய ருற்று நோக்கினு மதனாற் பெருமையுஞ் செருக்குங் கொண்டு அவர்பால் மிக விரக்கப்பட்டு அவர் வேண்டுகோட் கிணங்கவே முனைந்து நிற்பர், பின் விளைவ தெண்ணார். காம நுகர்ச்சியுள்ள சிறுபொழுது தவிர மற்றைப் பொழுதெல்லாங் கவலை யின்றி யின்பமா யிருக்குமுறை யென்ன வென்பதனை யெண்ணிப் பாரார். அவர் தம்மைப் புகழ்ந்துரைப்பார்க்கு வேண்டுவனவெல்லாஞ் செய்வர். தம்போலுங் கல்லாப் பேதைப் பெண்டிர் சொல்லு மாற்றத்தை விரும்பிக் கேட்டொழுகுவர்; தங்கணவ ராடவராதலால் அவருரையையுங் கேளாது புறக்கணிப்பர். வெகுண்டால் அளவு கடப்ப

வெகுள்வர் ; சிரித்தால் அளவு கடப்பச் சிரிப்பர் ; அழுதால் அளவுகடப்ப அழுவர் ; சொன்னால் அளவுகடப்பச் சொல்லுவர் ; ஒரு வரையறையி னிற்க மாட்டார் ; அருவருக்கத் தக்க நகை பலவற்றையு மணிந்து தங்கணவர் கண்ணிற்கு எவ்வாறிருப்பினுந் தங் கண்ணிற் கழகெனத் தாமே நினைத்துக்கொண்டிருப்பர். மூக்கு வழும்பு வடிந்து மூக்குத்தியெல்லா மொட்டி நிரம்பி மூக்குத்தி பாசி பிடித்திருந்து நாறினும் யாரு மோர்ந்து பார்க்கப் போவதில்லையென்னுந் துணிவுடையவர். அவர் தம்மை யென்னகுற்றஞ் சொல்லிக் காட்டினு மவற்றைத் திருத்த நினையாது சிரித்தவளவில் வாளாவிருப்பர். இத்தகைய பெண்களொடு சேர்ந்திருப்பார் இவரினும் பேதைய ராவர். இவர்க் கெங்ஙனம் வாழ்நாள் செல்லா நிற்குமோ? பெண்களொடு கூடுவதென்பது மாந்தர்க்கே சிறந்த அரும் பெருஞ் செயலோ? நாய்க்கும் பேய்க்கு மியல்பானதே. அவ் விழிசெயலைத் தம் பேராண்மையையும் பேரழகையும் விளக்குவதெனமடவோர் நினைக்கின்றனர். அது தம் விலங்கின் றன்மையை விளக்குவதென நினைக்கின்றிலர். அவரறிவவ்வளவுதான். தமிழ்ப் புலமையில்லாத மங்கையரை மணப்பவர் எவ்வாற்றானும் வறுமையும் நோயும் பகையும் கவலையு மணப்பவராவர். கல்லா வாடவர் கல்லா மகளிரை மணந்து வாழ்க. யான் புலமையில்லாதவளை மணஞ் செய்தவில்லை யென்ப துறுதியானதே; யென விங்ஙனம் நினைந்து கொண்டிருப்பான். ஆயிடை யானை பல வந்துபோகும் ; அவை யிவனுக்குப் புலனாவ தில்லை; இவனை யவ் யானை அஞ்சுதலு மிலலைத்தாக்குதலு மில்லை. நடுகல்லென நினைத்திருக்கும்போதும், இங்ஙனஞ் செவ்வி வாய்த்த பொழுதெல்லா மங்கையருடைய நன்மையோ தீமையோ நினைந்து

முடிவு செய்யாதிருப்ப தில்லை யெழினி. கல்வியாற் காமத்தை யடக்கியாள்வோர் தகாத மகளிரைக் காமுறு மையின் அவரின்னன மாராய்த லியல்பேயாம்

தமிழ்ப் புலமையுந் தன்பாற் காதலுமுடைய மங்கை தன்னினத்தைச் சார்ந்தவ ளல்லளாயினு மவளையே மணஞ் செய்துகொள்ளல் வேண்டு மென்பதுதான் எழினியி னுளக் கிடை. ஆனா லவன் பேரர்க்கஞ்சாத மள்ள னாதலானும் தந்தையி னாட்டுக்குத் தலைவ னாதலானும் தான் விரும்புங் காதலி அவள் தந்தைக் கொருமகளாக அவனும் பெருஞ் செல்வமுடையவனாய் அவன் செல்வமெல்லாந் தனக்கே கொடுத்து மகட் கொடுத்தல் வேண்டுமென நினைப்பதில்லை.

அதியமான் மரபிற் பிறந்தவரெல்லாரு மெப்பொழுது முன்னேற்றமாகிய சீர்திருத்தத்தினையே யாராய்பவர். ஆராய்வதனோடன்றி யாராய்ந்தவாறே செய்தலுந் துணிவர்; தம்மைச் சார்ந்தோரையு மங்ஙனமே செய்விப்பர். தம் முன்னோர் வழக்க மென்பதற்காக யாதனையும் விடாமற் பற்றியிருக்க வேண்டு மென்னு மெண்ண மதியமான்களுக் கில்லை. இத்தகைய பேரறிவில்லையானா லதியமான் மரபி னர்க் கிவ்வளவு தலைமையும் வெற்றியும் புகழு மின்பமு மெய்த முடியாவல்லவா?

பொருட்டெழினியி னெண்ணம் ஔவையார், நாகையார், நெடுமானஞ்சி முதலிய பலர்க்குந் தெரிந்திருந்தது.

அதனா லவன் மணத்தைப் பற்றி யாதுஞ் சொல்லிக் கொள்ள மாட்டாதிருந்தனர்.

கொல்லி மழவருள் அதியமான் மரபைச் சார்ந்தவ ரல்லாத மழவரெல்லாம் பெரும்பாலுங் கல்வியில்லாதார்; ஆறலை கள்வர்; ஆடவரே யங்ஙனமாயி னல்லிசைப் புலமை மெல்லியலார் கிடைத்த தெங்ஙனம்? அதனாற் பொகுட் டெழினி யிங்ஙனம் நீள நினைக்கவேண்டியதாயிற்று.

பொகுட்டெழினி யன்னையாரும் அதியமான் குடியிற் பிறந்த நங்கையின் மகளா ராயினமையானே அவர் நல் லிசைப் புலவ ராயினர். அன்றியின் நெடுமா னஞ்சியும் மணஞ் செய்திரான்; பொகுட்டெழினியும் பிறந்திரான்; அது நல்லிசைப் புலவர் பலர்க்கும் பெருங் குறையாய் முடிந்திருக்கும். இறைவன் றிருவருண் முன்னின்றது.

நெடுமா னஞ்சி தனக்குரிய வேறொரு மலைநாட்டு மருங் கினைப் பாதுகாத்து வருமாறு பொகுட்டெழினியைப் பணித்தான். பொகுட்டெழினி அதற் குடன்பட்டுக் குதிரைமலைத் தகடூரை விட்டுத் தனக்களித்த பொகுட்டி ன்மே லமைக்கப்பட்டிருந்த கோட்டையிலிருந்துகொண்டு படைக்காவலோடு அம்மருங்கினை யாண்டு வந்தான். அங் குப் பொகுட்டெழினிபாற் புலவர்பலரும் போய்ப்பாடிப் பரிசில் பெற்று மீள்வா ராயினர்.

தந்தைபோலவே மைந்தனு மள்ளன்; வள்ளல்; அறி ஞன்; சான்றோனெனப் பொகுட்டெழினி புகழ் நாடெங் கணும் பரவிற்று.

ஒருநாட் பொகுட்டெழினிமேற் பாடப்பெற்ற வொரு பாட்டுவரைந்த மையிதழைக் கொணர்ந்து அவற்குக் கொடுத்தனள் ஒரு பெண். அதனை வாங்கி அதன் கண் வரைந்திருந்த செய்யுளி னினிமையையுந் தன்புகழையு

முணர்ந்து மகிழ்ந்து கீழ்க் கையொப்பத்தைக் காண்டலு மவற் கெல்லையற்ற வியப்புங் காதலும் மகிழ்வு மொருங்கே பொங்கின.

கையொப்பம் இது பாடியது பொருட்பெழினி யம் மான்மகள் பொருட்டிளம் பாவை யென்றிருந்தது. அவளு டைய தந்தை பொருட்பெழினி தாயார் நாகையா ருடன் பிறப்பாளன். இங்ஙனந் தன் னம்மான் மகள் புலமை சிறந்தவ ளொருத்தி யுளளெனத் தானதுவரையுங் கேள்வி யுற்றதில்லை; கேள்வியுற்றிருந்தால் மண்மகளமைப்பு ஆராய்ச்சியி லீடுபட்டு மூளைச்சோர்வும் யாக்கைமெலிவு முற்றிருந் திரான்.

யாவர்க் காயினுந் தன்னினைவு வாய்க்கக் கூடியதா யிருக்குமானால் அதனைப்பற்றிய கவலையுள்ள மதற்கு முன் னர் வருத லியல்பாகாநின்றது

அவள் பொருட்பெழினியின் கல்வி, நற்பண்பு முத லிய சிறப்புக்களாற் கவரப்பட்ட வுள்ளத்தளாய் அவன்மேற் றனக்குள்ள காதற்கிழமை தோன்றவோ ரகத்திணைத் துறைப்பொரு ளமைத் தினியதொரு பாட்டுப்பாடி வரைந்து தோழிகைக் கொடுத் துய்த்திருந்தனள்.

அங்ஙன முளப்பாடு முயற்சியு மின்றித் தலைப்பெய்த நிகழ்ச்சிகண்டு தன்னினைவைக் கடைக்கூட்டிய விறைவன் றிருவருளை வியந்து தொழுதுகொண்டான்.

செய்யுள் கொணர்ந்த தோழிக்கு முகமலர்ச்சி காட்டிச் சிறப்புச் செய்து செலவிடுத்தான். அவளும் நகையரும் பிய முகத்தளாய் விடைபெற்றுச் சென்றனள்.

எழினி தன்மேற் பாடிய தன் னம்மான் மகளின் செய்யுளைப் பாடுவதும் பொருளாராய்வதும் நயங்கண்டு மகிழ்வதுமே தொழிலாக விருந்தான். கற்ரோர் செய்த செய்யுளருமையைக் கற்ரோரே யுணர்வர். மகப்பெறுதலி னருமையை மலடி யறிவளோ ?

வேரென்றினு மவனுள்ளஞ் செல்லவில்லை. காத லின்பங் கைகூடப்பெருதவர்தாம் வீடுபேற்றின்பமே மேலெனக் கூறுவரென வொரு மறுப்புரையுங் கண்டான்; உணவு மறந்தான்; வேட்டை மறந்தான்.

பொருட்டெழினியது நிலைமையை யுள்ளவா றறிய முடியாதவர் இவன் நன்கு கற்றுணர்ந்து புலவர்ப் பேணும் பேரார்வ முடையனுதலிற் றுறவுபூண் டுலகவாழ்க்கையை விட்டுத் தவஞ்செய்யு மெண்ண முடையவனு யிருக்கின்ருனெனச் சொல்லிக் கொண்டனர்.

இன்னண மாகிய வெழினி தான் மணஞ்செய்யு நாளைக் குறித்துக் குதிரைமலைக்குப்போய்த் தகடூரையடைந்து தன் ருய்தந்தையரைப் பணிந் துணர்த்தினன்.

அவரு மிங்ஙனம் நடைபெறுமென முன்னமே யுணர்ந்தவர்க ளாதலின் வியப்பின்றி மகிழ்ச்சி மீக்கூர்ந்தனர்.

ஆயினும் நம் ஔவையார் வந்த பிறபாடுதான் திருமண நாளைத் தேர்ந்தெடுத்தல் வேண்டு மென்பதுதான் அஞ்சிக்கும் நாகையார்க்கு மொருதலையான வெண்ணம். ஆதலால் ஔவையார் வந்தவுடன் றிருமண விழாவை வைத்துக் கொள்ளலாம்; அவர் வந்தவுடன் அவரொடு யாம் வருதுமெனத் தமப்பன்கூற மகனும் உடன்பட்டு விடைபெற்றுத் தந்தை தாயரைத் தொழுது மீண்டான்.

எழினிக்கு மெளவையா ரின்றி மணவிழா மேற் கொள்ளலை விரும்பமாட்டா னென்பது சொல்ல வேண்டுவ தில்லை.

ஔவையாரை யதியமான் இதுபொழுது தொண் டைமா னிளந்திரைய னென்னு மன்னன்பாற் றூதுவிடுத் திருக்கின்றனன். தொண்டைமா னிளந்திரையன் காஞ்சியி லிருந்து காஞ்சியைத் தலையூராகவுடைய தொண்டை நாட்டை யாண்டு வருபவன்; குறுநில மன்னருண் மிக்கவன். ஆயினு மவன் மலையமான் றிருமுடிக் காரிபோல நெடுமுடி புனையு முரிமையுடையவ னானான்.

தொண்டைமா னென்பது குடிப்பெயர். இக் குல முதல்வ னாகிய தொண்டைமான் நாகர்பட்டினத்தை யாண்டுவந்த நாகர் தலைவன் மகளிடம் புகார்ச் சோழன் மாவண்கிள்ளிக்குப் பிறந்தவன்.

இவன் அஞ்ஞான்று காஞ்சிநாட்டை யாண்டுவந்த தொடுகழற் கிள்ளிக்குந் துணையிளங் கிள்ளிக்கும் பின்னர்க் காஞ்சிநாட்டுக்குத் தலைவனாக மாவண்கிள்ளியா லமர்த்தப் பட்டான்.

மாவண்கிள்ளிக்குப் பாணர்மன்னன்மகள் சீர்த்தி யென்பவளிடம் பிறந்த மகன் றான் மணஞ்செயு முன்னரே கொலையுண் டிறந்தமையானும் புகார் கடல்கோ ளுற்றதனாலும் மீண்டுஞ் சோழ மன்னர் உறையூர்க் கோட்டையி னிருந்தே சோழநாட்டை யாட்சி புரியத் தலைப்பட்டனர்.

அதனாற் காஞ்சித் தொண்டைமான் சோழநாட்டிற் பிரிந்துக் காஞ்சி நாட்டுக்குத் தானே தனித்தலைவ னானான். அது முதற்றொட்டுத் தொண்டைமான் முடியுடை மன்

னர்க் குரிய சிறப்பினைப் பெற்றான். சோழனாடு கூறுபட்டது. காஞ்சிநாடு தொண்டைமான் பெயராற் றொண்டைநாடெனப் பெயர் மாற்றி வழங்கப்பட்டது.

தொண்டைமான்வழி மரபினரெல்லாந் தொண்டைமான்களென வழங்கப்படுவர்.

காஞ்சியென்பது போராற் பெற்ற பெயர். வலிந்து போர்தொடுத்த பகைவரை யெதிர்சென்று பொருதல் காஞ்சி யெனப்படும். காஞ்சிப்போர் செய்து வெற்றியெய்திய களத்துப் படைக்கப்பட்ட வூர்க்குக் காஞ்சியெனப் பெயரிட்டனர் தமிழர். அஞ்ஞான்று போர்த்திறம் பற்றி ஊர்கட்குப் பெயர் வழங்குதலு மரபு. வஞ்சி, வாகை நொச்சி யென்னு மூர்ப்பெயர்கள் போர்ப்பெயர்களேயாம். வஞ்சி சேரமான்களி னூர். "கூகைக் கோழி வாகைப் பறந்தலை" என்னுங் குறுந்தொகைச் செய்யுளால் வாகை யெனப் பெயரிய வூருண்டெனத் தெரியவருகின்றது. நொச்சி ஈழ்ப்பாணத்து வழங்கப்படுகின்றது. கீழை நொச்சி யென்பதனை இப்பொழுது ஈழ்ப்பாணத்தவர் கிளி நொச்சி யென வழங்குகின்றனர்.

இத்தூய தமிழ்ச்சொற்பெயராகிய காஞ்சியைப் பல்லவர் துணை பெற்ற பார்ப்பனர் தம் வடசொற்கேற்பப் பொருள் செய்து வடசொல்லெனச் சொல்லி அப்பெயர் வந்த வாற்றிற்குக் கதை படைத்து மலையென நிலைபெறுத்தி விட்டனர்.

அவர் தமிழரிட்ட பெயரைத் தாம் வழங்கினால் தமிழர்க்குத் தாங் கீழாயினவ ரெனப்படுவோம்; அங்ஙனமாகாது தமிழரைக் கீழாயினவ ராகவைத்துக் கொள்ளல்

வேண்டுமென்னு மெண்ணத்தாலும் பிறருடைய வுடைமை யெல்லாந் தம்முடைமை யென்பதற்குச் சான்று காட்டி வருந்தாது வைத்துப் பிழைக்க வேண்டு மென்னு மெண்ணத்தாலும் தமிழரிட்ட எப்பெயர்க்கு மேலே தாமொரு பெயரிட்டே வழங்குத லவர் மரபு. அதை நிலைபெறுத்தப் பதினுயிரத்துக்கு மேற்பட்ட செய்யுட்களையுடைய பெரு நூலாக்கிக் கட்டிமுடித்தலே தொழிலாக வுடையவர். அக்கதையை யாராயுந் தமிழர் கதைச்சுவையிலே மருண்டு தஞ்சூழ்ச்சி தெரியாதவாறு மறைக்கு மவர் திறமை பாராட் டற்பாலதே. அதனுல் தமிழகத்தின துண்மை வரலாறு கெட்டு மறைவதனைச் சிறிது மெண்ணுர். மறைய வேண்டு மென்பதே யவர் நோக்கம். இவர் தங்கொள்கைக்கு அக் காலத் தமிழமன்ன ரிடையூருய் நில்லாமைப் பொருட்டு அவர்க்குப் பூணூலிடுவித்து அவர் தூய ஆரிய மரபினரென் பதற்குப் போதிய சான்றுகளைப் படைத்து விரிவான கதை யொடு கூடிய புகழ்ச்சியாலே அவர்க்கு மகிழ்ச்சி தலைக் கேறச் செய்து அவர்களைத் தம்மொடு கூட்டிக் கொண்டு பல்லவர் முதலிய ஆரியமன்னர் தமிழகம் புக்கவுடன் அவர் பாற் சேர்ந்துகொண்டு தமிழ் மன்னருடைய மரபு வேரொடு தொலைதற்கு வேண்டுவன வெல்லாஞ் செய்து முடித்து விட்டனர். அவ்வளவு மிக்க வாற்றலுடையவர் தமக்குச் செய்யும் பேருதவிகளை மறவாது தமிழர் அவர் களைத் தம்முடைய கடவுண் மக்களாக்கிச் சிறப்புச்செய்வர். செய்ந்நன்றி மறவாமை யென்பது தமிழர்க்குப் போன்று வேறெந்நாட்டார்க்கு மில்லை யென்ப திதனுற் பெறப்படும்.

காஞ்சித் தொண்டைமான் மகனே தொண்டைமா னிளந்திரையனென்பவன். இவன் தன்றந்தை தொண்டை மானுக்குப் பின் தொண்டை நாட்டு மன்ன னுனன்.

மன்ன னிளவலு மகனும் இளங்கோவென வழங்கப் பட்டனர். அதனால் இளந்திரைய னென்னு மடைமொழி மீண்டு மகன்முறைக் குறிப்பின்மே னின்றதெனக் கொள் ளல்வேண்டும். இளந்திரையனுக்குத் தமைய னொருவ னிருந்தானென்னுங் குறிப்பு யாண்டும் பெறப்படாமை காண்க.

கடல்வழிவந்து தமிழகங் குடியேறினோரைத் தமிழர் திரையரென வழங்கினர். நாகர் கீழைக்கடல் வழியாக வந்து தமிழகம் புக்கோராதலிற் றிரைய ராயினர்; நாகருண் முதலிற் றமிழகத்து மன்னனாகியது தொண்டைமானே யாதலின் அவன் திரையனென வேனைமன்னரால் வழங்கப் பட்டனன். இவ்வாற்றானே காஞ்சிமன்னன் தொண்டைமா னிளந்திரைய னெனப்படுவன்.

நாக ரினம் பேராண்மையுடையதோர் வேட்டுவ ரினம். நாகு என்பது ஆவின்பெயர்களு ளொன்று. ஆவின் வயிற்றிற் பிறந்தவன் நாகன். நாகனைச் சார்ந்தவர் நாகர்.

ஆ பலவற்றை முதலிற் பாதுகாத்துப் பேணிவந்த வொருதலைவனையே அம்முறைபற்றி நாகர் முதலில் நாக னென வழங்கியிருத்தல் வேண்டும். பின்ன ரவனை ஆமக னெனப் பிறர் புனைந்துரைத்தது பரவியதாயிற்றுப் போலும். நாகருள் வழங்கிய ஆமகன் கதையைக் கேள்வியுற்றே சீத்தலைச்சாத்தனார் தாம் பாடிய மணிமேகலையில் நாகனாட்டு ஆமகன் கதை கட்டியிருக்கின்றார் இதனானே நாகன், நாகர், எனவழங்குஞ் சொற்பொரு ளுண்மை துணியப் படும்.

இதனை யறியாதவரும் அறிந்தாலுந் தமக்கேற்பக் கதைகட்டி மாற்றுதலே தொழிலாக வுடையவரு மாகித் தமிழர்க்குப்பின் ஞகனுட்டைக் கைப்பற்றியவராகிய ஆரியப் பல்லவரும் கலிங்கரும் தம்மொழிக்கேற்ப நாகர் பாம்படையாள முடையவர்; அதனுல், நாகரெனப் பெயர் பெற்றன ரென வைத்து அவர்க்குப் பாம்புமுடி யடையாளமும் அவ்வடையாளமுடைய மண்ணீடும் படைத்துத் தமிழ்ச் சொற்பொரு ளுண்மை வரலாற்றினை நாகரையுமுட்பட எல்லாரையு மறக்கச் செய்துவிட்டனர். அது முதற்றெட்டு நாகருந் தம்மை யங்ஙனமே சொல்லிப் பெருமை கொள்வா ராயினர். அவ்வாறே யந்நாட்டுப் பாடல்களும் வழங்கலாயின. தமிழின்றென்மை புதையுண்ணுத லாயிற்று. ஆரியர் வருகைக் கெத்துணையோ நூற்றுண்டுகட்கு முற்றெட்டே தமிழரும் நாகருந் தம்முட் டொடர்புடைய ராமெனக் கருதப்பட்டிருந்தனர். நாகுமொழியுந் தமிழ் மொழியைச் சார்ந்ததே. ஆரியாலு மராபியாலு மது மலையாளம்போலத் தமிழ்மொழிக்கு நேர்மாறுயிற்று. தமிழ் மொழியின்பாடே யிங்ஙனமாயின் நாகுமொழியைக் கூறல் வேண்டுமோ?

அத்தகைய நாகர்பாற்பட்ட காஞ்சித்தொண்டைமான் கடியலூர் உருத்திரங்கண்ணனுராற் பாடப்பெற்ற பெரும்பாணுற்றுப்படைக்குத் தலைவன்; தமிழ்ப்புலமை சிறந்தவன்; நூலாசிரியன்; நல்லிசைப்புலவரு ளொருவன்; இவன் பாடியபாடல்கள் புறத்தினும் நற்றிணையினுந் தொகுக்கப்படும் பெருமைவாய்ந்தன.

தொண்டைமானுட்டுக்குள் ஆரியராகிய பல்லவர் ஆங்காங்குப் புகுந்து குறும்புசெய்து வருவதனுல் அவர்க

ளடங்கியொழுகுவதற்காக அவர்களை யாங்காங்குக் குடியேற்றிச் சிலவுரிமைகளு மவர்க்குக் கொடுத்துத் தனக்குத் துணையாக்கிக்கொண்டிருந்தான் தொண்டைமான்.

அஃதுணர்ந்த அதியமா னெடுமா னஞ்சித் தந் தமிழகத்துக்கு வருங் கேட்டையுணர்ந்து பொங்கி ஆரியரைத் துரத்தாது துணையாக்கிக் கொள்வதாயின் மலையமான் கோவலூர்போலத் தொண்டைமான் காஞ்சியு மழிக்கப்படுமென்பதனைச் சொல்லித் தொண்டைமான் கருத்தறிந்து வருமாறு ஒளவையாரை யவன்பா லதியமான் றூது விட்டான்.

அஞ்சியின் சிறந்த கொள்கைக்குத் தொண்டைமானை யிணங்குமாறு சொல்லி அதியமானுந் தொண்டைமானுந் தம்மு ளிகலிப் போர் பொராது தமிழகத்தையுந் தமிழரையுந் தமிழ்மொழியையும் பாதுகாக்குங் கடமையை வற்புறுத்தி வரல் வேண்டுமென் றருள்கூர்ந்தே அதியமான் வேண்டுகோட்கு ஒளவையா ருடன்பட்டனர்.

ஒளவையாரைத் தூதுய்த்தலாலே காஞ்சியை யெறியுங் கருத்து அதியமானுக்கில்லையென்பது தெளிவாகின்றது. தொண்டைமானை யெவ்வாற்றானுந் தன் கொள்கைக் கிணங்கும் நட்பாள னாக்கிக் கோடல்வேண்டு மென்பதே அதியமானோக்கம். தொண்டைமா னில்லையானாற் பல்லவரைச் சிறிதுந் தடுக்க வியலா தென்பதனையுந் தொண்டைமான் பல்லவரோடு சேர்ந்துவிடக்கூடு மென்பதனையு மதியமா னுணராதவ னல்லன். அன்றியுந் தன் பெரும் பகைவனாகிய சேரமானுக்குத் தொண்டைமான் றுணையாய் விடா

மனும் பார்த்துக் கொள்ளல் வேண்டும். இவ்வெல்லாவற்றையு மெண்ணியே தொண்டைமான்பாற் றூது விடுத்தற்கு ஔவையாரை அதியமான் றேர்ந்தெடுத்தது அவனது நுண்ணறிவை விளக்குவதாகும்.

ஔவையார் தூது போனது அதியமான தேவல் செய்ததாகாது. ஆளுடை நம்பியார்க்குத் திருவாரூர் வள்ளலும் பாண்டவர்க்கு நம்பி மாயோனும் போலத் தானவனென்னும் வேற்றுமை யில்லாத தலையன்பிற் கட்டுண்ட கெழுதகைமையானே தூது போன தாகலிற் புலவர்க்கிழிதகவன்று. அதியமான் புலவரைத் தூதுவிட்ட தறிந்த சேரமானு மதியமான்பாற் புலவ ரிருவரைத் தூது விட்டதீண்டு நினைக்கத் தக்கது அன்றியுந் தூதுரைத்தற்குப் புலவர்போலப் பிறரெவரு மத்துணைச் சிறந்தவ ராகாரென்ப தக்கால மன்னர்களின் கொள்கை.

இதனால் அதியமானோடு ஔவையாரிடை நிலவிய நட்புரிமை யெத்துணைச் சிறந்ததென்பது புலனும்.

அதியமான் றூதுவரென்ற முறையிலும் நல்லிசைப் புலவரென்ற முறையிலுந் தன் புலமைக்கும் வள்ளன்மைக்கு மேற்ற முறையிலுந் தொண்டைமான் ஔவையாரை நன்கு வரவேற்றுப் பேணிப் பல சிறப்புக்களானு மகிழ்வித்தான்.

தூதுவருந் தொண்டைமானு மொருமுறைக் கோயிலில் உலாய்க்கொண்டே யுரையாடுகின்றுழித் தூதுவர்க்குத் தன் படைக்கலக்கொட்டிலைக் காட்டித் தன் னாற்றலைக் குறிப்பித்தான் தொண்டைமான். அவன் குறிப்புக் கண்ட

தூதுவர் அக் கொட்டிலைப் புகழ்ந்துரைப்பார் போலத் தந் தலைவன் அதியமான தாற்றன் மிகுதியுந் தொண்டைமான தாற்றற் குறையுங் குறிப்பாற் பெறப் பாடியுணர்த்தித் தொண்டைமான் வெள்கித் தலைகவிழச் செய்து தந் தூதின் சிறப்பை நிலை நாட்டியது உலகிலுள்ள மன்முறைத் தூதுவ ரெவர்க்கு மில்லாததொரு புதுமையேயாம். அவரங்ஙனம் பாடிய பாட்டிது.

"இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிர ணோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ வென்று
முண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயி னுடனுண்ணு
மில்லோ ரொக்கற் றலைவ
னண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே"

(புறம். 95)

தொண்டைமான் படைக்கலம் நெய் பூசிப் பீலி யணிந்து மாலை சூட்டிச் சிறந்த பாதுகாவலிற் பளபளப்பாக வைக்கப்பட் டழகு பெற்று மிளிர்கின்றனவாம். அதிய மான் படைக்கலமெல்லாங் கூர்மழுங்கிக் கதுவாய் போகித் திருத்துதற் பொருட்டுக் கொல்லன் பணிக்களரியாகிய குற் றிலிற் கிடக்கின்றனவாம். அதனோ டமையாத தூதுவர் அதியமானை யெங்ஙன மன்பொழுக எதிர்பாற் பாராட்டு கின்றார்! இராமன் றூதுவ ருரையும முருகக்கடவுளின் றூதுவ ருரையு மிங்ஙனஞ் சுருங்கிவிளங்கும் பெற்றியிலவே; அத் தூது கேட்ட விருவருந் தொண்டைமான் போலும்

புலவரல்லராகலின் அவர்க் கிங்ஙனஞ் சொல்லிற்றிலர் போலும். ஒளவையார் தூதுரைக் கீடாவது கதையினு மில்லை.

இத் தூது, நட்பு, அவா, அச்ச மென்னு மூன்றனு ளொன்று பற்றி யாயினுந் தூதியல் வழீஇவிடாமற் பாது காத்த வளவிற்றன்று. ஒப்புயர்வற்றுத் தலை சிறந்தது.

தாம் பெண்பாலா ராயினு மாண்பாலா ரெவர்க்கு மில்லாத் தறுகணாண்மை யிருந்த வா றென்னே!

பெண்பாலார்க் காண்மையில்லை யென்போர் மடவோ ரென்பதனை மெய்ப்பித்தனர் ஒளவையார்.

ஒளவையாரானே தமிழ்ப்பெண்டிருடைய சிறப்பு ஏனைநாட்டுப் பெண்டிரெல்லாருடைய சிறப்பினு மிக விஞ்சிற்று.

கூற்றா னுணர்த்துதலினுங் குறிப்பா னுணர்த்துதலே யறிஞரைப் பிணிக்கவற் றென்பதனைக் கண்டு துறைபோன சொல்லின் செல்வராகிய ஒளவையார் தனக்குக் குறிப்பா னுணர்த்தவே புலமைமிக்க தொண்டைமான் வெள்ளினு ளுயினும் அவரது திறமையை நினைந்து நினைந்து பாராட்டிக் கொண்டான். இனி, அவன் அச்சொல்வல்லார் பணியைக் கடக்கவல்லனோ?

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவார்க்கு ஞாலம் விரைந்து தொழில்கேட்கு மாயிற் றொண்டைமான் ஒளவையார் பணிதலைநின்றது வியப்பன்று.

அத்தகையாளரைத் தேர்ந்தெடுத்துத் தூதுவிட்ட அதியமானைத் தொண்டைமான் பாராட்டிக்கொண்டான்.

அவன் றாதுவரை வேண்டுமளவு பொன், றாசு, அணிகலமுதலியன நல்கிச் சிறப்புச்செய்து யானை, தேர், குதிரை, காலாள் என்றிந் நாற்படையுஞ் சூழும் வரிசையோடு பின்னடந்து வந்து வழிவிட்டு விடைபெற்று மீண்டான்.

ஔவையார் தொண்டைமானை வாழ்த்துரைகளான் மகிழ்வித்துத் தம் படைசூழ மீண் டதியமானை யடைந்தார். இவர் வெற்றியோடு மீள்வதனை முன்னமே யொற்றுவாயிலாக வுணர்ந்த அதியமான் மிக்க கொண்டாட்டத்தோ டெதிர்சென்று தூதுவரைக் கொணர்ந்து சிறப்புச்செய்து பெருமிதத்தோடு வீற்றிருந்தான்.

அவன் றன் ஔவையாரைத் தூதுவிட்ட தன் பெருமையையும் ஔவையார் தூதின் பெருவென்றியையுமெண்ணி யெண்ணி மகிழ்ச்சியானை உடம்பெல்லா மலர்ச்சி பூத்தான்

இற்றைக் கிரண்டாயிரம் யாண்டுகட்கு முன்பே பெண்டிரும் ஆடவர்போலவும் ஆடவரின்மிக்கு மரசியற்றொழிலைத் திறம்பட நடாத்துதற்குத் தகுதியுடையரெனக் கண்டமக்கள் செந்தமிழ் மக்களேயாம்.

வையக முழுதினு மரசியல் வினையேற்று நடாத்திய முதற்பெண்மணி ஔவையாரே.

வையக முழுதினும் பெண்ணிற்கு அரசியன் முதன்மைத்தொழில் நல்கிய முதன்மன்னன் அதியமா னெடுமானஞ்சியே.

வையக முழுதினு மரசியற்ருெழின் மேற்கொண்ட பெண்பாலாரை வரவேற்றுச் சிறப்புச்செய்து அவரது கட்டளைமருத முதன்மன்னன் ருெண்டைமா னிளந்திரையனே.

இங்ஙனம் பெண்டிரையு மாடவரோ டொருபாலென்று நேர்நிகராகக் கொண்டாடிய பெருமை தமிழகத்தினுடையதேயென் றிவ்வாறு தமிழரு மற்றைநாட்டினரும் வியந்து புகழ்ந்தார்கள்.

இதனைக் கேட்குந்தொறு மதியமானுக்கெழுங் களியளவிடற் பாலதன்று.

முன்னரெல்லா மௌவையார் ஊர்தொறுந் தெருத்தொறு மெத்தனையோமுறை போய்வருவர். அவரை யேறட்டுப்பார்ப்பார் மிக அரியர். அரசியலி லீடுபட்ட பின்பு அவரைப் பார்க்க எண்ணற்ற மக்கள் வந்து பார்த்து மகிழ்ந்து போவர். ஔவையார் வருகின்ருரென்ருற் பார்க்கப் பதினுயிரத்துக்கு மேற்பட்டார் குழுமிவிடுவர்.

இனிமேற் பொருட்டெழினி திருமணத்துக்குத் தடையின்று திருமணத்திற்கு யார்வந்தாலும் வராவிட்டாலும் ஔவையார் வரல்வேண்டுமென்பதுதா னதியமா னெண்ணம். அவரும் வந்துவிட்டார்.

மண நிகழ்ச்சிக ளெல்லாம் நன்கு நடைபெற்றன. புலவரெல்லா மழைக்கப்பட்டனர். அழையாமலே வரும் புலவர்க் கழைப்புவந்தாற் சொல்லவாவேண்டும்.

ஊர்ப்பார்ப்பாராலே மணவிழா நன்கு நடாத்தப் பெற்றது.

ஔவையார் முதலில் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர் பின்பு புலவரெல்லாந் தனித்தனி வாழ்த்துரை வழங்கினர்.

விழாவிற்கு வந்த புலவர்க்கும் இரவலர்க்கும் உறவினர்க்கும் முடிமன்னர்க்கும் பிறர்க்குமொப்ப முப்பழம், பால், நெய், தேன், பாற்சோறு முதலியவற்றோடு பலநாள் விருந்து நடைபெற்றது.

புலவர்க்கும் இரவலர்க்கும் விருந்துணவோடு வேண்டு மளவு பரிசில்களுங் கிடைத்தன

எல்லாரும் அதியமான் ஔவையாரைத் தூதுய்த்த அருஞ் செயலையும் அவர் தூதுபோய் மீண்டவாற்றையும் மணமக்களின் றகுதியையும் பாராட்டி மகிழ்ந்துகொண்டே மீண்டேகினர்.

ஔவையாருந் தமக்குற்ற வேறு கடமைகளையும் பார்த்துவர அதியமான்பால் விடைபெற்றுக்கொண்டு அவன் தம் பிரிவாற்றுது கண்கலங்கப் புறப்பட்டுப் போயினர்.

பொகுட்டெழினியும் பொகுட்டிளம்பாவையுங் காதற் சுவையொடு தமிழ்ச்சுவையு மாந்தி யின்புற்றுத் தம் நல்

வினையை வாழ்த்திப் புலவர்க்கும் பிறர்க்கும் பற்றுக் கோடாகி யிறைவன் றிருவருட் குரியராய் வாழ்வாராயினர்.

பொகுட்டெழினியுந் தன் றந்தைக்குப்பின் மிகப் புகழோங்கத் தன் னாட்டை யாண்டுவந்தான். பல போர்களை வென்று புலவர் பாடல்பெற்றான்.

அதியமான் மரபினர் இற்றைக் கைந்நூறியாண்டுகட்கு முன்வரையு மிருந்ததாக அம்மரபிற் பிறந்த விடுகாதழகிய பெருமாளென்பவனால் எழுதுவிக்கப்பட்ட கல்வெட்டுச் சான்று கிடைத்திருப்பதனாற் பொகுட்டெழினி நன்மக்கள் பெற்று மகிழ்ந்திருத்தல் வேண்டும்.

பொகுட்டெழினி தன் றந்தைக்குப்பின் றன்னாட்டை யிடையூறு கடிந்து வேண்டுவன செய்யு மூக்கமேற்கொண்டு குடிகளை யின்புறுத்தி மகிழ்வித்துவந்த மரபொழுக்கத்தைக் கண்டு மகிழ்ந்த ஔவையார் பாராட்டி யொருபாட்டுப் பாடினர்.

> "எருதே யிளைய நுகமுண ராவே
> சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே
> யவலிழியினு மிசையேறினு
> மவண தறியுநர் யாரென வுமணர்
> கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன
> விசைவிளங்கு கவிகை நெடியோய் திங்கள்
> நாணிறை மதியத் தனையையிருள்
> யாவண தோநின் னிழல்வாழ் வோர்க்கே"

புறம். 102.)

இப்பாட்டினாற் பொகுட்டெழினி தன்னல னெண்ணாது தன கொற்றவெண்குடைநிழற் குடிகளைப் பார்ப்பைப் பார்க்கும் பறவைபோலப் பார்த்துவந்த தன்மை பெறப் படுகின்றது.

உப்பு வண்டிகளிலேற்றி யூர்தொறுங் கொண்டுய்த்து விற்கு முமணர் தம் வண்டிக்காளைகள் இளமை கழியாதன; வண்டி நுகம்பூண் டூர்ந்துப் பழக்க மில்லாதன; வண்டியோ உப்பு மிகவு மேற்றப்பட்டுள்ளது; வண்டி பள்ளங்களி லிறங் குங்காலும் மேடுகளில் ஏறுங்காலும் அவ்விடங்களில் வண்டியச்சுக்கு யாதேனு மிடையூறு நேரக்கூடும். நேரா தென்பதனை யார் துணிந்தறிய முடியும்; என முன்னமே யுணர்ந்து அச்சு முறியுமிடத்தில் மாட்டியூர்தற்கு வேறோ ரச்சும் வண்டிக்கீழ் வைத்துக் கட்டிக்கொண்டுபோகுமாறு போலப் பொகுட்டெழினியுந் தன் னாட்டுமக்கட்கு நேரக் கூடு மிடையூறுகளை அவை வாராமுன்னரே யையுற்றுக் கடைப்பிடித்து முற்கொண்டு வேண்டுவன நினைந்து செய்து வருதலானே அவனாட்சியின்கண் மக்கள் கவலையின்றி யின்புற்று வாழ்ந்துவருகின்றன ரென்பது பாட்டின் கருத்து.

இங்ஙன மவனைப் பாராட்டிய ஔவையார் தொண் டைமா னிளந்திரையன் பாடிய பாட்டொன்றை நினைந்து சொல்லிப் பொருள்விரித்துரைத்துப் பொகுட்டெழினிய னூக்கத்தை வலியுறுத்து வாழ்த்தி விடைபெற்றனர்.

"கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்
காவற் சாகா டுகைப்போன் மாணின்
ஊறின் றாகி யாறினிது படுமே

யுய்த்த லேற்ற னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே"

(புறம். 185) என்பது தொண்டைமா னிளந்திரையன் பாட்டு.

உலகியற்கையை யுலகிலே நிலைபெறுத்தி நடத்தும் நாடுகாவலாகிய வண்டியை ஓட்டுபவன் நற்பண்பு நற்செயல் களு முய்த்துணர்வு முடையவனாய் மாட்சிமைப்பட்டிருந் தால் அவ்வண்டிதா னிடையூறின்றி வழியே யெளிதிற் செல்லும்; அவ்வோட்டுபவன் அவ்வண்டியைச் செலுத்து முறையை யறியானாயின் எப்பொழுது மவ்வண்டி மாறுவழி யாகிய செறிந்தசேற்றிலே யகப்பட்டுப் புதைந்து மிகப்பல தீய துன்பங்களை மேன்மேற் கொடுக்குமென்பது பாட்டின் பொருள்.

இதனாற் பண்டைத் தமிழரசாட்சிமுறை யெத்துணை மேம்பாடுற்று விளங்கிற் றென்பதும் புலவ ரவ்வாட்சிமுறைக் கெவ்வள வின்றியமையாதவரா யிருந்தன ரென்பதும் விளங்கும்.

அதியமா னெடுமா னஞ்சியி னருளினால் ஔவையார் நீடுவாழ்ந்திருந்தமையானே அவனுக்குப்பின் அவன் மகனுக்கு மவர் நற்றுணையா யிருந்தனர்.

முற்றும்.

புலவர் வாழ்க.

புரவலர் வாழ்க.